

# போர் வெற்றி மாயையும் அபிவிருத்திப் பொய்மையும்

ஏப்ரல் 10 - ஏப்ரல் 16, 2011 April 10 - April 16, 2011 பக்கங்கள் - 28 25.00

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

# சுடர் ஒளி

வார மலர்



## வரட்டுக்கும் பார்ப்பம் புதுவருஷம்

## தசைகளைத் தின்

## புத்தாண்டுடன் இலங்கைக்கு 'கண்டம்'

## கிண்ணம் விழுங்கியவைகள்

# எச்சரிக்கை-எதிரில் நண்பர்கள்

**அரசியல் கலந்த நாட்குறிப்பின் இறுதிப் பக்கங்கள் இவை. இதில் என்னோடு தம்மைக் கலந்து கொண்டவர்கள் விட்டுச்சென்ற, அழிக்கவே முடியாத தடயங்களைப் பதிவு செய்கிறேன்.**

## உயிரின் உருவில் ஒரு நேசம்

இணுவில்- 2006 இலிருந்து என்னை அறிமுகமாக்கிக் கொண்ட கோயில் நிலம். அழகானது. அறிவுமிக்கது. என் ஆத்ம வேகத்தை ஆழப்படுத்திய, அதை இப்போதும் வேகப்படுத்திக் கொண்டிருக்கும் ஆசான் ஒருவர் அங்கிருக்கிறார். அவரது வீடும், உறவினர்களும் தான் 2006 இலிருந்து இக்கணம் வரைக்குமான அறிவை நிரப்பியவர்கள். தரும் உணவுகளில் எல்லாம் அன்பும், அறிவும் நிரம்பி வழிவதை கண்கள் கண்டு கலங்கிய பொழுதுகளும் உண்டு. நான் இல்லாமல் நல்ல சினிமா பார்ப்பதையோ, நல்ல உணவு சமைப்பதையோ தவிர்த்தே வந்தார்கள். அவர்களின் குழந்தைகள் அன்பு என் அம்மாவை விஞ்சியது. ஒவ்வொரு காலையிலும் புறப்படும் போது வாசல்வரை வந்து, நான் மறையும் வரை கையசைத்து வழியனுப்பிப் பார்ப்பார்கள். 'நீ படிச்சு நல்லா வரணும்' இது மட்டும் தான் அவர்கள் என்னிடம் எதிர்பார்த்த ஒரே விடயம்.

## ரகசியங்களை ருசிப்பவர்கள்

வன்னி- கூடப்படித்தவர்கள் போராளிகளான போது பழைய நட்பை மறக்காமல் இப்போதும், நடுஇரவின் பின், தொலைபேசியில் வந்து அன்பை நனைத்துக் கொள்பவர்கள். அவர்கள் இயக்கத்தில் இருக்கும் போது எங்காவது எதிர்பாராமல் எதிர்ப்படுகையில் கட்டியணைத்து, கண்கலங்கி உறவைப் புதுப்பித்துக் கொள்வோம். பிரமிப்பைத் தரும் ஆயுதங்கள் பற்றியும், போரியல் நுட்பங்கள் பற்றியும், திகிலூட்டும் போர்க்களங்கள், மரணமடைந்த நண்பன் எனப்பல கதைகளைச் சொல்லியாறும் ஒரு நண்பனாக அப்போது நானிருந்தேன். இப்போதும் அப்படித்தான். பெரும்பாலும் காவலில் நிற்கும் எல்லா ஆமிக்காரரும் கண்ணயர்ந்த பின்னர், தடுப்பு முகாம்களிலிருந்து அவர்களின் தொலைபேசி அழைப்பு என் தூக்கத்தை கலைக்கும். பொலித்தீன் உறைகளில் சுற்றி மண்ணுக்குள் புதைத்து வைத்திருந்து, நடுநிசிக்கு பின்னர் எடுத்துப் பேசத்தொடங்குவார்கள். வெளியுலகம் பற்றிய அனைத்துச் செய்திகளை நானும், தமது கஷ்டங்கள், பசிகிடிகள், உணர்வுகள் என அனுபவிக்கும் அனைத்தைப் பற்றியும் அவர்களும் பகிர்ந்து கொள்வோம். அதிகம் தமிழ் சினிமா, ஏ.ஆர்.ரஹ்மான் நம்தொலைபேசி கட்டணங்களை அதிகம் எடுத்துக் கொண்டவர்கள். என்னை அசத்திவிடும் ஆற்றல் மிக்க நண்பர்கள் கொஞ்சப் பேர் எப்போதும் நினைவிலிருப்பவர்கள் மனக்குழப்பங்கள், பொருளாதார கஷ்டங்கள் தனிப்பட்ட பிரச்சினைகள், நோய்கள் என நான் தாக்கப்படும் போதெல்லாம் தாமாக உணர்ந்து விடுவார்கள். எப்படியாவது ஆறுதலளிக்கும் வார்த்தைகள் காற்றில் வரும். எப்படித்தான் அறிவாரோ? 'எம்பதி' எனும் ஒத்தவுணர்வு எமக்கிடையே அதிகம். நான் நினைப்பதை அவர்கள் சொல்வர். என்னை விமர்சிப்பதை இவர்கள் தவிர்ப்பதே யில்லை.

## புத்திசாலித் தனத்தின் வன்முறை

எனக்கொரு பேராசிரியர் கிடைத்தார். ''எனக்கு எல்லா பிள்ளைகளும் சமமானவர்கள். யாரும் வேறுபட்டவர் அல்லர்'' ஒவ்வொரு நாளும் கற்பித்தலை தொடங்கும் போது முதல் பாடம் இது தான். ''எனக்குப் பல திறமை உள்ள மாணவர்களைப் பிடிக்காது என்துறையில் அதை அனுமதிக்கவும் மாட்டேன்''. ஒரு பொது நிகழ்வில் மாணவர் சார்பாக பேசிய வேறு துறைப் பேராசிரியருக்குப் பதிலாக இவர் முன்வைத்த கருத்து. என்னில் எப்போதும் தனிக் கவனமாயிருப்பார். அவர் எழுதிய அனைத்துப் புத்தகங்களையும் வாசித்து, ஒரு புத்தத்தில் உள்ளதை தான் மற்றைய புத்தகங்களிலும் வேறு மாதிரி சொல்லியிருக்கிறார் என நண்பர்களுக்கு முதல் சொன்னவன் நான். எனக்கு அடிக்கடி சொல்வார். ''நீ ஒண்டும் வாசிக்கிறதில்லை'' எனது பெறுபேற்றைக் குறைக்க அவர் சொல்லும் காரணம் இது என்பதை வெளிப்படையாகவே அனைவரும் உணர்ந்ததாக சக வகுப்பு தோழர்கள் சொல்வர். நான் ஒரு போதும் அவரோடு முரண்பட்டதில்லை. ஏனெனில் அவரின் அதிகாரத்தை நேசிக்கிறேன். ஒரு சந்தர்ப்பத்தில் தவிர்க்க முடியாதபடி எனக்கு எல்லோரையும் விட அதிகம் பெறுபேறு கிடைத்துவிட்டது. ஆனால் விளம்பரப் பலகையில் காட்சிப்படுத்தப்பட்ட பெறுபேற்றை விட பெறுபேற்றை பிரதியில் தரும் போது எல்லோரையும் விட குறைந்திருக்கும். அவரின் பிரதேச பிள்ளைகள் யாருக்காவது எனது பெறுபேறு அச்சேற்றப்பட்டிருக்கும். நான் கையெழுத்து வைத்து அதைப் பெற்றுக்கொள்வேன். ஏனெனில் திருப்பிக் கதைத்தால் பேராசிரியர்கள் நம்மை ஆயுள்கால மாணவர்களாக்கி விடுவர். அவரை சுற்றி எப்போதும் தன் ஊரவர்களையே வைத்துக் கொள்வார். அந்த ஊரவர்களான துணை விரிவுரையாளர்களின் துன்பம் தாங்கமுடிவதில்லை. தாம் வைத்திருக்கும் சான்றாகப் பயன்படுத்தும் புத்தகங்களில் உள்ளதை நூறு வீதமும் ஒரு எழுத்து பிழை கூட விடாமல் பார்த்து எழுதினால்தான் அது சரியான விடை. இல்லையேல் அது பிழை. அப்படி புதிதாக எழுதினால் நான் தேடலற்றவன். இந்த அதிகாரம், வட்டத்தை முக்கோணம் என நிறுவுவதை ஏற்றுக் கொண்டு முட்டாள் மாணவனாக என்னை இருக்கச் செய்திருக்கிறது. ஒவ்வொரு பெறுபேற்று வெளியீட்டு வகுப்புக்களும் நஞ்சுதான் எனக்கு. அந்த வேதனை படிப்பதே வீண் என்று சிந்திக்க வைக்கும். இப்போதெல்லாம் முன்னரைப்போல் படிப்பதில்லை. பல்கலைக்கழகக் கல்வி சிறப்பாய் அமைய வேண்டுமெனில் பேராசிரியர்களின் ஊரவர்களாய்ப் பிறக்க வேண்டும். மறுபிறப்பை முற்றாக நம்பியிருக்கிறேன். நான் பேராசிரியர்களற்ற பல்கலையில் நிறையப் படிக்க வேண்டும்.

ஜெரா



## புத்தகங்களுக்குள் ஒளித்திருந்து தாக்கும் பிராணிகள்

எனது பல்கலைக்கழக சக வகுப்புத் தோழர்கள் சிலர் எப்போதும் என்னை அச்சுறுத்துபவர்கள். தூரத்தில் கண்டாலே ''ஐயோ'' என்று நான் நினைத்துக் கொள்ளும் இராணுவமானவர்கள். அவர்களுக்கு என்னிடம் ஏதும் தேவையிருப்பின் மிகவும் அன்பாக கதைப்பர். குட்மோர்னிங் சொல்வர். சிரிப்பர். தேவை முடிந்ததும் என்னையே யாரென்றும் தெரியாதவர்கள். நூலகங்களில் இருக்கும் பொதுப் புத்தகங்களை எடுத்து, தமக்கிடையே மீள் பதிவு செய்து கொண்டு மாதக் கணக்கில் வீட்டில் வைத்துக் கொள்வார்கள். நான் தேடியலைந்தே தோற்றுப்போவேன். ஏதாவது ஒரு நல்ல புத்தகத்தை அவர்கள் கண்டுபிடித்துவிட்டால் அவர்களைக் கண்டுபிடிக்கவே முடியாது. பல்கலைக்கழகக் கட்டடங்களுக்கிடையில் என் கண்ணில் அகப்படாமல் ஒளித்து, பதுங்கிச் சென்று பாதுகாப்பாக தம் பைகளில் வைத்து விட்டுத்தான், சுற்றும் முற்றும் பார்ப்பார்கள். ஆனால் நான் ஒருபோதும் அவர்களிடம் கேட்டதில்லை. சிலவேளைகளில் இலக்க அடிப்படையில் அடுக்கப்பட்டிருக்கும் எனது துறை சார்பான புத்தகங்களை வேறு துறைசார்ந்த நூல் அடுக்குகளுக்கிடையில் ஒளித்து வைத்துவிட்டு போயிருக்கிறார்கள். புத்தகத்தின் முக்கிய பகுதிகளை கிழித்துக்கொண்டு போய்விடுவர். நான் எல்லாம் தெரிந்தும் பேசாமலே இருப்பேன். ஏனெனில் அவர்கள் பேராசிரியரின் விருப்பத்திற்குரியவர்கள்.

## கல்லால் எறிவாங்கும் நட்பு

கல்விச்சாலையின் கல்லிருக்கையில் அமர்ந்து கொண்டு, அப்பாதையினால் போய்வரும் பெண் மாணவிகளிடம் இரட்டை அர்த்தத்தில் நலம் விசாரிக்கும் நண்பர் கூட்டமும் என்னிடமும் உண்டு. குடியும், புகையும் இன்னபிற நல்ல பழக்கங்களுக்கும் கைதியாகிவிட்ட இவர்கள் பதவிகளுக்காகப் போட்டியிடும்போது ஆலோசனைகளுக்காகவும், புத்தகங்களுக்காகவும், கூட்டாக மாணவர் வெளியிடும் அறிக்கைகளில் கையெழுத்திடுவதற்காகவும் என்னை நாடுவர். நான் சூடு கண்டவன் ஆனபோதிலும் எப்போது அவர்கள் கேட்டாலும் அடுப்பங்கரையை நாடிவிடுவேன். எனக்கு யாரையும் பகைத்துக் கொள்ளத் தெரியவில்லை. அவசரமாக எதுவும் தேவையெனில் மட்டுமே என் தொலைபேசி எண்களைத் தேடும் நண்பர்கள் தான் எங்குபார்த்தாலும் என் வெளிகளில் விதைக்கப்பட்டிருக்கிறார்கள்.

## அறிவுப் போலிகளின் உருவங்கள்

கடைசியாய் என்னுள் இடம்பிடித்த ஒரு தொகுதி மனிதக் கூட்டமும் இருக்கிறது. நான் அதிகம் ஏமார்ந்து கொண்டதும், கவலையை அள்ளிப்பூசிக் கொண்டதும் இவர்களிடமிருந்தே. வெளிப்படையாக உள்நோக்கமற்றவர்களைப் போல பேசிக் கொள்வார்கள். முன்போக்காக சிந்திப்பவர்கள் போலவும், அறிவின் சிகரங்கள் போலவும், தம்மைக் காட்டிக் கொண்டு என்னோடு வார்த்தைகளை கலப்பவர்கள். நானும் பெரிதாக நம்பி ஒளிவு மறைவின்றி வார்த்தைகளைப் பகிர்ந்து கொள்வேன். எனக்குத் தெரிந்த எல்லா ரகசியங்களையும் அவர்களிடம் பரகசியப்படுத்துவேன். ''அவர்களும் நீங்கள் எங்களைப் போலவே யோசிக்கிறீங்க'' என்று என்னை அங்கீகரிப்பர். இலகுவாக நம்பிக்கையை பெற்றுக்கொள்பவர்கள். மறுகணமே நான் பகிர்ந்து கொண்டவைகளை வேறுவிதமாக அல்லது தமக்கு ஏற்ற விதமாக மாற்றி கதை பரப்பி என்னை வில்லங்கத்தில் மாட்டிவிடுவார்கள். இப்போதெல்லாம் இவர்களை எந்நேரத்தில் கண்டாலும் தலை தெறிக்க ஓட்டம்பிடித்து விடுகிறேன்.

இப்படியாக, நான் சந்தித்த மனிதர்கள் முற்றிலும் விநோதமானவர்கள். இவர்கள் ஏன் இப்படி? என்ற வினா எஞ்சியிருக்கையில் பத்திரிகையில் இதுவரை நான் பகிர்ந்துகொண்ட நாட்டுக்குறிப்புப் பகுதிக்கு முற்றுப்புள்ளி வைக்கிறேன்.

# போர் வெற்றி மாயையும் அபிவிருத்திப் பொய்மையும்

இப்போது போர்முடிந்து 22 மாதங்கள் கடந்து விட்டன. இன்னும் போரின் வெற்றியின் களிப்பும், போரைத் தலைமையேற்று முன் கொண்டு சென்ற நாயகர்கள் தொடர்பான துதி பாடல்களும் ஓயவில்லை. போர் வெற்றியின் நினைவுச் சின்னங்கள் அமைக்கப்படுவதும் கோலாகலத் திறப்பு விழாக்களும் இன்னும் தொடர்கின்றன.

வர்க்கங்களுக்கிடையேயோ அல்லது இனங்களுக்கிடையேயோ தோன்றும் முரண்பாடுகள் மோதல்களாக உருவாகி உச்சக் கட்டத்தை அடையும் போது போராக வெடிக்கிறது. போரின் முடிவில் ஒரு தரப்பு மற்றைய தரப்பை வெற்றிகொள்ள, தோல்வியடைந்த தரப்பு அழிக்கப்படுகிறது அல்லது செயற்படும் திறன் நலிவடைந்து பலவீனப் படுத்தப்படுகிறது.

இது எதிரெதிரான தரப்புகள் முகம் கொடுக்கும் நேரெதிரான விளைவுகள்.

**தோல்வியுறும், வெற்றிபெறும் தரப்புக்களின் நிலை**

ஆனால் வெற்றி பெற்ற தரப்பும், தோல்வியடைந்த தரப்பும் தமக்குள்ளேயே உள்ளக முரண்பாடுகளை உருவாக்கிக் கொள்கின்றன என்பதை எவருமே கவனத்தில் எடுப்பதில்லை. அவை மெல்ல மெல்லக் கூர்மையடைந்து ஒரு மோதல் கட்டத்தை நெருங்கும் போதே உணரப்படுகின்றன.

ஒரு தோல்வியடைந்த தரப்பு தோல்வியின் பின்னடைவுகளால் துவண்டு விடுவது போல் தோன்றினாலும், உண்மையில் அப்படி நடப்பதில்லை. தோல்வியின் பின் சந்திக்கும் ஒடுக்குமுறைகளும் மெல்ல மெல்ல தோல்வியிலிருந்து விடுபடுவதற்கான ஒரு உந்துதலை உருவாக்குகிறது. தோல்வியின் துவளலுக்கும் இந்த வருந்துதலுக்கும் இடையேயான முரண்பாடுகள் ஒன்றுடன் ஒன்று மோது கின்றன. இந்த மோதல்கள் உச்சக் கட்டம் பெறும்போது அந்த உந்துதல் செயல் வடிவம் பெறுகிறது. அப்போது தோல்வியடைந்த தரப்பு வெற்றியை நோக்கி முன்னேற முயல்கிறது. அது இன்னொரு போருக்கான சூழலைத் தோற்றுவிக் கிறது.

> மேலோட்டமாகப் பார்க்கும் போது உருவாக்கப்படும் புதிய பிரமாண்டமான சுற்றுலா விடுதிகளும், நீண்ட பெரும் நெடுஞ்சாலைகளும், புதியதுறைமுகங்கள், விமான நிலையங்களும் பெரும் அபிவிருத்தியை நோக்கி எமது நாடு முன்னேறுவதாகவே ஒரு தோற்றப்பாட்டை ஏற்படுத்தும்.
> ஆனால் இந்த மாயை கூட ஒரு தற்காலிக தோற்றப்பாடே?

அதேவேளையில் வெற்றி பெற்ற தரப்பு மகிழ்ச்சியில் திளைக்கிறது. பாராட்டுக்களாலும், வெற்றியால் கிடைத்த அனுகூலங்களாலும் பெருமை கொள்கிறது. இப்போரின் உயிரிழந்தவர்களும் ஊனமுற்றவர்களும் தியாகிகளாகவும் தேசிய வீரர்களாகவும் போற்றப்படுகின்றனர்.

**போரினால் ஏற்படும் ஒட்டுமொத்தத் தாக்கம்**

ஆனால் இப்போரின் வெற்றியின் பின்னால் இன்னொரு பக்கம் இருப்பதைப் பலர் கண்டு கொள்வதில்லை. போரில் வெற்றி பெற்ற தரப்பும் கூட பல உயிர்களை இழக்கின்றது. பலர் ஊனமடைகின்றனர். பெருமளவிலான சொத் துக்கள் அழிக்கப்படுகின்றன. பொருளாதாரத்தில் பெரும் தாக்கம் ஏற்படுகின்றது. ஏராளமான பெண்கள் விதவைகளாகின்றனர். பல குடும்பங்கள் தங்கள் தலைவர்களை இழக்கின்றன.

சந்திரசேகர ஆசாத்

போர் வெற்றியின் ஆர்ப்பாட்டங்கள் காலப்போக்கில் மங்கிக் கொண்டு போக, இப்பிரச்சினைகளின் தாக்கங்கள் கூர்மையடைய ஆரம்பிக்கின்றன. பொருளாதார நெருக்கடிகள், போரில் இழப்புகளை சந்தித்தவர்களின் பிரச்சினைகள், விதவைகள் ஊனமுற்றோர் சந்திக்கும் உடலியல், உளவியல் பிரச்சினைகள் என்பன ஆட்சியாளர்களுக்கும் இவர்களுக்குமிடையேயான முரண்பாடுகளைத் தோற்றுவிக்கின்றன. இவை படிப்படியாகக் கூர்மையடையப் போர் வெற்றி மயக்கம் தெளிவடைய ஆரம்பிக்கிறது.

எனவே போரில் தோல்வியடைந்த தரப்பும் சரி வெற்றியடைந்த தரப்பும் சரி உள்ளக முரண்பாடுகளைச் சந்திப்பது தவிர்க்க முடியாததாகும்.- ஆனால் போரின் வெற்றியின்போது காணப்படும் நிலைமைகளுக்கு எதிரான விளைவு களை நோக்கியே இம்முரண்பாடு நகர்கின்றது.

உதாரணமாக, இரண்டாம் உலகப் போரில் பிரிட்டனின் வெற்றியில் அதன் பிரதமர் வின்சன் சேர்ச்சிலின் பங்கு அளப்பரியது. அவரின் உரைகளையும் 'வி' என்ற குறியீட்டால் இரு விரல்களைக் காட்டி மக்களைத் தட்டியெழுப்பியமையையும் எவரும் மறந்துவிட முடியாது.

ஆனால் அடுத்த பொதுத் தேர்தலில் போரின் வெற்றியால் அவரை வெல்ல வைக்க முடியவில்லை. அவர் படுதோல் வியையே சந்தித்தார்.

**போரை வென்றதால் அரசு ஈட்டும் இலாபம்**

ஆனால் இலங்கையிலோ நிலைமை தலைகீழாகவே இருந்து வருகிறது. அதாவது போரின் பின்பு இடம் பெற்ற அத்தனை தேர்தல்களிலும் ஆளும் கட்சியே அமோக வெற்றி பெற்றுள்ளது. அரசாங்கம் வெகு லாவகமாக பெரும் விழாக்கள் மூலமும், தொடர்ந்து இன ஒடுக்குமுறை நடவடிக்கைகளை முன்னெடுப்பதன் மூலமும், சிங்கள மக்களைப் போரின் வெற்றியினால் ஏற்பட்ட மாயையிலிருந்து வெளிவரவிடாமல் தக்கவைத்துக் கொண்டிருக்கிறது.

எனினும் விலைவாசி உயர்வு, வேலையற்றோர் பிரச்சினை, இடையிடையே தோன்றும் உணவுப் பொருட்களுக்கான தட்டுப்பாடு, மாணவர்கள் மீதான பிரதான கடும் ஒடுக்கு முறைகள் என்பன முரண்பாடுகளைத் தோற்றுவித்து வருகின்றன. எனினும் இவை காரணமாக எழும் பிரச்சினைகள் அபிவிருத்தி என்ற மாயையினால் திசை திருப்பப் படுகின்றன.

**அபிவிருத்தி குறித்த தவறான கணிப்பு**

ஆனால் உண்மையான அபிவிருத்தி என்பது தேசிய உற்பத்தி அதிகரிப்பையே அடிப்படையாகக் கொண்டது. ஆனால் இங்கு சுற்றுலாத்துறையை மேம்படுத்தல், அந்நிய முதலீடுகளை வரவேற்றல், வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்கு உடல் உழைப்பாளிகளை அனுப்பு தல் போன்றவையே அபிவிருத்தி எனக் காண்பிக்கப்படு கின்றன. எனவே கொழும்பின் மையப்பகுதியான கோல் பேஸ் உட்பட நாட்டின் பலபகுதிகள் அந்நிய நிறுவனங் களுக்கு சுற்றுலா விடுதிகளை அமைக்க நீண்ட காலக் குத்தகைக்கு விடப்படுகின்றன. அதேபோல் ஆடைத் தொழிற்சாலைகளை அந்நிய நிறுவனங்கள் அமைத்து வருகின்றன. அவை வெளிநாட்டிலிருந்து துணிகளை இறக்குமதி செய்து இங்கு தைத்து பின்பு வெளிநாடுகளுக்கே ஏற்றுமதி செய்கின்றன. இவர்களின் தேவைகளை நிறைவேற்ற நெடுஞ்சாலைகள் அமைக்கப்படுகின்றன. பெரும் மின்சார உற்பத்தி நிறுவனங்கள் உருவாக்கப்படுகின்றன. எமது சுற்றுச் சூழல் பாதிக்கப்படுவது பற்றியோ எமது வளங்கள் கொள்ளையிடப்படுவது பற்றியோ எவரும் கவலைப்படுவதில்லை. இதில் இலங்கைக்கு கிடைப்பது ஒருதொகை கூலி. உழைப்பாளர்களுக்கான வேதனம் மட்டுமே? மின்சாரம் கூட உற்பத்திச் செலவைவிடக் குறைந்த கட்டணத்திற்கே இவர்களுக்கு வழங்கப்படுகின்றது.

மேலோட்டமாகப் பார்க்கும் போது உருவாக்கப்படும் புதிய பிரமாண்டமான சுற்றுலா விடுதிகளும், நீண்ட பெரும் நெடுஞ்சாலைகளும், புதியதுறைமுகங்கள், விமான நிலையங்களும் பெரும் அபிவிருத்தியை நோக்கி எமது நாடு முன்னேறுவதாகவே ஒரு தோற்றப்பாட்டை ஏற்படுத்தும்.

ஆனால் இந்த மாயை கூட ஒரு தற்காலிக தோற்றப்பாடே? காலப்போக்கில் பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்குமான இடைவெளி அதிகரிக்கும் போது, வறுமை பஞ்சம் என்பன மக்களை வாட்டும்போது, மக்கள் இந்நாட்டின் மூலவளங்களும் மனித உழைப்பும் மலிவான விலையில் கொள்ளையிடப்படுவதை உணர்ந்து கொள்வார்கள். குறிப்பாக இது வரைகாலமும் இலவசமாக வழங்கப்பட்டு வந்த கல்வி, மருத்துவம் என்பன தனியார் மயப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுகின்றன. இவை நேரடியாகத் தனியாருக்கு விற்பனை செய்யப்படா விட்டாலும் இவற்றின் தரங்கள் வசதிகள் குறைக்கப்படும் போது மக்கள் தனியார் நிறுவனங்களையே நாட நிர்ப் பந்திக்கப்படுகின்றனர். மருத்துவ சேவையில் இந்நிலை ஏற்கனவே உருவாகி விட்டது. உயர் கல்வியில் இந்நிலையை உருவாக்குவதற்கான நிலைமைகள் தோற்றுவிக்கப்பட்டு விட்டன.

இவற்றின் உண்மைத் தன்மை தொடர்பான மக்களின் புரிதலை எத்தகைய மாயைகளாலும் நீண்ட காலத்திற்கு ஒத்திவைக்கமுடியாது.

**போரின் விளைவு அதிகரித்த கடன்**

போரினால் அரசுக்கு ஏற்பட்ட அந்நியக் கடன்களைத் திருப்பிச் செலுத்துதல் அந்நிய நிறுவனர்களின் நலன்களின் அடிப்படையிலான பொருளாதாரம் சுற்றுச் சூழல் மாசு, காடழிப்பு போன்றவை காரணமாக ஏற்படும் வரட்சி, வெள்ளம், மண்சரிவு போன்ற இயற்கை அனர்த்தங்கள், அதிகரித்து வரும் எரிபொருள் விலைகள் என்பன காரணமாக அரசாங்கம் வெகுவிரைவிலேயே பெரும் நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டிவரும். அதே வேளையில் வறுமை, விதவைகள், ஊனமுற்றோர்கள் சந்திக்கும் உடலியல் உளவியல் பிரச்சினைகள் காரணமாக சாதாரண மக்கள் உரிய, தரமான கல்வி மருத்துவம் போன்றவற்றைப் பெறமுடியாத பற்றாக்குறை போன்றவை அரசுக்கும் மக்களுக்குமிடையேயான முரண்பாடுகளைக் கூர்மைப்படுத்தும்.

ஆனால் இப்படியான நிலைமைகளைத் திசை திருப்பவே அரசு போரின் வெற்றியையும் அபிவிருத்தி பற்றிய மாயையையும் ஆயுதமாகப் பிரயோகித்து வருகிறது. ஆனால் உண்மையான அபிவிருத்தியின் வேர்கள் இன்று ஆட்சியாளர்களால் சிதைக்கப்படுவதே உண்மையாகும். உதாரணமாக புல்மோட்டையில் உற்பத்தியாகும் இல்மனைட் முழுமையாக ஜப்பானுக்கு விற்கப்பட்டுவிட்டது.

இது ஜப்பானின் மென்பொருள் உற்பத்தியில் கணிசமான பங்கை வகிக்கிறது. ஆனால் மண்ணில் உற்பத்தியாகும் அந்த மூலப்பொருளைக் கொண்டு இங்கு மென்பொருள் உற்பத்தியை ஆரம்பிக்க எந்த முயற்சிகளும் எடுக்கப்படவில்லை. எமக்குத் தேவையான மென்பொருள் உற்பத்திகளை இங்கு பெருந்தொகைச் செலவு செய்து இறக்குமதி செய்கிறது. நாலுபக்கமும் கடலால் சூழப்பட்ட, ஏராளமான மீன் உற்பத்தியாகும் கண்ட மேடைகளைக் கொண்ட எமது நாடு மீனை இறக்குமதி செய்கிறது. எமது ஆழ்கடல் மீன்பிடி ஜப்பானிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டது. இன்னொரு பகுதி 20 வருடக் குத்தகையில் சவூதிக்கு ஒப்படைக் கப்படவுள்ளது.

எமது மூலவளங்களை எவர் எவரெவரோ கொள்ளையடித்துச் செல்லக் கதவுகளைத் திறந்துவிட்டு அவற்றைக் கொண்டு எவ்வித உற்பத்தியில் ஈடுபடும் முயற்சிகளையும் மேற் கொள்ளாது அபிவிருத்தி பற்றிப் பேசுவதில் என்ன அர்த்தம் இருக்க முடியும்?.

எனவே போரின் வெற்றியின் எதிர் விளைவுகளும் அபிவிருத்தியின் பொய்மையும் அம்பலப்படும்போது மக்கள் விழிப்படைவது தவிர்க்க முடியாது. அப்போது எகிப்து, ரூனிசியா போன்ற நாடுகளில் ஏற்பட்ட நிலைமை தோன்றினால் ஆச்சரியப்பட முடியாது.

★



# தொழிலை அழகுபடுத்துங்கள்




தொலையா நினைவுகள்

ஜேர்மனியின் பிலபீல்ட் நகரம் மிகவும் அழகானது. இலங்கையில் ஜேர்மன் ஸ்தானிகராலயத்தில் நான் பெற்ற வீசா அனுமதியின் காலம் நிறைவுற்றதால் அதனை புதுப்பிக்கவும் நீடிக்கவும் வேண்டும். ஜேர்மனியில் பிலபீல்ட் நகரத்தில் அதனைப் புதுப்பிக்கும் அலுவலகம் ஒன்றிருந்தது. இலங்கையைப் போல் ஜேர்மனியில் எல்லாவற்றுக்கும் தலைநகரை நோக்கிப் பயணிக்க வேண்டியதில்லை.

காலையில் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் நான் தங்கியிருந்த நண்பரின் வீட்டிலிருந்து அவருடைய மோட்டார் வண்டியிலேயே அந்த அலுவலகத்திற்குப் புறப்பட்டோம். அங்கிருந்த நிலக்கீழ் வாகனத் தரிப்பிடத்தில் மோட்டார் வண்டியை நிறுத்திவிட்டு அலுவலகத்திற்குள் சென்றோம்.

அலுவலக அறைகளுக்கு முன்னாக நீண்ட வராந்தாவில் கூட்டம் அதிகம் இருக்கவில்லை. அந்த அலுவலக அதிகாரியின் அறை வாசலில் பச்சை, சிவப்பு, நிறங்களில் மாறிமாறி மின்னிய மின் வெளிச்சங்களை அவதானித்தேன். பச்சை நிற மின்குமிழ் வெளிச்சமிடும் போது. அதிகாரியைச் சந்திக்க அறையின் உள்ளே செல்லலாம். பச்சை விளக்கை அவதானித்து, எமக்கு முன்னர் அறைக்குச் சென்றவர் வெளியேறியதும் நாங்கள் உள்ளே சென்றோம்.

**நெடுந்தீவு மகேஷ்**

அங்கே அதிகாரியும் இரு அலுவலர்களான பெண்களும் இருந்தனர். பெண்களுள் ஒருவர் அங்கிருந்த கணனியின் முன்னே அமர்ந்திருந்து அதனை இயக்கிக் கொண்டிருந்தார். நாம் போன விடயத்தைச் சொல்லி எனது கடவுச் சீட்டைக் கொடுத்து அதிகாரியுடன் நண்பர் கதைத்தார். அவர்களின் உரையாடல்கள் டொச் மொழியில் இருந்தன. எனது கடவுச்சீட்டைப் புரட்டிப் பார்த்த அதிகாரி கணனியின் முன்னே இருந்த பெண்ணிடம் கொடுத்து கணனியில் உள்ள விபரங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டார். ''டொச்'' மொழியில் அச்சிடப்பட்ட படிவம் ஒன்று கடவுச் சீட்டுடன் இணைத்து எனக்கு வழங்கப்பட்டது. அதனை நிரப்பித் தருமாறு அதிகாரி எனக்கு அறிவுரை வழங்கினார்.

சிறிது நேரம் அப்படிவத்தை நிரப்புவதற்காக அறையிலிருந்து நாம் வெளியே வந்தோம். மீண்டும் பூர்த்தி செய்த படிவத்துடன் அதிகாரியை நாம் உடனேயே சந்தித்தோம். எனது கடவுச்சீட்டையும், படிவத்தையும் பெற்றுக் கொண்ட அதிகாரி எம்மை வராந்தாவில் சில நிமிடங்கள் தாமதிக்கும்படி கேட்டுக் கொண்டார்.

நாம் வாராந்தவில் இருந்த ஆசனங்களில் அமர்ந்திருந்தோம். அந்த வேளையில் அறையில் இருந்து வெளியே வந்த அதிகாரி எனது கடவுச் சீட்டையும் படிவத்தையும் கையிலே கொண்டு செல்வதை அவதானித்தேன். அவர் எங்கே போகிறார் என்ற கேள்வியை என் பார்வை எனது நண்பரிடம் கேட்டது? ''பெரிய அதிகாரியிடம் ஒப்பம் பெறுவதற்காகப் போகின்றார்'' என்ற பதிலை அவர் எனக்கு அளித்தார்.

சிறிது நேரத்திலேயே திரும்பி வந்த அதிகாரி எம்மை அறைக்குள் அழைத்தார். அன்று மாலைக்குள்ளாகவே எனது விசா அனுமதியைப் பெற்றுக் கொண்ட போது நான் ஆச்சரியப்பட்டேன். இது தான் ஜேர்மனி அரச அலுவலகங்களின் சிறப்பு என்று சொன்ன போது என் நண்பரின் முகத்தில் பளிச்சிட்ட மகிழ்ச்சி. ஆனால் எனக்கோ; அச்செயல் எங்கள் அரச அலுவலகங்களின் அசட்டையைக் காட்டி என்னை வெட்குறச் செய்தது.

எங்கள் அலுவலகங்களை நிறைத்துள்ள அதிகாரிகளையும் சிற்றூழியர்களையும் எண்ணிப் பார்க்கின்றேன். அவர்கள் தாம் பெற்ற தொழிலால் தம்மை அழகு படுத்துகிறார்களேயன்றித் தாம் ஏற்றுக் கொண்ட தொழிலை அழகு படுத்தும் வகையில் தமது கடமைகளைச் செய்வதைக் காணவில்லையே, எனக் கவலையுற்றேன்.

அரச அலுவலராக நியமனம் பெற்ற நாளிலிருந்து அதன் மூலம் பெறும் வருமானத்திற்காக அந்த வருமானத்தின் வருடாந்த அதிகரிப்புக்காக எடுக்கும் முயற்சிகளுக்கு அப்பால் கடமையின் புனிதம், கட மையின் வேகம், கடமையின் விவேகம் என்பவற் றைப் புறந்தள்ளிச் செயற்படுவது என்னவோ மனதை உறுத்துகின்றது.

ஆசிரியர் கற்பித்தற் பணியை மேற்கொள்ளுகின்றார். அது அவரது கடமையும் கூட. அதே போல் பாட சாலையின் கல்வியை மேம்படுத்தும் வகையில் அதிபர் கடமையில் தன்னை ஈடுபடுத்துகிறார். பஸ் சாரதி வாகனத்தைச் சிறப்பாகச் செலுத்துகிறார். வைத்தியர் நோயாளி சுகம் பெறவேண்டும் என உழைக்கிறார்.

கட்டட நிர்மாணி கட்டடத்தின் அழகுக்கும் அதில் வசிப்போரின் வாழ்க்கை வசதிகளுக்கும் ஏற்ப கட்டடத்தின் நிலைத்திருக்கும் உறுதிக்கும் பொறுப்பான கடமைகளைச் செய்கின்றார். இவ்வாறே தொழில்கள் ஒவ்வொன்றும் சில பொறுப்புக்களையும் ஒழுங்கமைந்த பல செயற்பாடுகளையும் கொண்டுள்ளன. எத்தொழிலை எவர் ஏற்றுக்கொண்டாரோ அத்தொழிலைச் சிறப்புறச் செய்வதே அவரின் கடமை.

கல்வி கற்பித்தலில் ஆசிரியர் தனது கடமையைச் செய்கின்றார். அவர் கற்பிக்கிறார் என்பதை மாணவர்களே கண்டறிவர். மாணவர்களால் வெளிப்படும் தேர்ச்சி நிலைகளே ஆசிரியரின் கற்பித்தல் கடமையைக் காட்டிநிற்கும் சுட்டிகளாகும். அவ்வாறே நோய் நீங்கிச் சுகமடையும் ஒவ்வொருவரும் வைத்தியர்களை இனங்காட்டும் சுட்டிகளாகும். எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும் அந்தத் துறை சார்ந்த கடமைகளும் அவற்றின் மூலம் வெளிப்படும் சிறப்புகளும் எமது சமூகத்திற்கு எத்துணை பயன் தந்தன என்பதே கடமையின் மகத்துவத்தை உணர்த்து கின்றன.

அதே வேளை ஆசிரியரின் வழிகாட்டல் பொருத்தமாக இல்லாமையால் சித்தியடையாதோர் எத்தனை பேர்?

வைத்தியர் ஒருவரின் கவனயீனமான வைத்தியத்தினால் உயிரிழந்தோர் எத்தனை பேர்? அத்தகைய விடயங்களின் மறுபக்கத்தையும் நாம் புரட்டிப் பார்க்கும் தோறும் கடமையினின்றும் நாம் விலகியதால் நீடிக்கும் கொலை கொள்ளைகளும் சண்டை சச்சரவுகளும் பெருகிவருவதற்கு எல்லா நிலைகளிலும் நாம் சுயநலமுள்ளவர்களாய் செயற் படுவதே காரணம் என்பதை உணரலாம். உயர்வை, உண்மையைக் கருத்தில் கொள்ளாது அவற்றிலிருந்து விலகியமையும் இன்றுவரை நாம் தவறி நடந்த சீரற்ற பாதையை நாம் சிந்திக்காது இருப்பதுவும் எம்மை பயமுறுத்தும் நீதிகளாகும். அந்தத் துயர் விளைக்கும் அநீதியின் பாதையை நோக்கிய பயணத்தை நாம் தடுக்க வேண்டுமாயின் எமது தொழில் என்ன? அதற்குரிய கடமைகள் யாவை? என்பதைத் தேர்ந்து செயற்பட வேண்டும். அதுவே தொழில் அதன் வழி உயர்வதே வாழ்க்கை. ❋

# கந்தனிடம் கையெடுக்கும் பற்குணம்



ஏழ்மையும் துன்பமும் துயரமும் வருத்த வாழக் கதியற்றுத் தவிக்கும் மக்கள் ஒருபுறம். அவர்களின் துன்பம் துயரம் துடைத்தகற்றிப் புனர்வாழ்வளித்து காக்க அரசு நியமித்துள்ள அதிகாரிகள் மறுபுறம் என இந்த வசந்தம் காணும் நோக்கோடு வலம் வரும் மனிதர்களிடத்தில் அன்பும், அறமும், நிறைய இயங்கா நிலைகண்டு கவிஞர் வருந்துகிறார்.

*குளிரால் நடுங்கி வெயிலால் வெதும்பி*
*பசியால் நலிந்து-இரு காலும்*
*உறவோர் இறக்க பலபேர் பெயர்ந்து*
*கதி வேறுமின்றி-உயிர் ஆடும்*
*எளியோர் வாழ்வை புதிதாய் அமைத்துப்*
*புனர்வாழ்வளிப்போம் எனக்கூறி*
*பலபேர் கூடி-பலவாய்ப் பேசி*
*முடிவோ எதுவும் எடுக்காமல்*
*குளிர்சேர் அறையில் குடிநீர் அருந்தி*
*சொகுசாய் அமர்ந்து கதை பேசும்*

குளிரால் நடுங்கி வெயிலால் வெதும்பி வாழும் வகை தெரியாது உறவிழந்து உயிர் வாழத் துடிக்கும் ஏழைகளைக் கவிஞர் நோக்குகிறார். இத்தகையோரை எண்ணி வேதனைப்படுகிறார். அத்தகைய பாதிப்புகளில் இருந்து மக்களை மீட்கவென்று குளிர் அறையில் ஒன்று சேர்ந்து குளிர்பானம் அருந்திக் கதை பேசும் அதிகாரிகளைக் கண்டவர் அவர்கள் மீது ஆத்திரப்படுகின்றார்.

*முடிவே எடாது-பிடியே கொடாத*
*விடிவே தராத-அதிகாரிகள்*
*பரிவே இலாத முறை கேடமைந்த*
*படுபாவிகளின் செயற்பாட்டை*
*ஒரு கோவணத்தை உடையாகத் தொண்டு*
*கதிர்காமத் தமர்ந்த பெருமானே*

எனக் கதிர்காமக் கந்தனை நோக்கிக் கூவுகிறார். கூட்டம் கூட்டுவார்கள். கூடிக் கதைத்துக் கும்மாளமிடுவார்கள். ஆனால் இந்த எழைகளின் மீட்புக்கேற்ற எந்த முடிவையும் எடுக்க மாட்டார்கள். இந்த முறை கேடரின் செயற்பாட்டைக் கதிர்காமக் கந்தனே கேளும் என்று கை எடுக்கிறார். கந்தா நீயும் ஒரு கோவணத்தையே ஆடையாய் அணிந்து காணும் தோறும் காட்சி தருகிறாய். இந்த ஏழைகளிடம் அத்தகைய கோவணமும் இல்லையே என்ற ஆதங்கமே அவரது வார்த்தைகளின் மறைபொருளாய் நின்றொலிக்கிறது.

*ஒரு நேரம் உண்டு ஒரு ஆடை கொண்டு*
*உயிர் வாழும் எங்கள் உறவோரை*
*படுகேடிகளின் பிடியால் தளர்த்தி*
*தடுமாறா விருக்க அருள்வாயே*

ஒரு நேர உணவும் ஒரேயொரு ஆடையும் கொண்டு அலையும் இந்த மக்கள் இந்த அதிகாரிகளான ஏமாற்றுக்காரரின் நாடகத்தில் மயங்கி ஏமாறாதிருக்கக் கதிர்காமக் கந்தா நீயே அருள வேண்டும் என்கிறார். மானிடர் தமது இனத்தையே மதிக்காது செய்யும் ஏமாற்றுக்களையெல்லாம் இல்லாமல் செய் அப்பனே என்று இறைவனை வேண்டுகிறார். எல்லாவற்றுக்கும் இறுதியில் கைகொடுப்பவன் இறைவனே என்பது அவரது நம்பிக்கையாகும். எங்கள் இனத்தைக் கடவுள்தான் காக்க வேண்டும் என்று தமிழ்த் தந்தை எஸ்.ஜே.வி. செல்வ நாயகம் அவர்களும் தம் முயற்சிகளில் தோல் விகளைக் கண்டு வருந்தி இறுதியில் தமிழரின் விடுதலையை இறைவன் கையிலேயே ஒப்படைத் துச் சென்றார். இதுவும் இறை நம்பிக்கையின் வெளிப்பாடாகும்.

அதே போன்று அல்லறும் மக்களின் விடிவுக்கு ஆண்டவனே நீயே துணை என்கின்ற கவிஞர் சி.பற்குணம் பல்கலைக்கழக விரிவுரையாளராக, ஒரு அரச உயர் அதிகாரியாகக் கடமையாற்றியவர். அவரது நெஞ்சம் கலையையும் இலக்கியத்தையும் அறிவையும் ஞானத்தையும் மதித்தது. 1944 இல் பிறந்தவர். 1996 ஏப்ரல் மாதம் முதலாம் திகதி அவர் தனது ஐம்பத்திரண்டாவது வயதில் காலமானார். அவரது மறைவுக்குப் பின்னால் 1997 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட ''நெஞ்சின் நெருடல்கள்'' எனும் கவிதைத் தொகுப்பிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 'அருவருப்புக்கள்' எனும் தலைப்பிலான கவிதையே இது. ❋

**மைதிலி.தேவராஜா**

# துசைகளைத் தின்



**ராஜனி**

உரும்பிராயில் தமது உறவினருடன் வசித்து வந்த ரஜனி 1996 செப்ரெம்பர் காணமல்போனார். கொழும்பு செல்வதற்கு தயாரான அவர் அதனை உறவினர்களுக்குத் தெரிவிக்க மானிப்பாய் சென்றிருக்கிறார். அதன் பின் வீடு திரும்பவில்லை. உறவினர் தேடிக்கலைத்து பொலிஸாரிடம் முறையிட்டனர். இரு வாரங்களாகத் தகவல் இல்லை. விடயம் யாழ்ப்பாணத்தைப் பரபரப்பாகியது. குடாநாட்டு இராணுவத்தினரின் விசாரணையால் 13 நாள் கழித்து கோண்டாவில் பஸ்டிப்போவுக்கு அருகில் இருந்த வீடு ஒன்றின் மலசலக் கூடக்குழிக்குள் இருந்த ரஜனியின் சடலம் உருக்குலைந்த நிலையில் மீட்கப்பட்டது.

இதில் சம்பந்தப்பட்ட இராணுவத்தினர் கைது செய்யப் பட்டு விசாரணையின் மரண தண்டனைக்காக காத்திருக்கின்றனர். அதற்கு இன்னும் வேளை வரவில்லை.

ஆக்கிரமிப்புக்கள் மிக மோசமாக சிறுவர்களையும் பெண்களையுமே பாதிப்பதுண்டு. ஆண்களை அவ்வளவு மோசமாகப் பாதிப்பதில்லை. ஏனெனில் ஆக்கிரமிப்பாளர்களின் முழுப்பாகமும் ஆண்களால் வடிவமைக் கப்பட்டு அவர்களால் வழிநடத்தப்படுபவை. இதனால் தானோ என்னவோ யுத்தத்தில் பயன்படுத்தும் அனைத்து உயிர் கொல்லும் ஆயுதங்களும் ஆண்களின் உடற்பாகம் போல் அமைக்கப்படுகின்றன.

பலம் குன்றிய இனமொன்றின் மீது நிகழ்த்தப்படும் ஆக்கிரமிப்பாளர்களின் வன்முறைகள், அந்த இனக்குழுமத்தின் ஆண்களை முதலில் உயிர்பலியெடுத்தோ, ஊனமாக்கியோ சிறையிலடைத்தோ அச்சுறுத்தி மௌனி களாக்கி விடும். அதன் பின் ஆக்கிரமிப்பாளரின் முழுக் கவனமும் அக்குழுமத்தின் இயக்க சக்தியாக இருக்கும் இளம் பெண்கள் மீதே குவியும். படைகளின் பாலியல் இச்சையைத் தீர்த்துக் கொள்ளல், குறித்த இனக் குழுமத்தின் தனித்தன்மைகளைக் கலைத்தல், அச்சமூக ஆண்களை வீரியமற்றவர்களாக்கல், படையெடுப்பாளரது கலாசாரத்தை திணித்தல் போன்ற நோக்கங்களுக்காக இக்கவனக் குவிப்பு இடம்பெறும்.

இதனை வெளிப்படுத்தும் முதற்செயல் பாலியல் வன்புணர்வுகள். ஆக்கிரமிக்கப்பட்ட சமூகங்களுக்கு பயப்பீதியை ஏற்படுத்தக் கூடிய வகையில் மேற்கொள் ளப்படும் இப்புணர்ச்சிகள் மிகமோசமான மிருகத்த னத்துக்கு ஒப்பானவை. இச்சை தீர்க்கும் சொற்களை பெண்களுடன் பகிர்ந்து கொள்ளல் அந்நோக்கத்தில் தீண்டுதல், அவயங்களில் தட்டுதல், கடத்திக் கற்பழித்தல், கூட்டாகக் கற்பழித்தல், நகங்களால் கீறி உடலுறுப்புக்களைக் காயப்படுத்துதல், கொலை செய்து எறிந்துவிடல் போன்ற செயல்கள் பெண்கள் மீது ஆக்கிரமிப்பாளர்களினால் மேற்கொள்ளப்படுவதுண்டு.

இதனை அமெரிக்கா ஆக்கிரமித்த அனைத்து நாடுகளிலும், கொங்கோ, பாலஸ்தீனம், பர்மா, சூடான் இலங்கை யென அதிகமான நாடுகளிலும் காணலாம்.

தமிழ் மக்கள் மீது வன்முறை ரீதியான ஆக்கிரமிப்பை இலங்கை அரசு ஆரம்பித்த காலத்திலிருந்தே இக்குரூர நடைமுறைகளும் வழக்கில் இருந்துள்ளதை பல வன்புணர்வுச் சம்பவங்கள் புலப்படுத்தியுள்ளன. இதற்கான நீண்டதொரு பட்டியலே தமிழ் மக்களது போராட்ட வரலாற்றில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

1995 ஆம் ஆண்டில் யாழ்.குடாநாடு இராணுவ ஆக்கிரமிப்பிற்குட்பட்ட பின்னர் இது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வெளித் தெரிந்த தகவலின்படி 1995 ஓகஸ்ட் மாதத்தில் லக்சுமி என்பவர் இரண்டு இராணுவத்தினால் வன்புணரப்பட்டு கொலை செய்யப் பட்டிருக்கிறார். 1996 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்தில் கிருஷாந்தி குமாரசாமி, அதே ஆண்டு செப்ரம்பர் மாதம் ராஜினி வேலாயுதபிள்ளை, 1997 ஆம் ஆண்டு 4 பிள்ளைகளின் தாயான கோணேஸ்வரி, 1998 ஆம் ஆண்டு 12 வயதுச் சிறுமியான புஸ்பமலர், 1999 ஆம் ஆண்டு சாரதாம்பாள், தர் சினி, ரீட்டாஜோன், ஜமலிற்றா, சுமதி, சிவமணி, அருள்ராணியென பாலியல் வன்புணர்த்தலினால் கொலை செய்யப்பட்ட தமிழ் பெண்களின் பட்டியல் நீள்கிறது. வெளித் தெரியாமல் இன்னும் எத்தனையோ பாலியல் மீறல் மர்மங்கள் இருக்கின்றன. உயிரச்சத்தால் அடங்கிப் போகும் பெண்கள் ஆக்கிரமிப்பாளர்களுக்கான பாலியல் தொழிலாளிகளாக்கப்பட்ட நிகழ்வுகளும் நடந்தேறியுள்ளன.

பொதுமக்களினதும் ஊடகங்களினதும் பாலியல் வன்புணர்வுகள் பற்றிய தொடர்ச்சியான துப்புத் துலக்கல்களினால் மாட்டிக் கொள்ளும் படையினரைக் கைது செய்வதும் சிறையிலடைப்பதும் நீதிமன்ற விசாரணையில் மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளிப்பதும் தீர்ப்புக்கடிதத்தில் ஜனாதிபதி கையெழுத்திடாமல் இழுத்தடிப்பு செய்து தமிழ் மக்களை மறந்து போகச் செய் வதும் தான் இதுவரை காலமும் இலங்கையில் மேற் கொள்ளப் பட்டு வந்த நடவடிக் கைகள். இதுபோன்றதொரு சம்பவம் அன்மையிலும் இடம்பெற்றுள்ளது.

1996 ஆம் ஆண்டு உரும்பிராயில் வைத்து காணமல் போன ரஜினியின் வழக்கு விசாரணை சம்பந்தப்பட்ட மூன்று படையினருக்கும் மரண தண்டனை வழங்குதலுடன் நிறைவுக்கு வந்துள்ளது. ஏற்கனவே இதேபோல் தீர்ப்பளிக்கப்பட்டு கிருஷாந்தி யின் கொலை வழக்கோடு தொடர்புபட்ட இராணு வத்தினருக்கான மரணதண்டனையளிப்பு என்னவானதோ தெரியவில்லை.

இவைகள் ஒருபுறமிருக்க வன்னி மீதான இறுதிக் கட்டபோரின் போது அதிகளவிலான வன் புணர்வு சம்ப வங்கள் இடம்பெற்றுள்ளதாக ஐ.நா. தெரிவித்துள்ளதுடன் அதற்கான விசாரணைகளையும் கோரியுள்ளது. இசைப் பிரியா உட்பட இணையதளங்களில் வெளியான அனைத்து போர்க்குற்ற ஆவணங்களிலும் பெண் போராளிகளது சடலங்கள் நிர்வாணமாகவும் அரைநிர்வாணமாகவும் உறுப்புக்கள் சேதமாக்கப்பட்ட நிலையிலேயே காண்பிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளும் போராளி என்ன துணியை கழற்றிவிட்டுப் பார்த்தால் பெண்ணுடல்கள் தானே? இவற்றுக்கும் விசாரணைகள் நடத்தப்பட்டு தீர்ப்பு வழங்கப்படுமா?

**தப்பி**

அதிகாரத்துக்கான யுத்தம் அதிகமாக தின்று வளர்வது தசைகளைத்தான். அது ஈழ யுத்தத்தை பொறுத்த வரையில் அதிகமாய் புசித்து சமிபாடடையாமல் இன்னும் மீதமாயிருப்பது பெண்களது தசைகளே. இந்த இடத்தில் இன்னொரு விடயத்தையும் குறிப்பிட்டே ஆக வேண்டும். காலம் தாமதித்து வழங்கப்படும் தீர்ப்புக்கள் நீதியை மறைத்து விடும் என்று கூறப்படுவதுண்டு. சம்பவம் நடைபெற்று சில காலத்துக்குள்ளே கைது செய்யப்பட்ட போதும் பதின்நான்கு வருடங்களுக்குப் பின்னர் வழங்கப்பட்ட தீர்ப்பு நீதியை மெய்ப்படுத்துமா?

**கிருஷாந்தி**

1976 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் யாழ். சுண்டுக்குழி மகளிர் கல்லூரியின் உயர்தரப் பிரிவு மாணவி கிருஷாந்தி காணாமல் போனார். இராணுவ வாகனத்துடன் நிகழ்ந்த விபத்தொன்றில் மரணமடைந்த தனது நண்பியின் மரணக் கிரியைக்குப் போய்விட்டு வீடு திரும்புகையிலே மேற்படி சம்பவம் இடம்பெற்றிருந்தது. கண்டிவீதியும் செம்மணி வீதியும் பிரியும் சந்தியில் "யாழ் வரவேற்கிறது" என்ற வளைவு அமைந்த பகுதியில் இராணு வத்தினர் சிலரால் மறித்து வைக்கப்பட்டு விசாரிக்கப்படுவதை அவ்வழியாகச் சென்றவர்கள் கண்டுள்ளனர்.

இந்த இடத்திலிருந்தே இறுதியாக அவர் காணாமல் போய்விட்டார். தேடிச்சென்ற தாயார், தம்பியார், அயல் வீட்டுக்காரர் ஆகியோர் மர்மமான முறையில் காணாமல் போயிருந்தனர். அதன் பின்னர் கிருஷாந்தி உட்பட உறவினர்கள் அனைவரும் செம்மணி வெளியில் புதைக்கப்பட்ட நிலையில் இராணுவத்தினரால் அடையாளம் காணப்பட்டனர். அன்றிலிருந்து தொடர்ந்த விசாரணை 2000 ஆம் ஆண்டளவில் சம்பந்தப்பட்ட படையினருக்கு மரணதண்டனை என்ற நீதிமன்ற உத்தரவோடு முடிவடைந்தது. மரணதண்டனைக்கான உத்தரவுப் படிவத்தில் ஜனாதிபதி இன்னும் கையெழுத்திடவில்லை.

**தர்மினி**

தர்மினி புங்குடுதீவை சேர்ந்தவர். தகப்பனை இழந்து தாயுடன் வாழ்ந்தவர். இரு சகோதரிகளுடன் வீட்டில் தங்கியிருந்தார். அங்கு இரவில் தங்குவது பாதுகாப்பில்லை யெனக் கருதி மாமனாரின் வீட்டில் இரவுகளைக் கழிப்பதுண்டு. இவர் செல்லும் பாதையில் வைத்து 2010 டிசெம் பர் 16 ஆம் திகதி காணமல் போயுள்ளார். அவர் வழமை யாகச் செல்லும் வழியில் கடற்படை யினரது முகாமொன்று இருப்பதுடன் அதிலிருக்கும் படையினர் தர்மினியை துன்புறுத்தலுக்குட்படுத்தியதும் பலமுறை அவர்களை ஏசிய சந்தர்ப்பங்களும் நடந்திருக்கின்றன. குறிப்பிட்ட தினம் மாலை மாமனார் வீட்டுக்கு போனவர் பின்னர் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார். ஒன்றுக்கு மேற்பட்டோர் வன்புணர்வை மேற்கொண்டமை மருத்துவ அறிக்கைகளில் இருந்து தெரியவந்துள்ளது. மேலும் உள்ளாடைகள் கிழிக்கப்பட்டும் உடற்பாகங்களை கடித்துக் குதறியும் காயங்களுக்குள்ளாக்கப்பட்ட நிலையில் பலவந்தமும் புரியப்பட்டு கொலை செய்யப்பட்டார். குற்றவாளிகளைத்

**சாரதாம்பாள்**

சாரதாம்பாள் புங்குடுதீவை சேர்ந்த இளம் குடும்பப்பெண், 1999 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் ஒரு நாளிரவு காணாமல் போய்விட்டார். 19 வயது நிரம்பிய இவருக்கு அப்போது 4 வயது குழந்தையும் இருந்தது. சகோதரனுடன் வீட்டில் தங்கியிருக்கையில் முகமூடியணிந்த குழுவொன்று சகோதரனைக் கட்டிவைத்து விட்டு சாரதாம்பாளை வாயில் துணியைத் திணித்து கடத்திப் போனது.

மறுநாள் காலை தேடியலைந்தனர் உறவினர்கள். பாழடைந்த வீடொன்றினுள் பனையோலைகளினால் மூடப்பட்ட நிலையில் அரைநிர்வாணத்தோடு பிணமாய்க் காணப்பட்டார் பெண் மணி. உடல் எங்கும் நகக் கீறல் காயங்களும் தடயங்களும் காணப்பட்டன.

"கடற்படையினரைச் சேர்ந்த சிலரே இக்கொடூர கொலைகளை புரிந்திருக்க வேண்டும் என நீதிமன்ற விசாரணையின் போது சாரதாம்பாளின் சகோதரர் தெரிவித்திருந்தார்.

சுடர் ஒளி

10, ஏப்ரல் - 16, ஏப்ரல், 2011

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14. டெலிபோன்: 0115738005
பாக்ஸ்: 0115517944 - 5
E-mail: editorial@sudaroli.com

## வரலாற்றுத் தவறுகளை மீண்டும் செய்யாதீர்கள்

விளையாட்டு, நல்லிணக்கத்தையும் சமத்துவத்தையும் ஏற்படுத்தக்கூடியது என்பது பெரும்பாலானவர்களின் கருத்து. அரசியல் கலக்காத வரையில் அது அப்படியே இருக்கக் கூடும். ஆனால் இப்போதெல்லாம் நிலைமை அப்படி இல்லைப்போல் தெரிகிறது.

தெற்காசிய நாடுகளில் கிரிக்கெட் விளையாட்டு மிகப் பெரும் செல்வாக்கைப் பெற்றுள்ளது. மக்கள் செல்வாக்குக்கு உட்பட்ட எல்லாவற்றிற்குள்ளும் மூக்கை நுழைத்து அரசியல் செய்யும் தெற்காசிய அரசியல்வாதிகளால் கிரிக்கெட்டும் அதன் இலக்கணங்களை இழந்து விட்டது.

நடந்து முடிந்த உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி இதற்கு நல்ல உதாரணம். அரையிறுதி ஆட்டம் இந்திய - பாகிஸ்தான் நாடுகள் இடையே அமைதியையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தும் விதத்தில் அரசியல் மயமாக்கப்பட்டது. விளையாட்டை நல்லவிதமாக அரசியல் பயன்படுத்தியதாக அதனை எடுத்துக் கொள்ளலாம்.

ஆனால், இறுதியாட்டம் அதற்கு நேர் எதிர்மாறானதாக அமைந்து விட்டது. ஒரு மாதம் முழுவதும் நடந்து வந்த கிரிக்கெட் போட்டியினால் ஏற்படுத்தப்பட்ட ஒருவித தற்காலிக நல்லிணக்கத்தையும் கூட ஒழித்து விடுவதாக இறுதியாட்டத்தில் இலங்கை அரசும் படையினரும் கலந்துவிட்ட அரசியல் செயற்பட்டது.

உலகக் கிண்ணத்தை இலங்கை அணி வெல்வது உறுதி என்று நம்பிய மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா, அந்த வெற்றி போரில் உயிரிழந்த படையினருக்குச் சமர்ப்பணம் என்றார். ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கைக்கான பிரதி நிரந்தரப் பிரதிநிதியாக இருப்பவர் அவர். முள்ளிவாய்க்காலில் பெருமளவு பொதுமக்கள் உயிரிழந்தார்கள் என்று ஐ.நாவே ஒத்துக்கொள்ளும் சண்டையில் முக்கிய பங்காற்றிய 58ஆவது படையணிக்குத் தலைமை தாங்கியவர். விடுதலைப் புலிகளின் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் உயிரிழந்து விட்டார் என்பதை உலகுக்கு அறிவித்தவர்.

உலகக் கிண்ண வெற்றி படையினருக்குச் சமர்ப்பணம் என்று அவரே சொன்னார். போதாதற்கு புலிகளுக்கு எதிரான போரில் பெற்ற வெற்றிக்கு ஒப்பானது உலகக் கிண்ண வெற்றி என்று கருத்துத் தெரிவித்தார் இராணுவத்தின் முன்னாள் தளபதி சரத் பொன்சேகா.

தங்களது அணிகளை உற்சாகப்படுத்தவும் ஊக்கப்படுத்தவும் இந்த வார்த்தைகள் உதவும் என்று அவர்கள் கருதியிருக்கக்கூடும்.

அரசு என்னதான் புலிகளைப் பயங்கரவாதிகள் என்று கூறினாலும் அவர்கள் தமிழ் மக்களின் விடுதலைக்காகப் போராடியவர்கள் என்று நம்பும் கணிசமான மக்கள் தொகையினர் இந்த நாட்டில் இருக்கிறார்கள் என்பதை அரசும் அதிகாரிகளும் நிராகரிக்க முடியாது.

தமிழ் மக்களுக்கு இருந்த உரிமைப் பிரச்சினைகளே வன்முறை சார்ந்த போராட்டத்துக்கு வழிவகுத்தது என்பதைக் கடந்த காலங்களில் சிங்கள அரசியல் தலைவர்களே ஏற்றுக் கொண்டுள்ளார்கள். அப்படியிருக்க கிரிக்கெட் வெற்றியை பயங்கரவாதத்துக்கு எதிரான வெற்றிக்கு ஒப்பிட்டது, தமிழர்களுக்கு எதிராக சிங்கள மக்களை ஊக்கப்படுத்தும் ஓர் உளவியல் சார்ந்ததே.

அதுவும் இந்தியாவுக்கு எதிரானதாக இறுதி ஆட்டம் அமைந்து விட்டதால் தமிழர்களுக்கு எதிரான மற்றொரு போராகவே கிரிக்கெட் இறுதியாட்டம் படைத் தரப்பினரால் சித்தரிக்கப்பட்டது. அதனைக் கண்டிக்காது, அனுமதித்தன் மூலம் அதற்குத் தானும் உடந்தை என்பதை அரசு வெளிப்படுத்தியது. இதுவே இந்திய அணியின் வெற்றியைக் கொண்டாடிய மலையக மக்கள் மீதான தாக்குதலுக்கும் வழிவகுத்தது.

இலங்கையை ஆண்ட சிங்கள அரசுகள் அனைத்தும் கடந்த காலங்களில் இதே தவறையே இழைத்து வந்தன. போர் முடிந்துவிட்டதாக மக்கள் நம்பும் இன்றைய நிலையில் ஆயுதங்கள் இல்லாமல் தமிழர்கள் மீது ஒரு போரைத் தொடுத்திருக்கும் மனோநிலையை சிங்கள மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் வரலாற்றுத் தவறை மீண்டும் கொழும்பு அரசுகள் செய்யக் கூடாது. அப்படிச் செய்வது மற்றொரு வன்முறைக்கு அல்லது பயங்கரவாதத்துக்கு மட்டுமே வழிவகுக்கும்.

இந்த அரசு அனைத்து மக்களுக்குமானது என்றால் தனது பொறுப்புக்களை உணர்ந்து அதனை நிறைவேற்றுவது அவசியம்.

# போரில் உயிரிழந்த தமிழ் மக்களுக்கான ஆத்மசாந்திப் பிரார்த்தனையே இது



பல்குழல் பீரங்கிகளில் இருந்து சிக்ஸர்களும் பவுன்றிகளும் பறந்த கொண்டிருந்தன. ரவைகளின் மழை, இறப்புக்களின் எண்ணிக்கையைப் படிப்படியாக அதிகரித்துக் கொண்டிருந்தது. களத்தடுப்புக்கள் எப்போதுமில்லாதவாறு நான்கு பக்கங்களுமாக வியூகமிடப்பட்டிருந்தன. உதிரிகளாக வானிலிருந்து கிளஸ்ரர்கள் தூவப்பட்டன. நிர்ணையிக்கப்படாத ஓவர்கள் தொடர்ந்தன.பலமுறை ஆட்டமிழப்புக்கள் கோரப்பட்டும் மத்தியஸ்தரின் பக்கச்சார்பு காரணமாக ஆட்டமிழப்பு வழங்கப்படவில்லை. தமிழ் மக்களுக்கு எதிரான மூன்று வருட போர் இது.

இறுதியில் பெண்கள், குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மார் என பல்லாயிரம் உயிர்கள் பலியெடுக்கப்பட்டு ஆட்டம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. ஆட்டநாயகனாக ஜனாதிபதி தெரிவானார். ஆனால் கிண்ணம் கையளிப்பதற்கிடையில் மத்தியஸ்தர்கள் வெளி அழுத்தங்களிலிருந்து தப்புவதற்காக தமது போலி நடிப்பை வெளிப்படுத்தி யுத்தக்குற்ற விசாரணையை ஆரம்பித்தனர். இதனால் மைதானத்துக்கு வந்து நீராகாரம் வழங்கியவர்களும், அரங்கில் இருந்து ஆட்டத்தைக் கண்டு களித்து உச்சாகமளித்தவர்களும் மெதுவாக எழுந்து நகர்ந்தனர் வீட்டுக்குப் போய் ஹோல் பண்ணுகிறம் என்றபடி. பாவம் நல்லாய்க் கஷ்டப்பட்டவையள். அவையளை நடுத் தெருவில விடக்கூடாது. ஏதோ நாங்களும் தானே அதுக்கு காரணம் என்ற நன்றி உணர்வுடன் வீட்டுக்குபோய் வீட்டாருடன் கதைத்துவிட்டு ஹோல் பண்ணிச்சினம், அதில் ஆறுதலுடன் கூடிய அக்கறை ''நாங்கள் பாக்க வந்ததை வெளியில் சொல்லிப்போடாதைங்கோ! பிளீஸ்! எப்படி என்றாலும் பின்னால நிண்டு நடந்த உண்மைகளை மூடி மறைக்க நாங்கள் முழு நடவடிக்கை எடுக்கிறம்'' என்று.

இலங்கையில் இறுதிப்போரின் போது போர்குற்றங்கள், மனித உரிமை மீறல் சம்பவங்கள் நடைபெற்றதா என்ற விசாரணைகள் மற்றும் அழுத்தங்கள் தொடங்கப்பட்டு இதுவரையில் எந்த விதமான முன்னேற்றமும் காணப்படவில்லை. மத்தியஸ்தர்கள் கையை உயர்த்தித் தவறைச் சுட்டிக்காட்டத் தயங்குகின்றனர். யுத்தக்குற்றக் விசாரணை இழுபறியுடன் தொடர்கிறது.

மும்பை மொஹாலி மைதானத்தில் நடைபெற்ற உலகக் கிண்ண கிரிக்கெட் இறுதிப் போட்டியில் இலங்கை - இந்திய அணிகள் மோதிக்கொண்டன. வெற்றியும் தோல்வியும் வீரனுக்கு அழகு. விளையாட்டு வீரர்கள் தமது திறமையை தமது அணிசார்ந்து வெளிப்படுத்துகின்றபோது அது பெரு வெற்றியாக அமைகின்றது.

இந்த வெற்றியை ஒரு இனத்தின் அழிவுக்குக் காரணமாக இருந்தவர்களுக்காக அர்ப்பணிப்பதாக அதிகாரத்தில் உள்ளவர்கள் பறைசாற்றுகின்றனர். ஆனால் விளையாட்டு என்பது இலங்கையில் ஐந்தாவது மதம். அதற்கு இன, மத பேதங்களைக் கடந்து எல்லா மக்களையும் ஓரணியில் திரளவைக்கும் ஆற்றல் இருக்கிறது என்று அண்மையில் சர்வ மதத் தலைவர் ஒருவர் குறிப்பிட்டிருந்தார். யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை சர்வமதத் தலைவர்கள் குழுச் சென்று பார்வையிட்ட பின்னர் இந்தக்கருத்து வெளியாகியது.

வன்னியின் இறுதி யுத்தத்தில் ஓரணியில் நின்று தமிழ் மக்களின் வாழ்க்கையைச் சின்னாபின்னமாக்கிய அணிகள் எதிர் எதிர் திசையில் நின்று மோதிக்கொண்டன.போட்டி தொடங்குவதற்கு இரண்டு நாள்களுக்கு முன்பே வெற்றி யாருக்கு என்பது பற்றிய எதிர்வு கூறலும்,வெற்றி யாருக்குச் சமர்ப்பணம் என்பது பற்றியும் இலங்கை அணிசார்ந்து தாராளமாகப் பேசப்பட்டது.

இலங்கை - இந்திய அணிகளின் இறுதிப் போட்டியைக் காண்பதற்காக இந்தியா சென்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது நாட்டு அணியின் வெற்றிக்காக திருப்பதியில் பூசை வழிபாடுகளில் கலந்துகொண்டு வேண்டிக் கொண்டார். அதன்பின் இந்திய ஜனாதிபதி பிரதீபா பாட்டிலுடன் இலங்கை அணியின் தோல்வியையும் கண்டு களித்தார்.

இதற்கிடையில் இலங்கையின் அனைத்துப் பகுதிகளிலும் தமது அணியின் வெற்றிக்காக பூஜை வழிபாடுகள் இயற்றப்பட்டன.யாழ்ப்பாணத்தில் தமிழ் கடவுள் நல்லூரானிடம் பலாலி கூட்டுப்படையினர் தமது அணிக்கு கிண்ணம் வேண்டி வழிபாட்டில் ஈடுபட்டனர்.

இலங்கை அணி உலகக் கிண்ணம் வென்றால் அந்த வெற்றியைத் தமிழ் மக்களுக்கு எதிரான போரில் உயிர்த் தியாகம் செய்த படை வீரர்களுக்குச் சமர்பணமாக்கப்படும் என்று இறுதிப் போரில் முக்கிய பங்கு வகித்தவரும் மணலாறு தொடக்கம் முல்லைத்தீவு வரையான பெரும் பகுதிகளைக் கைப்பற்றியவரும், தற்போது ஐ.நா சபையின் இலங்கைக்கான பிரதிநிதியாகவும் இருக்கும் மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்திருந்தார்.

**பூமுகன்**

இது போலவே இறுதிப்போரிலும் சரி, அதற்கு முன்பும் சரி தமிழ்மக்களுக்கு எதிராக இலங்கை இராணுவத்தின் தளபதியாக இருந்து செயற்பட்டு, இடை நடுவில் ஜனாதிபதியால் தூக்கி வீசப்பட்டு, தற்போது சிறைவாசம் அனுபவித்துக் கொண்டிருக்கும் சரத் பொன்சேகாவும் இலங்கை அணியின் வெற்றியானது இறுதியுத்த வெற்றிக்கு ஒப்பானது என்று கருத்து வெளியிட்டார்.

இலங்கை அணியின் வெற்றி படை வீரர்களுக்கு சமர்ப்பணம் என்றால் அவர்களின் தோல்வி அப்போரில் அநியாயமாகக் கொல்லப்பட்ட தமிழ் மக்களுக்கு எவ்வாறு அமையும்? படையினர் செய்த கொடுமைகளுக்கு தண்டனையாக கிண்ணத்தக்கான தோல்வி அமைகின்றது. இலங்கை அணி வெற்றி பெறவெண்டும் என்று நடத்தப்பட்ட பிரார்த்தனைகளும் விசேட வழிபாடுகளும் யுத்தத்தின் பிடியில் அகப்பட்டுக் கொல்லப்பட்ட தமிழ் மக்களின் ஆத்மாக்கள் சாந்தியடைவதற்கான பிரார்த்தனையே.

யுத்தம் முடிவுக்குவந்து இரண்டு வருடம் பூர்த்தியாகும் நிலையில் வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்களுக்கு எந்தவிதமான விமோசனமும் கிட்டவில்லை. அவர்கள் அடிப்படை வசதிகளற்று நெருக்கடிகளுக்கு மத்தியில் வாழ்க்கையை நடத்திக்கொண்டிருக்கின்றனர். இந்திய அரசு வாக்குறுதியளித்தது போன்று இலங்கையின் அபிவிருத்தியிலும், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேச மக்களுக்கான வீடமைப்பிலும் எதுவித முன்னேற்றமும் காணப்படவில்லை.

இவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில் இரு நாட்டின் அணிகளும் மோதிக் கொண்டதில் இந்தியா கிண்ணத்தைத் தன்வசமாக்கிக்கொண்டுள்ளது. இலங்கையில் சுய அரசியலுக்காகப் பேசப்பட்ட வார்த்தைகள் பொய்த்துப் போனதால் இவர்கள் இனியாவது பொது நோக்கத்துடன் எல்லா மக்களையும் கருத்தில் கொண்டு அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளவெண்டும்.

இந்தியாவும் தான் நினைத்ததைச் சாதித்து விட்டதாக எண்ணி பெருமிதம் கொள்ளமுடியாது. வன்னியில் நடந்த யுத்தத்தில் இலங்கை அரசுக்கு நீராகாரம் அளித்ததைப் போன்று வன்னி மக்களின் வாழ்வாதாரத்துக்கும் துணை நிற்கவேண்டிய பொறுப்பை உண்மை உணர்வுடன் மேற்கொள்ளவேண்டும்.

விளையாட்டையும் அரசியலாக்கி மக்களின் தேவைகளையும், விருப்பங்களையும் குழிதோண்டிப் புதைத்து விட்டு, ஏதேச்சாதிகாரப்போக்கைக் கையாண்டு உலகை ஏமாற்றும் முயற்சிகள் தவிர்க்கப்பட்டு மக்களின் விருப்பங்களைப் பூர்த்தி செய்யும் அரசியல் முறையே இலங்கையில் அவசியமான ஒன்றாகக் கொள்ளப்படவேண்டும். இதற்குச் சர்வதேச சமூகத்தின் தூய்மையான அணுகுமுறைகளும் அழுத்தங்களும் அவசியமாகும். ✱

# கவிதைப்புனல்

## அவளின் அவன்...




மருதநில வெளியிலொரு
மருதமரம்! அதனடியில்
இரு கரையும் புரண்டுருளும்
சிறுவருவி அதனடுவில்
உருபுரளும் கதிரவனின்
நிறமிருளும் சாய்பொழுதில்
கருமுகிலாய்க் குழல்விரிய,
கழுத்துவரை உடல்மறைய
சிறுதுணியால் அரைதெரிய
சிறுக்கியவள் தலைமுழுகி
மறுகரையில் மரமறைவில்
மாற்றாடை புனைகையிலோர்
உருக்களைய கரமவளின்
உடல் வளைய, நிலைகுலைய
கருக்கலிருள் நிழல் விரிய,
தூக்கி அவள் இடைதுவள,
உடுத்தவுடையும் நழுவ
எடுத்தவளைச் சென்றவன் யார்?

வயல்நடுவே ஒரு குடிசை!
வழியெல்லாம் பறவை இசை!
அயல் வெளியில் புகல வரை
அதைமொழிய எவருமில்லை!
கயல்விழியாள் அவனுவந்து
கல்யாணம் புரிந்து, சில
பகல் இரவே கடந்திருந்த
பாவையவள் நினைவிலவன்
அவள் தனியே அருவியிலே
அரை இருளில் தனிவழியே
வரும் திசையை நோக்காமல்,
வழி பார்த்துக் காக்காமல் ---

தேனருந்தும் தினவெடுத்து,
தேடி அவள் இடமடைந்து
மாதவியின் கோவலனாய்
மாறி, அவள் இடை பிடித்து,
வீறுநடை போட்டவனாய்
விரைந்தடைந்தான் குடிசைமனை!
குடிசைமனை மாளிகையுள்
கும்மிருட்டைப் போக்கடிக்கும்
குப்பிவிளக்கணைத்து
குதூகலத்தில் வண்டு, மலர்!

ஏறாவூர் தாஹிர்

## எனக்காக நீ



கள்ளமில்லா உன் மனதை
காயப்படுத்த விரும்ப வில்லை
கவிதையினில் உனை வடிக்க
கவியரசும் அல்ல
உன்னை ஒன்று கேட்பேன்
உன் உயிராய் இருக்க
இறுதிவரை வாழவேண்டும்
நீ என்றும் எனக்காக

கோபி.

## செய்யாதே!

மானத்தமிழ் மகனே, மடவேலை செய்யாதே!
ஈனப்பிறப்புக்கள் என்னும் பேர் வாங்காதே!
கூனல் தமிழன் போல் குனிந்து கால் வீழாதே!
தீனுக்கு நாய்கூடச் சீராய் வால் ஆட்டிடுமே!

ஈழவரலாற்றை எடுத்துப் புரட்டிப் பார்!
வாழமுனைந்தோரை வதைத்தோரார் கண்டுபிடி!
பாழும் அரசியலில் பாழுங்கிணற்றினுக்குள்ளே
வீழும் நிலையார்க்கோ வீழ்த்தியவர் இங்காரோ?

வீடு- பணம்-வேலை- வீதி- உலா- ஊர்தி
நாடுவது தவறல்ல, நமது நிலம் என்னாச்சு?
ஈடும் இணையுமிலா எண்ணம்- பேச்சேற்றசெயல்
நீடு நிலைத்திடுமா, நீண்ட சம வாய்ப்புளதா?

வெல்லலாம் தோற்றிடலாம், வீரம்தான் யானையின் வே
நல்லதனைச் செய்தோமோ நமக்கதுவே முக்கியமாம்!
பொல்லா அரசியலில் புகுமுன்னர் சிந்திப்பாய்!
எல்லை அழித்தாரின் இணைப்பில் தனிமை நலம்!

எஸ். இராஜரட்ணம்

## சேராத காதல்

சந்திப்போமா.....
நாம் இருவரும் என்கிறாயே
தண்டவாளத்தின் மேல் நின்றபடி,
ஏய் பெண்ணே,
சேராத காதல் இதுதானா?

தேனான் சுரேஷ்
மன்னார்.

## கிட்டாத வரம்!



என் அன்பே
உன் கூந்தலில்
குடியிருப்பதற்கு
ஒரு பூவாகத் தானும்
படைக்காத கடவுள்
என்னை,
புல்லாக படைத்திருந்தால்
உன் பாதம் பட்டு
மறு ஜென்மம்
எடுத்திருப்பேன்.
என் செய்வேன்
இனி,
உன்னை அடைவதற்கு?

-சுரேஷ்-

## அன்றும், இன்றும்..!

அன்று!
என் மனம்
ஆழிப் பேரலையாய்
ஆர்ப்பரித்த போது
அருகிருந்து
என் மனவெளியில்
அமைதிப் புறாக்களை
பறக்கவிட்டவள்- நீ
இன்று
சதிக்காரக் கும்பல்
உன்னையும், என்னையும்
பிரித்து- தம்
கோரப்பிடிக்குள்
வைத்து விட்டு - எங்கள்
பிரிவின் துயரை
வேடிக்கையாய் பார்த்து
நிற்கிறது.....!

து. திலக்,
யாழ்ப்பாணம்.

## அன்பு வாழும்

மரணத்தை வென்றவாகள் யாருமில்லை
மனிதத்தை வென்றவன் நீயேயன்றோ
தருணத்தைத் தனக்கிசைவாய் பயன்படுத்தி
அருமந்த மனிதனுனை யமன் பறித்தான்

தேவர்களும் தலைவணங்கும் வாழ்வேயுந்தன்
தேடரிய நற்குணங்கள் அழியா மேன்மை
சாவற்ற பணிச்சிறப்பால் நிலைத்த உந்தன்
சரித்திரமோ நிலைத்தந்தன் அன்பே வாழும்

ஏ. எஸ். இரவி,
கோப்பாய்.

## மௌனநயம்

ஒவ்வொரு முறையும்
உன்னையே
சுவாசிக்கிறேன்
திருட்டு இரசனைகள்
தெய்வீகமாகின்றது
தனிமையின் போது.

யோகேஸ்வரன்,
நெடுந்தீவு.




# சிலந்தி மரங்கள்

பாகிஸ்தானில் கடந்த ஆண்டு வரலாறு காணாத வெள்ளம் ஏற்பட்டது. இது ஏற்படுத்திய அழிவுகள், நாசங்கள் எல்லாம் ஒரு புறம் இருக்க, இதனால் ஒரு மோசமான பக்க விளைவு ஏற்பட்டுள்ளது. வெள்ள நீரில் இருந்து தப்புவதற்காக மரங்களில் ஏறி தஞ்சம் புகுந்த மில்லியன் கணக்கான சிலந்திகள் இப்போது வெளிப்பட ஆரம்பித்துள்ளன. இது முற்றிலும் எதிர்ப்பார்க்காத ஒரு பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. தண்ணீர் வற்ற நீண்ட நாள் எடுத்துக் கொண்டதால் இவை வழமைக்கு மாறாக மரங்களில் கூடுகளைக் கட்டி வரழவும் ஆரம்பித்துவிட்டன. இந்தச் சிலந்திக் கூடுகள் மிகவும் பெரிதாகக் காணப்படுகின்றன. இதற்கு முன் இடம்பெற்றிராத அல்லது மக்கள் கண்டிராத ஒரு நிகழ்வாக இது அமைந்துள்ளது. சிந்து மாநிலத்திலேயே இந்த அதிசயத்தைக் காணக்கூடியதாக உள்ளது. இதனால் ஒரு பெரிய நன்மையும் மக்களுக்கு விளைந்துள்ளது. வெள்ளப்பெருக்கின் பின் வழமையாக ஏற்படும் நுளம்புப் பெருக்கம் இங்கு பெருமளவுக்குக் குறைந்துள்ளது. காரணம் மரங்களில் தஞ்சம் புகுந்துள்ள சிலந்திகளின் கூடுகளுக்குள் இவை சிக்கி அவற்றின் பிரதான உணவாக மாறிவருகின்றன. இதனால் பல்வேறு நோய்ப் பரவலுக்குக் காரணமாக இருக்கும் நுளம்புகளின் பெருக்கம் கணிசமாகக் குறைந்துள்ளது.

ஒரே நேரத்தில் எப்படி ஏழு வீட்டில் கொள்ளையடிக்கிறாய்?

அட போங்க எஜமான். எப்ப பாத்தாலும் தொழில் ரகசியத்தையே கேட்கிறீங்களே...





# 64 பாம்புக் குட்டிகள்

மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட செட்டிபாளையம் கிராமத்தின் வீடொன்றில் இருந்து 64 நாகபாம்புக் குட்டிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

செட்டிபாளையம் வைத்தியசாலை வீதியில் உள்ள கண்ணதாசன் என்பவரது வீட்டிலிருந்தே இந்த நாகபாம்புக் குட்டிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

வீட்டிலிருந்து நாகப்பாம்பு ஓடுவதைக் கண்ட அவர் வீட்டைத் துப்பரவு செய்ததில் 64 பாம்புக்குட்டிகளை கண்டுபிடித்துள்ளார்.

இதனைக் கேள்வியுற்று அப்பிரதேசத்தின் பொதுமக்களில் பலர் அவற்றைச் சென்று பார்வையிட்டுள்ளனர். ஒரே இடத்தில் இவ்வாறான பெருந்தொகையான பாம்புகள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது இதுவே முதல் தடவையாகும்.



# தெருவில் ஆயிரம் விருந்து

பிரித்தானிய முடிக்குரிய இளவரசர் வில்லியம் தமது நீண்டநாள் காதலியான கேட் மிடில்டனை அடுத்த மாதம் திருமணம் செய்து கொள்ளவுள்ளார். தமது அபிமானத்துக்குரிய ராஜகுடும்பத்து வாரிசான இளவரசர் வில்லியத்தின் இத் திருமணத்தைக் கோலாகலமாகக் கொண்டாடத் தயாராகி வருகின்றனர் பிரித்தானிய மக்கள்.

இதற்கென ஆயிரக்கணக்கான தெருவோர விருந்து வைபவங்களை ஒழுங்கு செய்வதில் பிரித்தானியப் பொதுமக்கள் ஆர்வம் காட்டிச் செயற்பட்டு வருகின்றனர். அந்தவகையில் லண்டனில் மட்டும் இத்தகைய விருந்துகளை நடாத்துவதற்காக முக்கிய சாலைகளின் போக்குவரத்தைத் தடைசெய்து தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு இதுவரை ஐநூறுக்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் பொதுமக்கள் தரப்பால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. முக்கியமான நிகழ்வுகளைக் கொண்டாடும் முகமாக தெருவோர விருந்துபசாரங்களை ஒழுங்கு செய்து கூடி மகிழ்ந்து கொண்டாடுவது பிரித்தானியாவில் பல காலமாக தொடர்ச்சியாகக் கடைப்பிடிக்கப்பட்டு வரும் பண்பாடுகளில் ஒன்றாகும். அயலவர்கள் நண்பர்களுடன் இணைந்து நிகழ்வுகளைக் கொண்டாடி மகிழ்வதன் மூலம் இணைப்பையும் சகோதரத்துவத்தையும் கட்டிக்காக்க இயலும் என்பது பிரிட்டிஷ் பொது மக்களது அசையாத நம்பிக்கையாகும்.



# நாயின் நினைவாக...


டோக்கியோவில் ஷிபூயா என்ற புகையிரத நிலையம் ஒன்று உள்ளது. அங்கே ஒரு நாய்க்கு சிலை வைத்திருக்கிறார்கள்.

அதைப் பற்றி ஓர் அதிசய கதையும் உள் ளது. டோக்கியோ பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக இருந்தவர்தான் அதன் எஜமானன்.

அவர் தினமும் ஷிபூயா புகையிரத நிலையத்துக்கு வந்து ரயில் ஏறுவார். அவரது நாய் ஹசிகோ, நிலையம் வரை வந்து வழியனுப்பி வைக்கும். நண்பகல் தாண்டி அவர் திரும்பி வரும்வரை காத்திருக்கும்.

இந்த வழக்கம் பத்து வருடங்களுக்கும் மேலாக நடந்து கொண்டிருந்தது. பேராசிரியர் ஒரு நாள் திரும்பி வரவில்லை. அவர் இறந்து விட்டார்.

நாய் ஹசிகோவும் அவர் திரும்பி வருவதற்காக அங்கேயே காத்துக் கிடந்தது. வீட்டுக்குத் திரும்பவேயில்லை. அங்கேயே இரவும் பகலும் காத்திருந்தது. பிராணியின் நன்றியுணர்வைப் பார்த்த பிற பயணிகள் கலங்கிவிட்டார்கள். அவர்கள் எடுத்து வந்த உணவுகளைச் சொற்பமாக சாப்பிட்டுவிட்டு அங்கேயே காத்துக் கிடந்தது.



கடைசியில் ஒருநாள் அது இறந்துவிட்டது. பிறகு பயணிகள் எல்லாம் ஒன்று சேர்ந்து நாய்க்குச் சிலை வடித்து அந்த நிலையப் பக்கம் நிறுத்தி விட்டார்கள்.

1987 இல் ஹசிகோவைப் பற்றிய படம் ஜப்பானிய மொழியில் வெளியிடப்பட்டது. 1935ல் இறந்த ஹசிகோவின் உடலைப் பாதுகாத்து வந்தார்கள். சமீபத்தில் டோக்கியோ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மிருக வைத்தியர்கள் அதன் உடலைப் பரிசோதித்து, ஹசிகோ புற்று நோயால் இறந்தது என்று கூறியிருக்கிறார்கள். ஹசிகோவின் கதை 2009 இல் ஹொலிவுட் படமாக மாறியது.

# புத்தாண்டுடன் இலங்கைக்கு "கண்டம்"

எதுவாக இருந்தாலும் மொத்தத்தில் பார்க்கும்போது, புத்தாண்டுடன் இலங்கை 'கண்டம்' ஒன்றைக் கடக்கத்தான் வேண்டும். அந்தக் 'கண்டம்' தான் இலங்கையின் எதிர்காலத்தை நிர்ணயிக்கப் போகிறது.



2009 ஆம் ஆண்டு இறுதிக் கட்ட யுத்தத்தில் படையினர் இழைத்த தாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பான விவரங்கள் பகிரங்கப் படுத்தப்படப் போகின்றன.

இந்த மாத நடுப்பகுதியில் அந்த விவரங்கள் வெளியாகும்போது, இலங் கைக்குப் பெரும் நெருக்கடி ஏற்படலாம் எனக் கருதப்படுகின்றது.

இந்தப் போர்க் குற்றங்கள் தொடர் பாகத் தமக்கு ஆலோசனை வழங்கு வதற்காக ஐ.நா.செயலாளர் நாயகம் பான் கீ மூன் நியமித்த நிபுணர்குழு தனது அறிக்கையை பான் கீ மூனிடம் சமர்ப்பிக்கப் போகின்றது. அவரிடம் சமர்ப்பிக்கப்பட்டவுடன், அந்த அறிக்கை பகிரங்கமாகச் சர்வதேசத்துக்கு வெளி யிடப்படப் போகின்றது என்று தகவல் கசிந்துள்ளது.

இந்த அறிக்கையைப் பகிரங்கப் படுத்த முன்னர் தமக்கு வழங்குமாறு இலங்கை ஐ.நாவிடம் கேட்டுள் ளது. அதற்கு ஐ.நா.செயலாளர் நாய கத்திடம் இருந்து பதில் ஏதும் வெளி யாகவில்லை.

இந்த அறிக்கை எந்த விதத்திலும் இலங்கைக்குச் சாதகமாக அமையப் போவதில்லை. சர்வதேச நீதிமன்றத் தில், இலங்கை தோன்றி விளக்கம் அளிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை இந்த அறிக்கையின் சிபார்சுகள் ஏற் படுத்து எனக் கருதப்படுகின்றது.

2009 மே மாதம் இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் முடிவுக்கு வந்த கையோடு ஐ.நா.செய லாளர் நாயகம் பான் கீ மூன் இலங் கைக்கு வருகை தந்தார்.

போர் நடந்த இடங்களில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருந்த நலன்புரி நிலையங்களுக்குச் சென் றார். அங்கு தங்கியிருந்த மக்களுடன் மனம் திறந்து பேசி அவர்களின் குறை களைக் கேட்டறிந்தார். அதன்பின் ஹெலியில் வட்டமிட்டு இறுதி யுத்தம் நடந்த பகுதியை நோட்டமிட்டார்.

அதன் பின்னர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் பேச்சுக்களை நடத் தினார். அப்போது இலங்கை மீது வீழ்ந் துள்ள போர்க் குற்றங்கள் குறித்தும் பிரஸ்தாபித்தார்.

சந்திப்பின் பின் வெளியான கூட்ட றிக்கையில், இறுதிக்கட்ட யுத்தத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் குறித்து விசாரணை நடத் தப்படும் என்று இலங்கை உறுதி கூறியிருந்தது.

ஆனால் இது விடயத்தில் சர்வதேச மட்டத்தில் எழுந்த கண்டனங்களை அடுத்து, பான் கீ மூன் இந்தப் போர்க் குற்றங்கள் குறித்துத் தமக்கு ஆலோ சனை வழங்குவதற்காகக் கடந்த வருடம் ஜூன் மாதம் 22 ஆம் திகதி நிபு ணர்குழு ஒன்றை நியமித்தார்.

இந்தோனேசியாவின் முன்னாள் சட்டமா அதிபர் தருசுமன் தலைமை யில் மூன்று உறுப்பினர்களைக் கொண் டதாக அந்தக் குழு அமைந்தது.

இந்தக் குழு தேவையற்றது என்று இலங்கை வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் அப்போது கூறியிருந்தார். அந்தக் குழு இலங் கைக்குள் பிரவேசித்து விசாரணை நடத்த இடமளிக்கப்படமாட்டாது என் றும் அப்போது அவர் கூறியிருந்தார்.

இந்த நிபுணர் குழுவுக்கு எதிராக இலங்கை கடும் கண்டனத்தை வெளி யிட்டது. அரசு சார்பான அமைச்சர் விமல் வீரவன்ஸ தலைமையில் ஜே. வி.பியினர் கொழும்பில் உள்ள ஐ.நா. அலுவலகத்தை முற்றுகையிட்டனர். அலுவலகம் முன்பாக விமல் வீரவன்ஸ உண்ணாவிரதமும் மேற்கொண்டார். அவரது உண்ணாவிரதத்தை ஜனாதி பதி மகிந்த ராஜபக்ஷவே முடித்து வைத் திருந்தார்.

ஜனாதிபதியின் ஆசீர்வாதத்துடன் தான் விமல் உண்ணாவிரதம் மேற் கொண்டதாகவே கருதவேண்டியுள் ளது என்று அப்போது விமர்சகர்கள் கூறியிருந்தனர்.

ஐ.நாவுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கப்பட்ட போதும், கொண்ட முடி வில் மாற்றம் இல்லாது நிபுணர் குழு தனது விசாரணையைச் சர்வதேச மட்டத்தில் முன்னெடுத்தது.

இந்த நிலையில் கற்றறிந்த பாடங் கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு என்ற விசாரணைக் குழுவை ஜனா திபதி மகிந்த ராஜபக்ஷ நியமித்தார்.

அந்தக் குழு கொழும்பிலும் வடக்கு - கிழக்கு, மலையகம் எனப் பல பகுதி களிலும் விசாரணைகளை முன்னெடுத் தது. தொடர்ந்தும் விசாரணையை முன்னெடுத்துக் கொண்டிருக்கிறது.

நல்லிணக்கம் ஏற்படுத்துவதற்கான ஆலோசனைகள், கடந்த கால யுத்தத் தின்போது காணாமற் போனோர் தொடர் பான விவரங்கள் இந்த ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியங்களாகப் பதி வாகியுள்ளன.

**யாழவன்**

இந்த ஆணைக்குழு வின் பணிக்காலம் காலத் துக்குக் காலம் ஜனாதிபதியால் நீடிக்கப் பட்டுக் கொண்டிருக்கிறது. அந்தக் குழு வின் இறுதி அறிக்கை இன்னமும் வெளி யாக வில்லை.

இந்நிலையில் பான் கீ மூன் நிய மித்த நிபுணர் குழு தனது விசார ணையை முடித்து, தனது அறிக்கையை இம் மாத நடுப்பகுதியில் செயலாளர் நாயகம் பான் கீ மூனிடம் கையளிக்கப் போவதாக அறிவித்துள்ளது.

இந்த நிபுணர் குழு இலங்கையில் விசாரணை செய்ய விரும்பிய போதும், அதனை அனுமதிக்க இலங்கை அரசு மறுத்து விட்டது. தேவையானால் நிபுணர்குழு இலங்கை வந்து நல் லிணக்க ஆணைக் குழு முன் சாட்சியம் அளிக்கலாம் என்று அரசு கூறிவிட்டது.

இலங்கை அரசு அனுமதி வழங்காத நிலையில், இலங்கை விஜயத்தைக் கைவிட்டு இறுதி அறிக்கையை இந்த மாத நடுப்பகுதியில் ஐ.நா.செய லாளர் நாயகத்திடம் கையளிக்கப் போகிறது நிபுணர்குழு.

அத்துடன் அந்த அறிக்கையைப் பகிரங்கமாக வெளியிடவும் போவதாக நிபுணர்குழு தெரிவித்துள்ளது.

சனல் 4 தொலைக்காட்சியில் வெளியான படங்கள், நேரடியாகச் செய்மதி மூலம் எடுத்த படங்கள் மற்றும் இணையம் மூலம் பெறப்பட்ட சாட்சியங்கள், நேரில் பெற்ற சாட்சியங் கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு நிபுணர்குழு தயாரித்த அந்த அறிக்கை பகிரங்கமாக வெளி யாகும் போது, இலங்கைக்கு நெருக்கடி ஏற்படத்தான் போகின்றது. அதற்குப் பதில் கூறவேண்டிய நிலை இலங் கைக்குப் ஏற்படுவது தவிர்க்க முடியா ததாக இருக்கும்.

நிபுணர்குழு அறிக்கை இலங்கைக் குப் பாதகமாக அமையும் எனக் கரு தப்படுவதால், கொழும்பில் உள்ள ஐ.நா. அலுவலகம் பேரினவாதிகளால் முற்றுகையிடப்படக்கூடிய சூழல் உருவாகலாம். இதன் காரணமாக ஐ.நா.அலுவலகத்தைப் பாதுகாப்பது எப்படி என ஒத்திகை ஒன்று நடத்தப் பட்டுள்ளது.

எதிர்ப்பு நடவடிக்கைகள் மற்றும் பணயக் கைதிகளாகக் கொண்டு செல் லப்படுதல், நெருக்கடியின் போது ஆவ ணங்களைப் பாதுகாத்தல் போன்ற விட யங்களில் ஐ.நா.அலுவலக ஊழியர் களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

நிபுணர்குழு அமைக்கப்பட்டபோது கொழும்பு அலுவல கம் முற்றுகையிடப் பட்டுப் போராட்டம் இடம்பெற்றமை போன்று நிபுணர் குழு வின் அறிக்கை வெளிவரும்போது ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறலாம் என்ப தால் ஐ.நா. ஊழியர்களுக்குப் பயிற்சி அளிக்கப் பட்டுள்ளது.

இத்தகைய போராட்டங்கள் சர் வதேச மட்டத்தில் இலங்கைக்குக் கெட்டபெயரை ஏற்படுத்தும் என் பதையும் மறுக்க முடியாது.


எதுவாக இருந்தாலும் மொத்தத்தில் பார்க்கும்போது, புத்தாண்டுடன் இலங்கை 'கண்டம்' ஒன்றைக் கடக்கத்தான் வேண்டும். அந்தக் 'கண்டம்' தான் இலங்கையின் எதிர்காலத்தை நிர்ண யிக்கப் போகிறது.

சர்வதேச நீதிமன்றம் முன் இலங்கை நிற்கவேண்டி வருமா? அல்லது எழும் குற்றச்சாட்டில் இருந்து தப்பிப் பிழைக் குமா? இதற்குக் காலம்தான் பதில் கூற வேண்டும்.

## அழுவார் அழுவாரெல்லாம்...

'அழுவார் அழுவாரெல்லாம் தன் கரைச்சல், திருவன் பெண்டிலுக்கு அழுவாரில்லை' என்றொரு பழமொழி வழக்கில் உள்ளது. தமிழகச் சட்ட சபைத் தேர்தலுக்கான பிரச்சாரப் பணிக்காகச் சென்றவாரம் தமிழ் நாட்டுக்கு விஜயம் செய்த ஆளும் காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தி சென்னை தீவுத் திடலில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் வைத்து ஈழத் தமிழர்கள் பிரச்சினை குறித்துத் தெரிவித்த கருத்து மேற்சொன்ன பழமொழியின் அர்த்தத்தைத் தெளிவாகப் புலப்படுத்தி நிற்கிறது.

இறுதிக் கட்ட யுத்தத்தின்போது முல்லைத்தீவில் சிக்கிக்கொண்ட அப்பாவித் தமிழ் மக்கள் தம்மை யுத்தப் பாதிப்பிலிருந்தும் காப்பாற்றுமாறு உலக நாடுகளிடம் கோரிக்கை விடுத்த வேளை, தங்களது உயிரைக் காப்பாற்றி உதவுமாறு அவலக் குரல் எழுப்பிய வேளை இவை பாவும் செவிடன் காதில் ஊதிய சங்கொலியாக, எவர் காதிலும் விழாது போயிற்று. குறிப்பாக ஈழத் தமிழ் மக்கள் தமது 'தொப்புள்கொடி உறவுகளாகக் கருதி வந்த தமிழக மக்களும் அரசும் வாய்மூடி மௌனம் சாதித்தமை வரலாற்றுப் பதிவுகள். தனது இள வயதிலிருந்தே நாடகம் எழுதி, நாடகம் ஆடி, அந்தப் பழக்க தோஷம் காரணமாக அரசிய லில் காலடி எடுத்து வைத்த அந்த நாள்முதல் இந்த நாள்வரை அரசியலில் நாடகமாடிவரும் தமிழக முதல்வர், இன்று தமிழக சட்டசபைத் தேர்தலுக்காகத் தாம் மறந்து 'போய்விட்ட ஈழத்தமிழர்களின் நிலை கண்டு கவலைப்படுகிறாராம். சோனியா காந்தியோ ஈழத் தமிழர் பிரச் சினையில் தான் இந்திய மத்திய அரசு அதிக அக்கறை காட்டி வருவதாகவும், அதற்காக வேண் டிய நடவடிக்கைகளை இந்திய மத்திய அரசு மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்திருக் கிறார். இலங்கையில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின்போது பல்லாயிரக்கணக்கான ஈழத்தமிழ் அப்பாவி மக்கள் உயிரிழக்கவும் அங்கவீனமடையவும், சொத்துச் சுகங்களை இழந்து அகதி முகாம்களில் சொல்லொணாத்துயர வாழ்க்கையை வாழவும் நேர்ந்த சமயம், தமது தொப்புள்கொடி உறவுகள் என்ற உணர்வுடனல்லாது, சாதாரண மனிதாபிமானம் என்ற அடிப்படையிலாவது அந்த அப்பாவித்தமிழ் மக்களுக்கு உதவ முன்வராது, இலங்கை அரசுடனான ராஜீக உறவில் விரிசல் ஏற்படாதவாறு தந்திரமாகக் காய் நகர்த்தி அரசியல் செய்த, அப்பாவி ஈழத்தமிழ் மக்களின் துயரிலும் கண்ணீரிலும் குளிர் காய்ந்து அரசியல் செய்த இந்திய மத்திய அரசும் தமிழக மாநில அரசும் இன்று சட்டசபைத் தேர்தல் என்று வந்தவுடன் எந்த அளவுக்கு ஈழத் தமிழர்களின் நிலைகுறித்து முதலைக்கண்ணீர் வடிக்கின்றன என்பதைப் புரிந்து கொள்ளாமல் இருப்பதற்குத் தமிழக மக்கள் ஒன்றும் விடு பேயர்கள் அல்ல. இவ்வாறு அழுவார் அழுவாரெல்லாம் சட்டசபைத் தேர்தலில் வெற்றி பெற்றாக வேண்டும் என்ற கரைச்சலில் சிக்கி அதற்காக அழுகிறார்களேயல்லாமல் ஈழத் தமிழர்களின் இன்னல் கண்டு துயருறும் உணர்வில் அழுவில்லை என்பதை நன்குணர்ந் துள்ள தமிழ் உணர்வு மிக்க தமிழக மக்கள் இம்முறை இவர்களது துரோகத்தனத்துக்கு நல்லபாடம் புகட்டுவார்கள் என்பதில் எவ்வித ஐயமும் கிடையாது.



# முதுமையில் தொல்லையா?

இளம் வயதில் உடலைக் கட்டுக்கோப்பாக வைத்திருப்பவர்கள் கூட முதுமைப்பருவம் வந்தவுடன் உடம்பும் பருத்து சோர்ந்து போய்விடுவதை நாம் பார்த்திருக்கிறோம். இவர்கள் இவ்வாறு தொடர்ந்து பருமனாக இருப்பதால் பல பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டியிருக்கும்.

மூட்டுவலி, முழங்கால் வலி, இடுப்பு வலி, முதுகு வலி போன்றவை அதிகமாக வரும். குடல் இறக்கம், கால்களில் அசுத்த இரத்தம் தேங்கிய நிலையில் இரத்தக் குழாய்கள் சுருண்டு பெரிதாவது, சிறிது தூரம் நடந்தாலும் மூச்சு இரைப்பு, அடிக்கடி நெஞ்சுச்சளி, சர்க்கரை நோய், இரத்தக் கொழுப்பு அதிகரித்தல், பித்தப்பைக் கல், மிகை இரத்த அழுத்தம் போன்ற தொல்லைகள் உண்டாகும்.

இவர்கள் தங்களுக்கு ஏற்படும் தொல்லைகளிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ள ஒரே மாதிரியான உணவுப்பழக்கத்தைக் கைக்கொள்ள வேண்டும். வேகமாகச் சாப்பிடுவதைத் தவிர்த்து நிதானமாக மென்று சாப்பிட வேண்டும். மற்றவர்களுக்காக உண்பது, மற்றவர்கள் மீதம் வைப்பதை உண்பது போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும். மனச் சோர்வு, படபடப்பு, தனிமை, தோல்வி மனப்பான்மை ஆகியவற்றைத் தவிப்பதற்காகவே பலர் உண்ணுகிறார்கள் என்று கண்டறியப்பட்டுள்ளது. மனதுக்கு இதமான நிகழ்ச்சிகளில் இவர்கள் கலந்து கொள்வது அவசியமானது. சரியான எடையைக் கண்டறிந்து வைத்துக்கொண்டு எடையைச் சீராக வைத்துக் கொள்ள நடப்பது, மெல்லோட்டம் போன்ற பயிற்சிகளில் ஈடுபடலாம்.

சர்க்கரை வியாதி வந்து உடல் பருத்துக் காணப்படுவதும் உண்டு. இத்தகையோர் தெய்வீக மூலிகைகளைச் சாப்பிட்டு நோயைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ளலாம். முதியவர்கள் உடல் இளைப்பதற்கும் அதே சமயம் ஊட்டச்சத்துக் குறையாமல் இருப்பதற்கும் பல்வேறு இயற்கை உணவு முறைகள் உள்ளன. அவற்றைப் பின்பற்றி நடக்கலாம். ✱

# ரஜினிகாந்தால் பாராட்டப்பட்டதை மறக்க இயலாது

சுப்பர் நிலவு தாப்ஸி பேட்டி

கோடம்பாக்கத்தின் சுப்பர் நிலவு தாப்ஸியை 'வந்தான்; வென்றான்' படத்தின் இறுதிக்கட்டப் படப்பிடிப்பில் சந்தித்தோம். மிகக் கலகலப்பாக, படு உற்சாகத்தில் இருந்தார். தமது உற்சாகத்துக்கான காரணத்தையும் அவரே வெளியிட்டார்.

'நான் நடித்த தெலுங்குப் படத்தைப் பார்த்துவிட்டு ரஜனிகாந்த், யார் இந்த துறுதுறுப்பான பெண் என்று தேடிக்கொண்டே இருந்திருக்கிறார். 'ஆடுகளம்' தமிழ்த்திரைப்படப் படப்பிடிப்பில் எனது நடிப்பைப் பார்த்துவிட்டு அடடா, இவள் தானா அந்தப் பெண் என்று ஆச்சரியப்பட்டுப் போனார். என்னைச் சந்தித்து கைகுலுக்கி, நன்றாக நடிக்கிறாய் என்று மனதாரப் பாராட்டினார். அதை நினைக்கும் போதெல்லாம் நான் சந்தோஷப்பட்டுக் கொள்கிறேன்.

கேள்வி- ஜீவாவுடன் நடிக்கும் காட்சிகளில் நெருக்கமாக நடித்திருக்கிறீர்களே?

பதில்- இது என்ன பொறாமையான கேள்வி. படத்துக்கும் அதில் எனது பாத்திரத்துக்கும் அப்படி ஒரு நெருக்கம் தேவைப்பட்டது. படப்பிடிப்பின் இடைவேளையின்போது ஜீவாவும் நானும் சேர்ந்து தமாஷாக பேசிக்கொள்வோம். நான் வசனம் பேசும் போது தப்பாகப் பேசிவிட்டால் அவ்வளவுதான். படப்பிடிப்பு முடிந்ததும் ஜீவா எனது தப்பான உச்சரிப்பை அப்படியே பேசிக்காட்டி விழுந்து விழுந்து சிரிப்பார். அதைக்கண்டு நான் ரென்ஷனாகி விடுவேன். அவர் என்ன தமாஷ் பண்ணுகிறார் என்று அர்த்தம் தெரியாமல் நான் விழிப்பேன். படத்தின் இயக்குனர் தான் விளங்கப் படுத்துவார். எனக்குப் பெரிய தர்ம சங்கடமாகிவிடும்.

கே- அமிதாப்பச்சனுடன் கூட நடிக்கிறீர்களாமே?

ப-அதற்கான வாய்ப்பொன்று கிடைத்ததுதான். ஆனால் நேரம் கிடைக்காததால் அந்த வாய்ப்பை தவறவிட நேர்ந்து விட்டது. தெலுங்குப்படம், 'வந்தான் வென்றான்' தமிழ்படம் என்பவற்றில் தொடர்ந்து நடிக்க வேண்டியிருந்ததால் அந்த வாய்ப்பு தவறியது. பின்னர் இந்தியில் மற்றொரு படத்தில் நடிக்க நேர்ந்தது. அந்தப் படம் வெற்றிப்படமாக அமைந்துவிட்டதாக செய்தி பரவிக்கொண்டிருக்கிறது.

கே-அழகிப் போட்டியில் கலந்து கொண்டீர்களாமே? உங்களது அழகுக்கு, முயற்சி எடுத்தால் உலக அழகிப் பட்டத்தைக் கூட வெல்ல முடியும் என நினைக்கிறேன்.

ப-2008 ஆம் ஆண்டில் 'மிஸ் இந்தியா' அழகிப் போட்டியில் கலந்து கொண்டேன். அதில் அழகிய புதுமுக அழகிக்கான பட்டமும் மற்றொரு பட்டமும் வென்றேன். அந்தவேளை முதல் என்னை வெள்ளாவிப் பெண் என்ற புனைபெயரிலேயே குறிப்பிடுகிறார்கள். ✱





# சகோதரிகளுக்காக

வீட்டுக்கு வீடு வாசற்படி என்று சொல்வார்கள். ஒவ்வொரு வீட்டிலும் பிரச்சினைகள் உண்டு என்பதையே இந்த முதுமொழி எடுத்துக்காட்டுகின்றது. கணவன்- மனைவி பிரச்சினை, சகோதரிகள், சகோதரர்களுக்குள் பிரச்சினை, தகப்பன் மகளுக்கிடையில் பிரச்சினை, தாய்க்கும் மகளுக்கும் இடையில் தகராறு இவ்வாறு ஒவ்வொரு வீட்டையும் யுத்த களமாக மாற்றி பெண்களைத் திணறடித்துக் கொண்டிருக்கும் பிரச்சினைகள் ஏராளம்.

தவிர, காதல் பிரச்சினைகள், காரியாலயப் பிரச்சினைகள், கடன் பிரச்சினைகள் என எத்தனையோ வெளிப்பிரச்சினைகளும் இன்றைய பெண்களுக்கு இருக்கின்றன.

இவ்வாறான பிரச்சினைகளின் சவால்களை எதிர்கொள்ள முடியாமல் தத்தளிக்கும் பெண்கள் தமது மனதைக் குடைந்து கொண்டு இருக்கும் பிரச்சினைகளை- அவற்றினால் உருவாகும் கவலைகளை- தமக்கு நெருங்கியவர்களுடன் பகிர்ந்து கொள்வதன் மூலம் பரிகாரம் தேடி மனஅமைதி பெற்றுக்கொள்ள முயற்சிக்கின்றனர். தம்முடைய மனஉளைச்சலுக்கு முற்றுப்புள்ளி வைக்க முனைகின்றனர். ஆனால் பிரச்சினைகளை அடுத்தவர்களுடன் பகிர்ந்து கொள்வதில் பெண்கள் கவனமாக இருக்க வேண்டியது அவசியம்.

குறிப்பாக தமது சக பணியாளர்கள், மேலதிகாரிகள், பக்கத்துவீட்டு இளைஞர்கள் போன்றவர்களுடன் பிரச்சினைகளைப் பகிர்ந்து கொள்வதைப் பெண்கள் தவிர்த்துக் கொள்வது நல்லது. ஏனெனில் ஆண்கள் ஒரு பெண்ணின் சொந்தப் பிரச்சினைகளை அறிந்து கொள்வதில் ஆர்வம் காட்டுவது மட்டுமன்றி அவள் கூறும் பிரச்சினைகளையே அவளைத் தம்பக்கம் இழுக்கும் தூண்டிலாகவும் பயன்படுத்திக் கொள்கின்றனர். எல்லா ஆண்களையும் இந்த ரகத்தில் சேர்ந்துவிட முடியாது என்றாலும் அநேகர் இப்படித்தான் நடந்து கொள்கின்றனர்.

தம்முடன் பிரச்சினைகளைப் பகிர்ந்துகொள்ளும் பெண்களின் வாழ்க்கையில் காணப்படும் பலவீனங்களை அறிந்து வைத்துக் கொண்டு தாம் நல்லவர்கள் போன்று நடித்து தம்மை நாடி வந்த பெண்ணுக்கு தம்மீது நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் வகையில் நடந்து கொள்கின்றனர்.

இறுதியாக தமது உடல் உணர்வுகளுக்குத் தீனி போடுவதற்காக அதே பெண்களைப் பயன்படுத்திக் கொள்ளவும் அவர்கள் தயங்குவதில்லை.

இவ்வாறான சம்பவங்கள் இன்று நிறையவே இடம்பெறுகின்றன. மேலதிகாரி அல்லது சகபணியாளர்கள் பணஉதவி செய்தல், பதவி உயர்வு வழங்குதல் போன்ற உத்திகள் மூலம் பெண்களைத் தவறாகப் பயன்படுத்துவது பற்றிய செய்திகள் அதிகம் வெளியாகின்றன.

இவ்வாறான சிக்கல்களிலிருந்து விடுபட வேண்டுமானால் பெண்கள் மேலதிகாரிகள், சக பணியாளர்கள் போன்றோரின் ஆதரவு அல்லது அனுதாபத்தைப் பெற்றுக் கொள்ளும் முயற்சிகளைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

இவர்கள் மட்டுமன்றி உங்களுக்கு நெருக்கமான ஆண்களுடன் கதைத்து உங்கள் பிரச்சினைகளுக்கு பரிகாரம் தேடமுற்படுவதும் விபரீதமான விளைவுகளுக்கு காரணமாக அமைந்துவிடலாம்.

எனவே வீட்டுக்கு வெளியே உள்ள ஆண்களிடம் உங்கள் மனச்சுமைகளைக் கொட்டித் தேவையற்ற பிரச்சினைகளை எதிர்கொள்ளாது சிந்தித்துச் செயற்படுவது வரவேற்கத்தக்கது. ✱

# வெள்ளை ரோஜா முள்



மு.சிவநேசன்
sivanesan@usa.com

**விறுவிறுப்பூட்டும் மர்மத்தொடர் - 8**

**டேவிட்டைத் தேடிக் கண்டுபிடிக்கும் தமது முயற்சியில் வெற்றிகண்டு விட்டதாக மகிழ்ந்த சுழியன்ஸ் எதிர்பாராத விதமாகத் தாம் பல காலமாகத் தேடிக் கண்டுபிடிக்க முடியாமல் இருந்த கரோலும் அங்கு இருப்பதைத் தெரிந்து கொண்டதால் இரட்டிப்பு மகிழ்ச்சிக்கு உள்ளாகின்றனர்.**

ஏதோ அசுகை கேட்டு இருளிலும் தொல்லை தூரம் ஓடிவிட்ட கரோல் தீ நாக்குகளைக் கண்டு பதறி மெல்ல மெல்ல அந்தப்பக்கம் வந்தாள். வெளிச்சத்தில் சுழியன்ஸ் நிற்பது தெரிகிறது. அவர்களை நெருங்க முடியாது. கையில் துப்பாக்கிகளுடன் நிற்கிறார்கள். சுட்டுப் பொசுக்கி விடுவார்கள்.

தூரத்தில் அவர்களின் கார் நின்று கொண்டிருந்தது. போய் உள்ளே ஏறி சாரதி ஆசனத்தில் அமர்ந்து ஆராய்ந்தாள். பின் சீட்டில் டானியல் முனகிக் கொண்டு கிடந்தான்.

காரின் சாவி கிடைக்கவில்லை. எதையோ பிடுங்கி வயர்களைப் பொருத்தி அசுர வேகத்தில் காரை எடுத்தாள். சரமாரியாகத் துப்பாக்கி வேட்டுக்களை சுழியன்ஸ் தீர்த்தார்கள். ஆனால் கார் பறந்து விட்டது.

கரடு முரடான பாதையில் எகிறிப் பாய்ந்தது கார். பின் சீட்டில் கிடந்த டானியல் வேதனையில் துடித்தான். சன்னங்கள் டானியலையும் விட்டுவைக்கவில்லை. கரோலின் முழங்கையிலும் ஒரு சன்னம் தைத்திருந்தது.

கத்தி வீசியே குறிவைக்கும் சுழியன்ஸின் துப்பாக்கியா குறிதவறும்? ஆனால் அவர்கள் தீக்குளியலை ரசித்த வேளை சற்றும் எதிர்பாராமல் கரோல் காரைக் கிளப்பிக் கொண்டு தப்பிவிட்டாள்.

''கரோல் பொலிஸூம் உலகமும் உன்னைத் தேடி வலைவிரித்து இருக்கிறது. அவதானம்'' என்று முக்கி முனகினான் டானியல்.

திகைத்துப் போனாலும் நிலைமையைச் சமாளிப்பதில் வல்லவர்கள் சுழியன்ஸ். நிச்சயம் கரோலோ, பொலிஸிடம் போக முடியாது. கரோல் செத்தாலும் மீண்டும் பிடிபடவோ சரணாலயத்தில் அடைபடவோ விரும்பவே மாட்டாள். அத்துடன் நிலைமைகளைச் சாமர்த்தியமாக சமாளிப்பாள் என நினைத்தனர்.

நீண்ட தூரப் பயணத்தில் மிகவும் களைத்துப்போன சுழியன்ஸ் அன்று அங்கே தங்கி ஆறிச் சமைத்து சாப்பிட்டு மறுநாள் இரவு நடைப் பயணமாகப் புறப்படலாம் என நினைத் தார்கள். வேண்டுமென்றால் வாரக் கணக்கில் கூட தங்கலாம். அத்தனை மனோரம்மியமான சூழல் அது.

டானியல் பாடுபட்டு வளர்த்த மிருகங்கள், பறவைகளின் சதை நிறையச் சுவையாக இருக்கும்.

சுமார் பத்து மைல் தூரம் வந்ததும் காரை நிறுத்தினாள் கரோல். டானியலைப் பிணைத்திருந்த கட்டுக்களை அவிழ்த்து அவனை விடுவித்தாள். மார்பின் வலது பக்கம் சன்னம் பாய்ந்த துவாரம் தெரிந்தது. அதனூடாக இரத்தம் கசிந்து கொண்டிருந்தது. அவன் முனகியபடி கிடந்தான்.

அவனைத் தூக்கி முன் ஆசனத்துக்கு மாற்றி இருத்தி பெல்ற்ரால் பிணைத்து விட்டாள். மீண்டும் கார் புறப்பட்டது. போகுமிடம் புரியவில்லை. நெடுஞ்சாலையில் பாதை வந்து முடிவடைந்தது. சந்தியில் நின்ற லொறி ஒன்றின் எஞ்சினுடன் டிரைவர் போராடிக் கொண்டிருந்தான்.

அவனிடம் அருகில் எங்காவது வைத்திய வசதிகள் தென்படுமா என விசாரித்தாள். அடிக்கடி விபத்துக்கள் நடக்கும் அதிவேக நெடுஞ்சாலை என்பதால் லொறிக்காரர்களுக்கு விவரங்கள் தெரிந்திருக்கும்.

'கீழே சிலநூறு மைல்கள் போனால் சரணாலயத்தில் வசதியான ஹொஸ்பிட்டல் உண்டு' என்றான் அவன்.

அவளுக்குப் பகீரென்றது. சரணாலயமா? மீண்டுமா? டானியலைக் காப்பாற்ற தான் சிறைப்பட வேண்டுமே?

''அல்லது மேலே நாற்பது மைல்கள் வரை சென்றால் டொக்டர் ஜேம்ஸ் இருக்கிறார். பைன் மரக் காட்டுச் சந்தியில் இருந்து வலது கைப் பக்கத்துப் பாதையில் ஒன்றரை மைல் உள்ளே போகவேண்டும்'' என்றான்.

''தாங்க்ஸ்'' என்றவள் காரை மேலே கிளப்பினாள். டொக்ரரிடம் பாதுகாப்பாக அவனை ஒப்படைத்து விட்டுத் தான் தப்பிவிட வேண்டும். டொக்ரர் ஜேம்ஸ் உதவி செய்வார் என்ற எண்ணம் பிறந்தது. சுழியன்ஸூக்கு இருவருமே சாட்சிகள். அவர்கள் தேடும் இருவரும் ஒன்றாகவே இருப்பது ஆபத்து என அவள் உணர்ந்தாள். ஒரு கல்லில் இரண்டு மாங்காய் அடித்துவிடுவார்களே. தான் பிடிபட்டு அதனால் டானியல் சாகக்கூடாது என்பது அவள் எண்ணம்.

> **கரோல் காரின் பின் சீற்றைக் கழற்றிப் பாறையின் மேல் வைத்தாள். டானியலை இறக்கி அதன்மீது மல்லாந்து படுக்க விட்டாள். இரத்த வாடை வயிற்றைக் குமட்டியது. தண்ணீர் தண்ணீர் என்று முனகினான் அவன்.**

நெடுஞ்சாலையில் கார் சிட்டாய்ப் பறந் தது. அதுவும் சுழியன்ஸின் கார் என்றால் சொல்லவா வேண்டும்?

வழியில் பொலீஸ் இடக்கு முடக்காக காரை மறித்து விட்டது. எதிர்பாராத தடை. கரோலின் இதயம் நின்றாற் போல இருந்தது.

உள்ளே பார்த்தனர் பொலீஸார். அளவான இருட்டு. அவர்கள் சுழியன்ஸை எதிர்பார்த்திருக்க வேண்டும். அவர்களைப் பற்றிய கதையில் வரும் கார் போல இது இருந்ததுதான் காரணம்.

டானியல் ஸ்மார்ட்டாக முன்னால் இருப்பது போன்ற தோற்றம். ஸ்ரெயரிங்கில் ஒரு பெண். டீசன்டான ஒரு சோடி போல இருந்தது. பொலீஸ் மேலே போக அனுமதித்தது ஆச்சரியமாக இருந்தது.

பாவம் பொலீஸ். கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை. கரோல் தப்பிவிட்டாள்.

அவளைக் கண்டுபிடிப்பதற்கு துடித்தவர்கள் பலர். சன்மானமாக இருபத்தையாயிரம் டொலர் தொகை அறிவிக்கப்பட்டதே அவர்களின் துடிப்புக்குக் காரணம். பொலிஸ் அதிகாரிகள், உளவு நிறுவனத்தார், பத்திரிகைக்காரர்கள், கிரிமினல்கள் எனப் பலருமே கரோல் வேட்டையில் இறங்கி இருந்தனர்.

அவளைப் பிடித்து விட்டால் இருபத்தையாயிரம் டொலர்கள் மட்டுமா கிடைக்கும்? சிலவேளை அத்தனை சொத்துக்களையும் சுருட்டி விடலாம் என மனப்பால் குடித்தவர்கள் பலர்.

ஆரம்பத்தில் கரோல் தப்பிய செய்தி பெரிதாகப் பரபரப்படையவில்லை. ஒரு பெண் தப்பிவிட்டாள் என்ற செய்தியே பத்திரிகைகளுக்குத் தரப்பட்டது. ஆனால் பத்திரிகையாளர்கள் எங்கோ சுழியோடி விவரத்தை அம்பலப்படுத்தி விட்டார்கள்.

ஜோர்ஜ் என்ற செய்தியாளர் செய்தி சேகரித்த வகையில் பத்தாயிரம் டொலரை சன்மானமாகப் பெற்றிருந்தார். அவருடைய பத்திரிகை நிறுவனமே முதலில் செய்தியைப் புட்டு வைத்தது.

இப்போது விடயம் சந்திக்கு வந்துவிட்டது. எல்லாப் பத்திரிகைகளிலும் கரோல் பேக்கரின் செய்திதான் தலைப்புச் செய்தியாக வந்து கொண்டிருக்கிறது. அவளின் உருப்படியான படங்கள் கிடைக்காதது பத்திரிகைகளுக்குப் பெரிய பிரச்சனையாக இருந்தது.

கரோல் நிதானமாக ஆனால் வேகமாகக் காரைச் செலுத்திக் கொண்டிருந்தாள். அருகே டானியல் முனகிக் கொண்டு - தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு - இருந்தான்.

பொழுது விடிந்துவிட்டது. இனிக் கிராமத்துக்குள் நுழைவது ஆபத்து என நினைத்தாள் கரோல். சாலையைப் பிரிந்து காட்டுக்குள் நுழையும் வெளி ஒன்றினூடே காரை செலுத்தினாள். அடர்ந்து இருண்ட மரங்களின் ஊடே சற்றுத்தூரம் சென்றதும் ஓர் பெரிய பாறை அருகில் காரை நிறுத்திவிட்டாள். இனி இருளும் வரை காத்திருக்க வேண்டும்.

காரின் பின் சீற்றை கழற்றி பாறை மேலே வைத்தாள். டானியலை இறக்கி அதன் மீது மல்லாந்து படுக்க விட்டாள். இரத்த வாடை வயிற்றைக் குமட்டியது. ''தண்ணீர் தண்ணீர்'' என்று முனகினான் அவன்.

தவித்தாள் அவள். ஓடிவந்து காரின் பின் டிக்கியைத் திறந்தாள். நல்ல வேளை ஒரு தண்ணீர்க் கான் இருந்தது. இரண்டு சூட்கேஸ்களில் சுழியன்களின் உடுப்புக்கள் இருந்தன. தண்ணீர்க் கானையும் சில உடுப்புக்களையும் எடுத்துக் கொண்டாள். டானியலின் நாவை நனைத்துவிட்டாள். முகத்தைத் துடைத்துவிட்டாள். தான் விபத்தில் சிக்கிய வேளை அவன் இப்படித்தான் செய்திருப்பான் என நினைத்தாள். மனதிலே காதல்தான் பொங்கி எழுந்தது. அவன் நிலைமைக்காக கண்ணீர் வடித்தாள். தேம்பித் தேம்பி அழுதாள்.

அவன் அணிந்திருந்த ஆடைகளில் இரத்தம் வடிந்து உறைந்து கிடந்தது. காயங்களில் இருந்து அவற்றை மெதுவாகப் பிரித்தாள். சுழியன்ஸின் பெட்டிக்குள் இருந்த கத்தியை எடுத்து வந்து ஆடைகளைக் கிழித்துக் கழற்றி எடுத்தாள். அவனைத் துடைத்து எடுத்து சுத்தம் செய்து தளர்வான உடைகளைப் போட்டுவிட்டாள். காயத்துக்குக் கட்டுப்போட்டாள்.

அவன் பாதி மயக்கத்தில் முனகிக் கொண்டும் பதற்றிக் கொண்டும் இருந்தான். அவனுக்கு உடனடி ஆபத்து இல்லை என்பதை உணர்ந்தாள். எனினும் மாலை வரை காத்திருக்க அவள் மனம் ஒப்பவில்லை. உடலும் மனமும் தளர்ந்து போனாள்.

இனி அவளால் அவனை அசைக்க இயலாது. அவன் அப்படியே இருக்கட்டும். தான் போய் டொக்டர் ஜேம்ஸ் குழுவை அழைத்துவரலாம் என நினைத்தாள்.

*(இனியும் முள்ளுக் குத்தும்)*

# பணச்சடங்கு

இளைய அப்துல்லாஹ்



எனது பேரனிடம் நீளமான ஒரு கணக்குப் புத்தகம் இருந்தது. அதன் முன் பக்கத்தில் எங்களது புது வீடு குடிபுகுந்த போது வந்து பணம் தந்தவர்களின் பெயர்கள் தந்த பணத் தொகையோடு அவர் எழுதி வைத்திருந்தார்.

அம்மாவின் வடிவான எழுத்தில் அத்தனை பேரினது பெயர்களும் அதில் இருந்தன.

பணம் தந்தவர்களின் வீடுகளில் நடக்கும் கலியாணவீடு, சமாத்திய வீடு, புதுவீடு குடிபுகுதல் போன்ற விழாக்களுக்கு எங்களது வீட்டுக்கு வந்து காசு தந்தவர்களின் தொகைக்கு ஒரு பத்து ரூபாய் அதிகமான வைத்து அம்மாவோ அம்மையாவோ என்வலப்பில் போட்டு அதன் முகப்பில் பெயரும் எழுதி காசுத்தொகையும் எழுதிக் கொடுப்பார்கள்.

இது எழுபதுகளில் நடந்தது. எங்களது சொந்த இடமான புளியங்குளம் கிராமத்தில் வாழ்ந்த நாங்கள் எல்லோரும் செழிப்பாகவே வாழ்ந்தோம். பெரிய அளவுக்கு வறுமை எங்களை வாட்டவில்லை. ஒட்டு சுட்டானுக்கு அருகில் உள்ள எங்களது சிறிய கிராமத்தில் உள்ள எல்லை வீடுகளையும் எண்ணிப் பார்த்து விடலாம்.

முத்தையன் கட்டு தண்ணீர் வரும் பெரிய வாய்க்கால், ஒட்டு சுட்டான் பக்கம் குளத்தின் எல்லை, அப்படியே கந்தப் பிள்ளை வீடு, கீழே எங்களது வீட்டுக்கு பின்னால் கொஞ்சத் தூரம் அதுதான் புளியங் குளம் கிராமம்.

> இங்கு வரவுக்குள் செலவு செய்ய முடியாத பெரும் நெருக் கடியான வாழ்வில் தான் எல்லோரும் கிடந்து உழலுகிறார்கள். வரவு மாதம் ஆயிரம் பவுன் என்றால், வீட்டு வாடகை 800 பவுண். இது சாதாரன ஒரு வீட்டுக்கு போய்விடும். பிறகு தொலைபேசி, கடன் அட்டை, சாப்பாடு, மின்சாரம், தண்ணீர், பில், போக்குவரத்து, கார் என்று செலவோ செலவு.

உண்மையில் இப்பொழுது அங்கு இருந்திருந்தால் எமது கிராமத்தின் அபிவிருத்திக்கு மக்களை ஒன்றிணைத்து ஏதாவது செய்திருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது.

இந்தச் சிறிய கிராமத்தவர்கள் பக்கத்துக் கிராமத்தவர்களோடு எப்பொழுதும் அன்பைப் பேணியவர்கள். குட்டிக் குட்டி ஊர்கள் சுற்றி சுற்றி இருந்த அழகே தனியானது தான்.

எங்கள் ஊரில் ஒவ் வொருவர் வீட்டிலும் எனது பேரனாரிடம் இருந்தது போல ஒரு வரவுக் கொப்பி இருந்தது.

ஆனால் 'பணச்சடங்கு' என்று நடத்துவதில்லை. ஏனெனில் அவ்வளவு தேவை இருந்ததில்லை எங்களுக்கு.

நெல், மிளகாய், கச்சான், உழுந்து, பயறு, வாழை என்று செய்கை பண்ணாத பயிர் எதுவும் இல்லை. யாரோ சொன்னார்கள் என்று அம்மய்யா எங்களுடைய வயலில் சணலும் விதைத்தார்.

சணல் வயலுக்கு நல்லது, மண்ணுவக்கு புரதம் கொடுக்கும் என்று தான் சணல் விதைத்தார். ஒருமுறை மஞ்சள் பூவோடு வயல் நிறைய சணல் பயிர் நின்று கொண்டிருந்தது அழகாக இருந்தது.

புளியங்குளம் எப்பொழுதும் தண்ணியை ஈந்து கொண்டிருந்தது. எங்கள் தோட்டங்கள் எப்பொழுதும் செழிப்பாகவே இருந்தன.

நான் உடுப்பிட்டிக்கு வந்த பொழுது தான் "பணச்சடங்கு" பற்றிக் கேள்விப்பட நேர்ந்தது. பனை மரத்தில் ஒலிபெருக்கியைக் கட்டி பாட்டுப் போட்டு நடக்கும். 'அற்ஹோம்'' என்று அழைப்பிதழ் இருக்கும். இந்த 'At home' என்பது இங்கே லண்டனில் இருந்துதான் போயிருக்கிறது.

விடுமுறைக்கு வேறொரு இடத்துக்குப் போய்விட்டு குதூகலமான மனநிலையோடு வருகின்ற வீட்டுக்காரர்கள், தமது உறவினர்களை அழைத்து வீட்டில் விருந்து வைத்து தமது விடுமுறை அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார்கள்.

அதற்குத் தான் 'At home ' என்று பெயரிட்டழைத்தார்கள் இங்கு லண்டனில். அது பணச்சடங்குக்கான பெயராக 'அற்ஹோம்'' ஆக மாறியது யாழ்ப் பாணத்தில். யாழ்ப்பாணத்திலும் வடமராட்சிப் பகுதியில் தான் பணச்சடங்கு பிரபல்யம்.

தேத்தண்ணி, பிஸ்கட், பலகாரம் கொடுத்து சிறு விருந்தோடு பணச்சடங்கு நடைபெறும். பொதுவாக இது பணம் சம்பந்தப்பட்ட விழாவாக இருந்தது.

பிறகு கரையோர மக்களும் பணச் சடங்கை நடத்தினார்கள். யாழ்ப்பாணத்தில் குருநகர் பகுதிகளிலும் பணச்சடங்கு பிரபல்யம்.

பணச்சடங்கில் பணம் கொடுப்பவரின் பெயர் விபரங்கள் எல்லாம் முறையாக குறிப்பேட்டில் பதிந்து வைக்கப்படும். பிறகு அதற்குப் பணம் கொடுத்தவருக்குக் கொஞ்சம் அதிகமாக் கொடுக்க வேண்டும். சில இடங்களில்பணச் சடங்கு பெரும் பிரச்சனையாகவே வந்துவிட்டது. ஒரு இடத்தில் ஒருவர் பணச் சடங்கை வைக்க மற்றவர்கள் பணம் கொடுப்பார்கள்.

இப்படி அதே இடத்தில் ஒரு மாதத்தில் நான்கு 'அற்ஹோம்'' நடந்தால் பணம் கொடுப்பவர்கள் பாடு பெரும் கஷ்டமாகப் போய் விடும்.

அதனால் பணச்சடங்கு ஒருவரைப் பணமுடையில் இருந்து காப்பாற்றுவதற்குப் பதிலாக அவரை இன்னும் இன்னும் பணமுடை உடையவராக ஆக்கிவி டுமோ என்ற அச்சம் ஏற்பட்டு விட்டது.

அதற்குத் தீர்வாக குருநகரில் ஒரு வேலை செய்தார்கள்.

ஒரு சங்கம் அமைத்து அந்தச் சங்கத்தில் பதிவு செய்து தான் பணச்சடங்கு நடத்த வேண்டும் என நிர்ணயித்திருந்தார்கள்.

அந்தச் சங்கம் மாதத்துக்கு ஒரு பணச் சடங்கு செய்ய அனுமதி கொடுத்தது. இது பணச்சடங்கு தொடர்பான ஒரு கட்டுப்பாட்டை குருநகரில் கொண்டு வந்தது.

மல்லாகம் போன்ற இடங்களில் பணச் சடங்குக்குப் பணம் கொடுக்கின்றவர்கள் அவர்கள் சடங்கு நடத்துகிற காலத்திற்கு ஏற்ப திரும்பிக் கொடுக்கும் போது அதிகமாக அதாவது, கிட்டத்தட்ட வட்டி போல ஒரு தொகையைச் சேர்த்துக் கொடுக்க வேண்டும்.

அப்படி இல்லாவிடில் சண்டை கூட வந்த சந்தர்ப்பங்களும் உண்டு. பணச் சடங்குக்குக் போக முடியாதவர்கள் வரவுக் கொப்பியைப் பார்த்து பணத்தை சின்னப் பிள்ளைகளிடம் கொடுத்து விடுவார்கள். அந்தக் காலத்தில் பெடியன்களுக்கு பணச் சடங்குக்கு போவது என்றால் வலு கொண்டாட்டம்.

போய் பிஸ்கட் சாப்பிட்டு, தேத்தண்ணி குடித்து பிள்ளைகளோடு விளையாடலாம் தானே.

பணக்கஷ்டத்தை இப்படி கிராம மக்கள் போக்கிக் கொண்டிருந்தார்கள்.

போனவாரம் எங்கள் வீட்டு முற்றத்தில் தபால்காரர் எதிர்ப்பட்டார். இங்கு லண்டனில் தபால்காரர் எவ்வளவு பழக்கமானவராக இருந்தாலும் றோட்டில் வைத்துத் தபாலைத் தரமாட்டார்.

என்ன வீட்டு இலக்குமோ அந்த வீட்டு தபால் பெட்டியில் அல்லது அந்த வீட்டில் கொண்டு போய் தபால் போடும் ஓட்டையால் தான் போடுவார். ஒவ்வொரு வீட்டுக் கதவிலும் தபால் போடும் ஓட்டை இருக்கும்.

தபால்காரர் சொன்னார், இப்பொழுது தபால் எங்கே வருகிறது எல்லாம் 'பில்'லுகள் தான் வருகின்றன, என்று.

உண்மைதான். இங்கு வரவுக்குள் செலவு செய்ய முடியாத பெரும் நெருக் கடியான வாழ்வில் தான் எல்லோரும் கிடந்து உழலுகிறார்கள். வரவு மாதம் ஆயிரம் பவுண் என்றால், வீட்டு வாடகை 800 பவுண். இது சாதாரண ஒரு வீட்டுக்கு போய்விடும். பிறகு தொலைபேசி, கடன் அட்டை, சாப்பாடு, மின்சாரம், தண்ணீர், பில், போக்குவரத்து, கார் என்று செலவோ செலவு.

அதற்காகத்தான் எல்லோரும் உழைக்க வேண்டியுள்ளது. ஒவ்வொருவரும் உழைக்க வேண்டியுள்ளது.

அனேகமானவர்களுக்கு கடன் தலை தூக்க முடியாமல் போய் விடும். பெரும் கஷ்டத்தில் மூழ்கி விடுவார்கள்.

வங்கிக்குப் போகும் நேரமெல்லாம் "கடன் எடுங்கோ, கடன் எடுங்கோ" என்று என்னை வற்புறுத்துவார்கள். நானோ மனைவியோ கடன் அற்ற வாழ்வைத்தான் விடும்புகிறோம்.

எப்படியாவது வருமானத்துக்குள் செலவழித்து வாழ இங்குள்ள கடன் தரும் நிறுவனங்கள் விட மாட்டேன் என்கின்றன.

பின்னால் பிடித்திழுத்து கடனோடு வாழங்கள் என்றே வற்புறுத்துகின்றன.

எனது நண்பர் ஒருவரை வங்கி உயர் அலுவலர் கடன் தருகிறோம் வாருங்கள் என்று கூப்பிட்டு 5000 பவுண் கடன் கொடுத்துள்ளார்.

அவரும் வாங்கிச் செலவழித்துவிட்டார். அவர் கொஞ்சம் கொஞ்சமாகத் திருப்பிக் கட்டிக் கொண்டிருக்க பிறகு ஒரு முறை போக 8000 பவுண் கடன் தருகிறோம். 3000 பவுண் கழித்து விட்டு விடுகிறோம் என்றார்கள். அவரும் சரி என்றிருக்கிறார். இப்பொழுது அவருக்கு 8000 கடன்.

சும்மா இருக்க விடமாட்டார்கள். இங்கு வட்டிக்குப் பணம் கொடுக்கும் தனிப்பட்டவர்களும் இருக்கிறார்கள்.

வட்டிக்கு பணம் கொடுத்துச் சம்பாதிப்பது இங்கு சட்டப்படி கிரிமினல் குற்றம்.

வருமானம் தரும் ஒவ்வொரு பென்ஸுக்கும், அதாவது ஒவ்வொரு சதத்துக்கும் அரசாங்கத்துக்கு வரி செலுத்த வேண்டும் ஒவ்வொருவரும்.

இங்கு கிழக்கு லண்டன் பகுதியில் சட்ட விரோதமாக கடன் கொடுத்து வட்டி வாங்குகின்ற தமிழர் ஒருவரை "ஒப்பிறேஸன் ஷாக்'' நடவடிக்கை மூலம் லண்டன் பொலிஸார் கைது செய்து தண்டனை வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள்.

குற்றம் சாட்டப்பட்ட 68வயதுடைய அந்த நபரை 2011 மார்ச் மாதம் 24 ஆம் திகதி நீதிமன்றம் குற்றவாளி என்று தீர்ப்பளித்துள்ளது.

அவர் 2003 ஆம் ஆண்டில் இருந்து 2010ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 700 வரையான வட்டிக்கு கடன் கொடுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு 5லட்சம் பவுண் வரை வசூலித்துள்ளதாக நீதிமன்றம் சொல்லியிருக்கிறது.

தமிழர்களுக்கே இவர் வட்டிக்குக் கடன் கொடுத்திருக்கிறார். வ்ட்டியை வாங்குவதில் கறாராக நடத்து கொண்டதாக அவரிடம் வட்டிக்கு பணம் வாங்கியவர்கள் சொல்கிறீர்கள்..

அவரிடம் கடன் வாங்கிய ஒருவர் இங்கு லண்டனில் Illegal Money lending Team க்கு புகார் கொடுத்ததை யடுத்தே, அவர் கைது செய்யப்பட்டு தண்டனை வழங்கப்பட்டிருகிறது.


லண்டனிலும் "பணச்சடங்கு" வைத்தால் நல்லது போலத் தான் இருக்கிறது. என்று எனது நண்பன் சிவா சொல்கிறான். உண்மை தான். லேசாக இருக்கும்.

கவிஞர் சோ.ப சொல்வார், எங்கடை புத்தக வெளியீட்டு விழாக்கள் எல்லாம் பணச்சடங்கு போலத்தான் இருக்கிறது என்று.

வேறென்ன செய்வது? பணம் சேர்ப்பதற்கு வேறென்ன வழி? ஒன்றுமே புரியவில்லை. ⋆



# கிண்ணம் விழுங்கியவைகள்





உலகக் கிண்ணக் கிரிக்கெட் திருவிழாக்காலம் முடிவுக்கு வந்திருக்கிறது. பல அணிகள் மோதிய போதிலும், இந்திய அணியின் வெற்றியுடன், 10ஆவது உலகக் கிண்ணம் மைதானத்தைவிட்டு வெளியேறியுள்ளது. இருந்த போதிலும், கிரிக்கெட் போட்டியை விளம்பரப்படுத்தியும், விற்பனை செய்தும், பரிசு கொடுத்தும் விறுவிறுப்பூட்டிய ஊடகங்களினது பணி இன்னும் முடியவேயில்லை.

இப்போதும் கூட அந்தப் போட்டி தொடர்பான சுவாரஸ்யமிக்க புதினங்களை பரப்பிக்கொண்டிருப்பதில் சாதனை படைத்துவருகின்றன. இவை பரப்பிவரும் சுவாரஸ்யங்களும், வியப்பூட்டும் தகவல்களும் அதிசயிக்க வைக்கும் கணங்களை நோக்கர்கள் மத்தியில் ஏற்படுத்தினாலும், அவையனைத்தும் 'உலகக் கிண்ணம்' என்ற ஒரு சடப்பொருள் விழுங்கியவைகளாகவே பார்க்கப்படல் வேண்டும். போட்டிகளில் விளையாடிய வீரர்கள் கோடிகோடியாகப் பரிசு பெற்றதும், பலலட்ச ரூபாய் பெறுமதியான விளம்பரங்களில் பங்கேற்கக் கைச்சாத்திட்டதும், பிரபல்யங்களைக் தேடிக்கொண்டதும் போக, இப்போது சூடுபிடித்திருப்பது இந்த உலகக் கிண்ணத்துக்குப் பின்னரான புதினங்கள்தான்.



## சூட்டைத் தணித்த போட்டி

ஆரம்பம் முதலே இந்தியாவும், பாகிஸ்தானும் மோதிக்கொள்ளும் போட்டி மிகவும் விறுவிறுப்பை எட்டியிருந்தது. இப்போட்டியினூடாக, இரு நாட்டு அரசியலிலும் ஏற்பட்டு வரும் நல்லுறவு மேலும் வலுக்குமென பல அரசியல்வாதிகளும் கருத்துத் தெரிவித்து வந்தனர். பாகிஸ்தான் பிரதமர் உட்பட்ட அரசியல் தலைவர்கள், இந்திய அரசியல் தலைவர்களுடன் ஒன்றாக அமர்ந்திருந்து பொது நிகழ்வொன்றில் பங்குகொண்ட விந்தைகளும் நிகழ்ந்திருந்தன. அத்துடன் முதல்முதலாக குற்றச்சாட்டுக்களைத் தவிர்த்து வாழ்த்துக் கூறிக்கொள்ளும் சந்தர்ப்பங்களும் ஏற்பட்டன.



இந்த நல்ல தருணங்களை ஏற்படுத்திய போட்டிதான் ஈடுசெய்யமுடியாத ஓர் நகைச்சுவை ஆளுமையின் உயிரைப் பறித்திருக்கிறது. வியாகத் அலி, 1973ஆம் ஆண்டிலிருந்து பாகிஸ்தானியத் திலையுலகின் முக்கியமான நகைச்சுவை நடிகர். இவர் பாகிஸ்தான் - இந்திய அணிகளுக்கிடையிலான அரையிறுதிப் போட்டியில், பாகிஸ்தான் அணியின் தோல்வியை தாங்கிக் கொள்ளாது மாரடைப்பால் மரணமடைந்திருக்கிறார்.

## நிர்வாணத்தை பரிசளிக்கிறேன்

முகத்தில் சாயம் பூசிக்கொள்ளல், தாம் விரும்பும் வீரரின் பெயரை, உருவத்தை தமது உடலில் பச்சை குத்திக்கொள்ளுதல் எனப் பல வேடிக்கைகள், நடந்து முடிந்த உலகக் கிண்ணப் போட்டியின்போது அரங்கேறியிருந்தன. அதில் இம்முறை உலகக் கிண்ணத்தை இந்தியா வென்றெடுக்குமானால் தான் மைதானத்தைச் சுற்றி நிர்வாணமாக ஓடுவேன் என கிரிக்கெட் ரசிகர்களுக்கு புது உற்சாகத்தை வழங்கியிருந்தார் பூனம் பாண்டே என்ற மும்பாய் மொடல் அழகி. இந்த அவலத்தைப் பார்க்கவே, உலகக் கிண்ண இறுதிப்போட்டி நடைபெற்ற தினத்தைப் பலரும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்ததை நாம் அறிவோம். போட்டியின் இறுதித் தருணத்தில் இந்திய அணி பெறவேண்டியிருந்த நான்கு ஓட்டங்களுக்குப் பதிலாக ஒரே பந்தில் ஆறு ஓட்டங்களை விளாசித் தள்ளிய இந்திய அணியின் தலைவர் மகேந்திரசிங் டோனி, அந்த மொடல் அழகி பூனம் பாண்டேயை மனத்தில் நினைத்துக்கொண்டுதான் விளையாடுகிறார் என புலம்பிய இலங்கை அணி ரசிகர்களும் இருக்கவே செய்தனர். கடைசியில் இறுதிப் போட்டியில் இந்திய அணி வெற்றி பெற்றுக் கிண்ணத்தைக் கைப்பற்றிக்கொண்டது. ஆனால் பூனம் பாண்டேயின் நிர்வாண ஓட்டம் கைவிடப்பட்டுவிட்டது. அன்றைய தினத்திலிருந்து அவரது கைத்தொலைபேசி செயலிழந்துள்ளது. பொலிஸார் அவரைக் கைதுசெய்வதற்காக தீவிர தேடுதலை நடத்திவருகின்றனர். இந்தியச் சட்டங்களும் மக்களும் இடம்தராததால் தான், தனது முடிவை வாபஸ் பெறுவதாக பூனம் பாண்டே தெரிவித்திருக்கிறார் என்ற உறுதிப்படுத்தப்படாத தகவலும் வெளியாகியுள்ளது. பிரபல்யம் தேடிக்கொள்வதில் இப்படியும் ஒரு உத்தி.



## சிறுநீர்ப்பை சமன் உலகக் கிண்ணம்

**அண்மையில் இந்தியச் சனத்தொகை 121 கோடியைக் கடந்துள்ளது என்ற செய்தி வெளியாகியிருந்தது. அதில் அடங்கும் தங்கக் குடிமகன் ஒருவர் உலகக் கிண்ணப் போட்டியைக் கண்டுகளிக்க தனது சிறுநீரகத்தைத் தருகிறேன். நுழைவுச் சீட்டொன்று தாருங்கள் என்று கெஞ்சியிருக்கிறார். பாஞ்சாப் கிரிக்கெட் சங்க அலுவலகத்தில் இடம்பெற்ற நுழைவுச்சீட்டு விற்பனையின்போதே அவர் இவ்வாறு கூறி உலகக் கிண்ணப் போட்டியை சுவாரஸ்யப்படுத்தியிருக்கிறார்.** சாதாரண போட்டியொன்றுக்கு 800 ரூபாவுக்கு விற்பனையாகும் நுழைவுச் சீட்டொன்று இப்போட்டியின் ஆரம்பம் முதலே விலை அதிகரிப்புக்குள்ளாகி, சாதாரணமாக 3500 ரூபாவாகியிருந்தது. இறுதிப் போட்டிக்கான ஒரு நுழைவுச் சீட்டு ஒரு லட்சத்து இருபதாயிரம் ரூபா வரை விற்பனையானதாக கூறப்படுகிறது. ஒரு நாளைக்கு ஒரு ரூபா பெறுவதற்கே பல கடைகளின் படியேறும் பழைய மனிதர்களும் தென்னாசிய நாடுகளில் தான் அதிகம் உள்ளனர். இந்த நிலையில் 2015ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள அடுத்த உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியும் ஆசிய நாடுகளில் நடைபெறுமானால், ஒருவேளை தமது இருதயத்தை விற்றே நுழைவுச் சீட்டு வாங்குவதற்கு நமது ஆசிய நாட்டு ரசிகர்கள் முன்வரக்கூடும். நல்லவேளை, அடுத்த உலகக் கிண்ணப் போட்டிகள் அவுஸ்திரேலியா - நியூஸிலாந்தில் நடைபெற ஏற்பாடாகி விட்டது. (19 ஆம் பக்கம் பார்க்க)

**அட்சயன்**







# ஒரே மாதிரியான வேடங்களில் நடிக்கவில்லை - ஜெனிலியா

ஒரே மாதிரியான வேடங்களில் நடிக்க வில்லை என்று ஜெனிலியா கூறியுள்ளார். இது குறித்து அவர் தெரிவிக்கையில், தெலுங்கில் இருந்து தமிழுக்கு ரீமேக் செய்யும் போது, அங்கு நடித்த அதே வேடத்தை மீண்டும் செய்ய வேண்டிய நிலை வரும். அதனைத் தவிர்க்க முடியாது. இதை வைத்துக்கொண்டு ஒரே மாதிரியான வேடங்களில் நடிக்கிறேன் என்று கூறுவதை ஏற்க முடியாது.

இப்போது நடித்துள்ள உருமி மலையாளத்தில் வெளிவந்துவிட்டது. இதில் என் நடிப்பை எல்லோரும் பாராட்டுகிறார்கள். இந்தப் படத்துக்காக களரி சண்டை கற்றேன். படத்தில் அதைப் பார்க்கும் போது எனக்கே பிரமிப்பாக இருக்கிறது. இதையடுத்து விஜய்யுடன் வேலாயுதம் படத்தில் நடித்து வருகிறேன். இதில் எனக்கு பொறுப்பான வேடம் அளிக்கப்பட்டிருக்கிறது - என்றார்.

# அனுஷ்கா மீது பரிதாபப்பட்ட விக்ரம்

படத்தை ஆரம்பித்ததிலிருந்து படப்பிடிப்பை முடிக்கும் வரையில் விஜய் இயக்கத்தில் தயாரான படத்தின் பெயரில் குழப்பம் இருந்து வந்தது. இந்தப் படத்தில் தேசிய விருது பெற்ற விக்ரம் நடிக்கிறார்.

படத்தின் தயாரிப்பாளர் மோகன் நடராஜன் இந்தக் குழப்பத்தை முடிவுக்குக் கொண்டு வந்து, 'தெய்வ திருமகன்' என்ற பெயரை வெளியிட்டுள்ளார். படப்பிடிப்பு தற்போது முடிவுக்கு வந்துவிட்டது. அடுத்த கட்ட வேலைகள் நடைபெற்றுவருகின்றன. ஏப்ரல் மாதம், இரண்டாவது வாரம் ஓடியோ வெளியீடு நடைபெறவுள்ளது. மே மாதம் படத்தை வெளியிடத் திட்டமிட்டுள்ளோம் - என்றார் இயக்குநர் விஜய்.

தெய்வ திருமகன் படத்தில் உள்ள தனது, குழந்தைத்தனமான நடிப்பைக் காட்டி, ஊடக சந்திப்பின்போது கைத்தட்டலை வாங்கினார் விக்ரம். ''படத்தில் மனநிலை பாதித்தவராக நடித்த அனுபவத்தை மறக்க முடியாது.'' - என்று கூறிய விக்ரம், படத்தில் முக்கியமான வேடத்தில் நடித்துள்ள அனுஷ்கா உடல் நிலை சரியில்லாத காரணத்தால் அங்கே வர முடியாமல் போனதைக் கவலையுடன் குறிப்பிட்டார்.

படத்தில் நாசர், சந்தானம், அமலா பால், ஒய்.ஜி.மகேந்திரன், எம்.எஸ். பாஸ்கர், சாரா, பளாக் பாண்டி, கே.கே. மற்றும் பலர் நடித்துள்ளார்கள்.





# சச்சினுடன் புகைப்ப எடுக்கவேண்டும் —

சச்சினுடன் ஒரேயொரு புகைப்படம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது தா
சினேகாவின் நீண்ட நாள் ஆசையாம். உலகக் கிண்ணக் கிரிக்கெட்டில் கிண்
இந்திய அணி உலகக் கிண்ணத்தைச் சச்சினுக்குச் சமர்ப்பித்துக் கௌரவித்துள்ள

இந்நிலையில் சச்சின் பற்றி சினேகா அளித்துள்ள பேட்டியில், சச்சினுடன்
எடுத்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். நான் சச்சினின் பரம ரசிகை. வாழ்க்கை
திற்குப் போனாலும் குடிபானங்களைத் தொடமாட்டேன் என்று தன்னுடைய
சத்தியம் செய்து கொடுத்ததாகப் பத்திரிகைகளில் படித்திருக்கிறேன்.

ஒரு மதுபான நிறுவனம் 20 கோடி ரூபா (இந்திய மதிப்பில்) கொடுத்து
நடிக்குமாறு கேட்டபோது, சச்சின் உறுதியாக மறுத்துட்டாராம். அப்ப
புகைப்படம் எடுக்கவேண்டும் என்று எனக்கு நீண்டநாள் ஆசை - என்றார் சினே

# ரசிகர்களைக் கவர்ந்த

கடந்த 3 மாதங்களில் வெளியான படங்களில் இயக்குநர், ஹீரோ, ஹீரோயி
உட்பட 77 பேர் அறிமுகமாகியுள்ளனர். இந்த ஆண்டும் தமிழ் சினிமாவில் புது
தொடர்ந்து கொண்டிருக்கிறது. இந்தியாவில், வேறெந்த மொழியிலும் இல்ல
திரைப்படத்துறையில் புதுமுகங்கள் அறிமுகம் அதிகமாகிக் கொண் வருகிற

கடந்த ஆண்டு 55 ஹீரோக்களும், 60 ஹீரோயின்களும் அறிமு மானார்க
மட்டுமே இந்த ஆண்டும் நடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்நிலையில் இந்த ஆண்டின் ஆரம்பத்திலேயே புதுமுகங்களின் ஆதிக்கம்
ஆரம்பித்திருக்கிறது. கடந்த மூன்று மாதத்தில் 35 நேரடி தமிழ்ப் படங்களு
திரைப்படங்களும் வெளிவந்துள்ளன.

இந்தப் படங்களின் மூலம் 24 இயக்குநர்கள், 18 ஹீரோக்கள், 20 ஹீரோயின்
கிறார்கள். அறிமுகமான 20 ஹீரோயின்களில் ஆடுகளம் டாப்ஸி ரசிகர்களை
இவர்கள் தவிர 15 புதிய இசையமைப்பாளர்களும் களத்தில் இறங்கியுள்ளனர்.

கடந்த ஆண்டுகளின் சராசரி எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது படங்கள் வெ
கள் அறிமுகமானதும் இந்த ஆண்டு அதிகமாக இருக்கிறது. எனவே 2011ஆம் ஆ
ஆதிக்கம் நிறைந்ததாக இருக்கும் என்று தெரிகிறது.

# காவலன் மூலம் பிரபலமானா

காவலன் படத்தின் மூலம் பிரபலமான நடிகை மித்ராவுக்கு இப்போது தமிழ்
வருகிறதாம்.

அதன் விளைவு சென்னையிலேயே தங்க முடிவெடுத்து இருக்கிறார் மி
வெளியான 'பொடிகார்ட்' படத்தின் தமிழ் ரீ-மேக்காக பொங்கலுக்கு வெளியா

இப்படத்தில் விஜய்க்கு அடுத்து பெரிதும் பேசப்பட்டது மித்ராவின் வேடம்
வேடத்தில் வந்தாலும், அதில் சிறப்பாக நடித்து அசினையே பின்னுக்குத் தள்ளி

இதன் விளைவாக காவலன் படத்தைத் தொடர்ந்து தமிழில் நிறைய வா
அதனால் சென்னையிலேயே தங்கிவிடலாம் என்று முடிவு எடுத்திருக்கிறார் மித்

இதுகுறித்து மித்ரா கூறியதாவது, காவலன் படத்தில் நடிக்குமாறு இயக்
அணுகியபோது உடன் ஒப்புக்கொண்டேன்.

காவலனில் என்னுடைய நடிப்பை பார்த்துப் பலர் பாராட்டினார்கள்.
வேடத்தில் நடித்தத்தைவிட தமிழில் சிறப்பாக நடித்திருப்பதாகப் பலரும்
நடிப்பைப் பார்த்து தமிழில் நிறைய படவாய்ப்புகள் வருகிறன.

தற்போது இயக்குநர் சுசீந்திரன் இயக்கத்தில் விக்ரம் நடிக்கும் படத்தில்
இப்படத்தில் நாயகியாக தீக்ஷா செத் நடிக்கிறார். படத்தில் எனக்கு துணை நடி
மிக அழுத்தமான வேடம் தான். இப்படத்தில் மொடேர்ன் பெண்ணாக ந
தேர்தல் முடிந்த பின்னர் இப்படத்தின் படப்பிடிப்பு ஆரம்பமாகவிருக்கிறது.

என்னைப் பொறுத்த வரை நடிப்பதற்கு மொழி ஒன்றும் பிரச்சினை இல்லை
தமிழ் கொஞ்சம், கொஞ்சம் தெரியும். பிறர் பேசுவதைப் புரிந்துகொள்ள
ஓரளவிற்கு பேசவும் தெரியும். தமிழில் நிறைய படவாய்ப்புகள் தேடி வருகின்ற
தங்கி நடிக்கலாம் என்று முடிவெடுத்து இருக்கிறேன். - இவ்வாறு அவர் கூறினா



# உணர்ச்சி வசப்பட்டு கண்ணீர் விட்டார் - ஷில்பா



இலங்கையை இந்தியா வெற்றிபெற்ற அந்த நேரத்தில் என்னால் உணர்ச்சிகளைக் கட்டுப் படுத்த முடியவில்லை. சந்தோஷத்தில் அழுது கண்ணீர்விட்டேன், என்கிறார் பொலிவூட் நடிகை ஷில்பா ஷெட்டி.

நாடு முழுவதும் இந்தியாவின் உலகக் கிண்ண வெற்றி குறித்துதான் பேச்சாக உள்ளது. இன்றும் கூட இந்த வெற்றி யின் தாக்கம் கொஞ்சமும் குறைய வில்லை பொலிவூட்டில். போட் டியை நேரில் கண்டுகளித்த நடிகை ஷில்பா ஷெட்டி இப்படிக் கூறுகிறார்,

இந்திய அணி வெற்றி பெற்ற தும் என்னால் உணர்ச்சிகளை கட்டுப்படுத்த முடியவில்லை. இது ஒரு அருமையான நிகழ்வு. இந்திய அணி வெற்றி பெற்றதும் யுவ ராஜ் ஆனந்தக் கண் ணீர் வடித்தார். இத னைப் பார்த்ததும் என்னை அறியா மலேயே நானும் அழுதுவிட்டேன். இந்திய அணி வீரர் கள் அனைவரும் ஒருங்கிணைந்து விளை யாடிய விதம் அனை வருக்குமே ஒரு உதார ணப் பாடமாக இருந்தது.

28 வருடங்களுக்கு முன்பு (1983) இந்திய அணி முதல் உலகக் கிண் ணத்தை வென்றது. அப் போது உணர்ச்சி வெள்ளத் தில் மிதந்த என்னுடைய தந்தை ஆனந்த கண்ணீர் வடித்தார். அன்று என் தந்தைக்கு நேர்ந்த அதே உணர்வு இப்போது எனக்கும் ஏற்பட்டுள்ளது' - என்றார் ஷில்பா.

## ஒப்பந்தத்தை மீறமுடியாமல் கவர்ச்சியாக நடிக்கிறார் அஞ்சலி

அஞ்சலி நடிக்க வந்த ஆரம்பத்தில் ஒப்பந்தமான படம்தான் இந்த மகா ராஜா. ஆனால் படம் நீண்ட காலமாக வெளிவராமல் இழுத்தடிப்புச் செய் யப்பட்டுவந்தது. இடையில் அங்காடித் தெருவில் நடித்த அஞ்சலிக்கு நல்ல பெயர் கிடைத்தைத் தொடர்ந்து, இழுத் தடிப்புச் செய்யப்பட்டு வந்த பல படங் கள் வேகமாகத் திரைக்கு வர ஆரம்பித் துள்ளன. அப்படிப்பட்ட படங்களில் ஒன்று தான் இந்த மகாராஜா.

இப்படத்தில் அஞ்சலி கவர்ச்சிகரமாக நடித்துள்ளாராம். படத்தில் நடிக்க ஒப் பந்தம் செய்தபோதே கவர்ச்சிதான் பிர தானம் என்று சொல்லிவிட்டார்களாம். அங்காடித் தெரு படத்தில் அமர்க்கள மான ஹிட்டைக் கொடுத்த அஞ்சலி, கவர்ச்சியாக நடித்தால் தனது பெயர் கெட்டுப் போகும் என்று கூறிப் பார்த் துள்ளாராம். ஆனால் ஒப்புக்கொண்ட படி நடித்தாக வேண்டும் என்று கூறி விட்டனராம்.

இருந்தாலும் படத்தில் அஞ்சலியின் கவர்ச்சி பிரமாதமாக வந்துள்ளதாம். இதனால் கொலிவூட்டில் கவர்ச்சிகரமாக நடிகையாக அஞ்சலி வருவார் என எதிர் பார்க்கப்படுகிறது.

படத்தின் நாயகனாக சத்யா நடித் துள்ளார்.



...யடம் ... சினேகா

...து தான் புன்னகை இளவரசி ...கிண்ணத்தை வென்றிருக்கும் ...துள்ளது.

...டன் ஒரு புகைப்படமாவது ...க்கையில் எவ்வளவு உயரத் ...டைய அப்பாவுக்குச் சச்சின்

...த்து தங்கள் விளம்பரத்தில் ...அப்படிப்பட்ட சச்சினுடன் ... சினேகா.

...த டாப்ஸி

...ரோயின், இசையமைப்பாளர் ...ல் புதுமுகங்களின் ஆதிக்கம் ...இல்லாத அளவுக்கு தமிழ்த் ...நகிறது.

...னார்கள். அவர்களில் சிலர்

...க்கம் கொடி கட்டிப் பறக்க ...ங்களும், 15 மொழிமாற்றுத்

...ாயின்கள் அறிமுகமாகியிருக் ...ர்களைக் கவர்ந்திருக்கிறார். ...ளர்.

...ள் வெளிவந்ததும், புதுமுகங் ...ம் ஆண்டும் புதுமுகங்களின்

...ார் மித்ரா

... தமிழில் நிறைய வாய்ப்புகள்

...ர் மித்ரா. மலையாளத்தில் ...ரியான படம் 'காவலன்'. ...டம் தான். காவலனில் சிறிய ...தள்ளிவிட்டார்.

... வாய்ப்புகள் வருகிறதாம். ...ர் மித்ரா.


... இயக்குநர் சித்திக் என்னை

...ன். மலையாளத்தில் இதே ...ரும் கூறினார். காவலன் பட

...த்தில் நடிக்க இருக்கிறேன். ...ா நடிகை வேடம் என்றாலும் ...க நடிக்கிறேன். சட்டசபைத் ...து.

...ல்லை. ஏற்கனவே எனக்குத் ...ள்ள முடியும். அதேசமயம் ...கின்றன. இதனால் இங்கேயே ...றினார்.

# லாரா தத்தாவுக்கு இரட்டைச் சந்தோசம்



இந்திய அணி உலகக் கிண்ணத்தை தன்வசப் படுத்தியதை நாடே குதூகலமாகக் கொண் டாடிக் கொண்டிருக்கையில் பொலிவூட் நடிகை லாரா தத்தாவுக்கு அந்தவேளை இரட்டைக் கொண்டாட்டமாக அமைந் தது.

மும்பை வான்கடே மைதானத்தில் நடந்த உலகக் கிண்ண இறுதிப் போட் டியை நேரில் கண்டு ரசித்தார் பொலி வூட் நடிகை லாரா தத்தா.

இந்திய அணி கிண்ணத்தை வென்று புதிய சரித்திரம் படைத்த களிப்பில் அனைவரும் இருக்க, லாராவுக்கு இரட்டைச் சந்தோஷம். ஒன்று இந்திய அணியின் 28 ஆண்டு காலக் கனவு நனவானது. இன் னொன்று தனது கணவர் மகேஷ் பூபதியும், லியாண்டர் பயசும் அமெ ரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் நடந்த மயாமி ஓபின் இரட்டை யர் ஆட்டத்தில் பட்டம் வென்றது.

இதுகுறித்து லாரா தனது 'டுவிட்டர்' இணையத்தளத்தில் கருத்துத் தெரிவிக்கையில், "எனது கணவர் மயாமி ஓபன் இறுதி ஆட்டத்தில் ஆடுகிறார். நான் இந்திய அணியை உற் சாகப்படுத்த மைதானம் செல் கிறேன். இரண்டு பேருமே வெற்றிபெறப் பிரார்த்தனை செய்கி றேன்" என்று எழுதியிருந்தார்.



# சிறுவர் சுடர்

தொகுப்பு - எஸ்.ஜெயா





அ.தர்ஜந்,
தரம் - 4,
கிளிநொச்சி மகா வித்தியாலயம்.





இ.டெசிரிக்கா,
கிளி/கனகபுரம் மகா வித்தியாலயம்.



த. அஸ்வினி,
யா/ புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்.





எஸ். நிதர்ஷவி, தரம் - 5,
கிங்ஸ்டன் சர்வதேச பாடசாலை, வெள்ளவத்தை.

## வைக்கோல் பட்டடை நாய்

ஒரு பெரிய தொட்டியில் நன்கு செழித்து வளர்ந்த புற்கள் இருந்தன. அத் தொட்டியின் மேல் நாய் ஒன்று ஏறிப் படுத்துக் கொண்டது. அப்பொழுது பசியுடன் அங்கு வந்த குதிரை தொட்டியில் இருந்த புல்லைச் சாப்பிட முயன்றது. புல்லின் மேல் படுத்திருந்த நாய் அதனைக் கண்டு குதிரையை சாப்பிட விடாமல் உறுமியது குரைத்தது. அதனால் குதிரையால் புல்லைச் சாப்பிட முடியவில்லை. அது நாயை நோக்கி 'நீயும் புல்லைச் சாப்பிடமாட்டாய். மற்றவர் களையும் ஏன் சாப்பிட அனுமதிக்கிறாய் இல்லை' என்று கேட்டது.அதற்கு நாய் 'நான் என் சுதந்திரத்தை இழக்க விரும்பவில்லை' என்று சொல்லி உரத்துக் குரைத்தது. இது போன்று மற்றவர்களை வாழ விடாமல் தானும் வாழாமல் இருக்கும் மனிதர்களும் எம்மிடையே வாழ்கின்றனர். இவர்களையே வைக்கோல் பட்டடை நாய் என்று கூறுவர்.




## ஓநாயும் கொக்கும்



ஓநாய் ஆடு ஒன்றைக் கொன்று வேகமாகத் தின்றது. அதன் தொண்டையில் எலும்புத் துண்டு ஒன்று சிக்கியது.
வலி தாங்க முடியாமல் ஓநாய் ஊளையிட் டது. தொண்டையில் சிக்கிய எலும்பை எடுத்து விடுபவர்களுக்குப் பரிசு தருவதாக சொல்லிக் கதறியது.



பரிசுக்கு ஆசைப்பட்ட கொக்கு ஒன்று அதன் நீண்ட அலகை ஓநாயின் வாய்க்குள் விட்டு சிக்கியிருந்த எலும்பை எடுத்தது.
பின்பு கொக்கு தனக்குரிய பரிசைக் கேட்டது.





'பரிசா? உனக்கா? உன் சொண்டு என் வாய்க்குள் இருக்கும் போது அதைக் கடிக்காமல் விட்டதே பெரிய பரிசு. நீ உயிர் தப்பி ஓடிப்போ. நின்றால் கொன்று தின்று விடுவேன்' என்றது நரி.



ஏமாந்த கொக்கு உயிருக்குப் பயந்து வேகமாகப் பறந்து சென்றது. உதவி செய்வதானாலும் யாருக்குச் செய்வதென்பதைத் தெரிந்து செய்வதே நன்று.

## குறும்புக்காரன் குட்டீஸ்







# விளையாட்டை வினையாக்கி வேதனைப்படுத்த வேண்டாம்





விளையாட்டுக் களம் என்றால் அங்கே வெற்றியும் தோல்வியும் சகஜம். போட்டியில் கலந்து கொள்ளும் எல்லோரும் வெற்றி பெறவும் முடியாது. எல்லோரும் தோல்வியை தழுவுவதும் கிடையாது. யாரோ ஒருவர் தோல்வியை ஏற்கத்தான் வேண்டும். இது தான் மரபு. யதார்த்தம்.

ஆனால் நடந்து முடிந்த இலங்கை-இந்திய அணிகளுக்கிடையிலான உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் இந்திய வீரர்கள் வெற்றிபெற்று சர்வதேச சம்பியன்களாக வெற்றி வாகை சூடினர். இது கிரிக்கெட் விளையாட்டில் சர்வதேச மட்டத்தில் இந்தியாவுக்குக் கிடைத்த அங்கீகாரம்.

### போட்டி குறித்து அரசியல்வாதிகளின் கருத்து

குறிப்பிட்ட இந்த இறுதிப் போட்டி நடைபெறுவதற்கு முன்னரேயே நமது நாட்டு அரசியல் வாதிகள் இப்போட்டி தொடர்பாக வெளியிட்ட கருத்துக்கள் இந்நாட்டின் கிராமப்புற மக்கள் மத்தியில் ஒரு வெறியைத் தூண்டி விட்டிருந்தன.

அரசியல் பிரபலஸ்தர் ஒருவர் பயங்கரவாதத்திற்கு எதிரான வெற்றியாக இதனைக் கருதுவோம் என்றார். மற்றொருவர் படையினருக்கே இந்த வெற்றியைச் சமர்ப்பணம் செய்வோம் என்றார்.

சிறையில் அடைபட்டிருக்கும் முன்னாள் ராணுவத்தளபதி சரத்பொன்சேகா கூட தன்பாட்டுக்குச் சும்மா இருந்தாரா? பிரபாகரனுக்கு எதிராகத் தாம் நடத்திய போருக்கு இலங்கை அணியின் வெற்றி சமமாகும் என்றார்.

அரசியல் உயர் மட்டத்தில் இருந்து வெளியான இப்பொறுப்பற்ற கருத்துகள் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான ஒரு பெரிய யுத்தம் போன்றதொரு வியூகத்தை வளர்த்து விட்டன.

இதன் எதிரொலி தான் இலங்கை அணியின் தோல்வி மலையகத்தில் பல மோதல்களையும் தாக்குதல்களையும் ஏற்படுத்திவிட்டது.

இரா.புத்திரசிகாமணி

குறிப்பாக அட்டன் பகுதியில் இந்திய வம்சா வளியினர் வாழும் பகுதிகளுக்குள் புகுந்த சில விசமிகள் மலையகத் தொழிலாளர்கள் மீது தாக்குதல்களை நடத்தி கத்திகளால் வெட்டிக் காயப்படுத்தியது மட்டுமல்லாமல் மனதளவிலும் காயங்களை ஏறபடுத்தி விட்டனர். இத்தாக்குதலில் வெட்டுக்காயங்களுக்கு உள்ளாகி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கும் நபரும் அவரது நண்பர்களும் இப்படிக் கூறுகின்றனர்.

### ஆதரவை வெளிப்படுத்துவது தவறா?

''ஐயா, விளையாட்டு இங்கே வினையாக்கப்பட்டுள்ளது. நாங்கள் இலங்கையை நேசிப்பவர்கள். நாங்களும் இலங்கையர்கள் தான். இலங்கை அணி இறுதிப் போட்டிக்குத் தெரிவான போது சீனவெடி கொளுத்தி எங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினோம்.

அதேபோன்று இந்திய அணி வெற்றி பெற்ற போதும் வெடி கொளுத்தி எமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினோம். இதில் என்ன தவறு? உண்மையான விளையாட்டு வீரன், யார் வெற்றி பெற்றாலும் அவர்களைப் பாராட்டுவான். அதைத் தானே நாங்களும் செய்தோம். போட்டி முடிந்த பின் நமது ஜனாதிபதி கூட இந்திய அணிக்கு வாழ்த்துத் தெரிவித்து விட்டுத்தான் வந்தார். அப்படியானால் ஜனாதிபதியும் இலங்கைக்கு எதிரானவரா?

அரசியல் பிரபலஸ்தர் ஒருவர் பயங்கரவாதத்திற்கு எதிரான வெற்றியாக இதனைக் கருதுவோம் என்றார். மற்றொருவர் படையினருக்கே இந்த வெற்றியைச் சமர்ப்பணம் செய்வோம் என்றார். சிறையில் அடைபட்டிருக்கும் முன்னாள் ராணுவத்தளபதி சரத்பொன்சேகா கூட தன்பாட்டுக்குச் சும்மா இருந்தாரா? பிரபாகரனுக்கு எதிராகத் தாம் நடத்திய போருக்கு இலங்கை அணியின் வெற்றி சமமாகும் என்றார்.

"இங்கு இன்னும் ஒரு விடயத்தையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். பாகிஸ்தான் எங்கோ இருக்கிறது. நாம் எங்கோ இருக்கின்றோம். பாகிஸ்தான் விளையாட்டு வீரர்கள் வேறு எந்த நாட்டுடனான போட்டியின் போதும் வெற்றியடைந்தால் இங்கு வாழும் முஸ்லிம் சகோதரர்கள் வெடி கொளுத்தி ஆரவாரம் செய்து மகிழ்ச்சியடைகின்றனர்.

"மத ரீதியாகவும், மொழி ரீதியாகவும், பாரம்பரிய கலாச்சார ரீதியாகவும் ஏற்பட்ட தொப்புள் கொடி உறவு இது என்கின்றனர் அவர்கள்.

''இதே தொப்புள் கொடி உறவு தானே எங்களுக்கும் இந்தியாவுக்கும் இடையிலானதும். ஏன் எங்கள் மீது மட்டும் குரோத மனப்பான்மையுடன் நடந்து கொள்கின்றனர்?" என்று கேட்கின்றனர் அந்த அப்பாவித் தோட்டத் தொழிலாளர்கள்.

### தாக்குதலின் பின்னணியில் அரசியல் சக்தியா?

மலையகத்தின் முக்கிய நகரான அட்டனில் நடைபெற்ற தாக்குதல் சம்பவங்கள் தொடர்பாக சற்று ஆழமாகப் பார்க்கும்போது, அங்கே ஒரு அரசியல் சக்தியும் இந்தச் சம்பவத்தின் பின்னணியில் இருந்தாகத் தெரிய வருகின்றது.

அட்டன் - டிக்கோயா நகர சபைத் தேர்தலின் போது ஏற்பட்ட சில மாற்றங்களும் இதற்கு ஒரு காரணமாக இருக்கலாமோ என்றும் பலர் சந்தேகம் எழுப்புகின்றனர்.

இ.தொ.கா பொதுச் செயலாளரும் அமைச்சருமான ஆறுமுகன் தொண்டமான் தலையிடும்வரை குறிப்பிட்ட அந்தத் தாக்குதல் நடத்திய எவருமே கைது செய்யப்படவில்லை என்பது தான் சோதனையானதொரு விடயம்.

வெட்டுக்காயங்களுக்கு உள்ளாகி சிகிச்சை பெற்று வருபவர் தற்போதைய நகரசபைத் தலைவரின் சாரதி என்பதும் குறிப்பிடத்தக்கது.

தேர்தல் கால சம்பவங்கள், கடந்த கால சொந்த குரோதங்கள், அரசியல் தலைவர்களின் வெறித்தனமான கருத்துகள் எல்லாவற்றையும் ஒன்று திரட்டி இலங்கை அணியின் தோல் வியைச் சாட்டாக வைத்து இந்திய வம்சாவளி மலையக மக்கள் தாக் கப்பட்டுள்ளனர்.


இன்று நேற்றல்ல, தேர்தல் முடிவுகள், விளையாட்டு முடிவுகள், கலை கலாசார விழாக்கள், கட்சிச் சண்டைகள் எல்லாமே கடைசியில் போய் முடிவது தோட்டத் தொழிலாளர்களின் மீதான தாக்குதல் சம்பவங்களுடன் தான். இப்படியான சம்பவங்கள் இடம் பெறும்போது தோட்டத்தொழிலாளர்களின் தலைமைகள் ஒன்றாகக் கூடிக் கூச்சல் போடுகின்றனர். ஆர்ப்பாட்டம் நடத்துகின்றனர். பின்னர் விஷயத்தை அப்படியே தொப்பென்று கைகழுவி விட்டு விடுகின்றனர். தாக்குதல் சம்பவங்கள் தொடர் கதையாக மாறி விடுகின்றன.

இம்முறை அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் மேற்கொண்ட தலையீட்டினால் தாக்குதல்களை நடத்தியவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இது பாராட்டத்தக்கது.

மலையகத்தில் இப்படியான சம்பவங்கள் இடம் பெறாமல் தடுப்பதற்கு அனைத்து மலையகத் தலைமைகளும் ஒன்றுபட்டு உறுதியான ஒரு முடிவு காண வேண்டும். ★



# வெற்றிக் கும்மாளம்






# வசந்தனின் கற்றல்

அன்று வசந்தனின் வீடு களைகட்டியிருந்தது. அனைவரது முகத்திலும் மகிழ்ச்சி தாண்டவமாடியது. மூன்று பத்திரிகையாளர்கள் வசந்தனைப் பல் கோணங்களிலும் புகைப் படங்கள் எடுத்தார்கள். அவனிடம் கேள்விக் கணைகளைத் தொடுத்துக் குறிப்புகளும் எடுத்துக் கொண்டு இருந்தார்கள். வசந்தன் பள்ளி இறுதி வகுப்பில் மாவட்டத் திலேயே முதல் மதிப் பெண் எடுத்துத் தேறியிருந்தமை தான் இத்தனை ஆரவாரத் திற்கும் காரணம். ஒரு நிருபர் அவனிடம் நீங்கள் படிப்பதற்கென்று ஏதாவது தனிப்பட்ட முறையைப் பின்பற்றினீர்களா, வசந்தன்?'' என்று வினாவினார். இதைக் கேட்டதும் சற்றுச் சிந்தித்த வசந்தன், "சார், நான்



படிப்பதற்கென்று மூன்று முறைகளைப் பின்பற்றினேன்'' என்றான்.

ஒன்று நான் படிக்கும்பொழுது வேறு எந்தவிதமான சிந்தனைக்கும் இடம்கொடுக்காமல் முழுக் கவனத்தையும் படிப்பில் செலுத்துவேன்.

மற்றயவை ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பாடத்திற்கும் குறிப்பிட்ட நேரம் ஒதுக்கி அன்றைய பாடங்களை அன்றன்றே படித்து வந்தேன். மூன்றாவது நான் எந்தப் பாடத்தையும் புரிந்துகொள்ளாமல் மனப்பாடம் செய்யமாட்டேன். இவை எனது ஆசிரியர் எனக்கு கற்றுத்தந்த முறைகளாகும். அவர் காட்டிய வழியில் நடந்து முன்னேறியிருக்கிறேன் என்றான். அவற்றைக் கேட்ட பத்திரிகையாளர்கள் வசந்தனின் முயற்சியைப் பாராட் டினார்கள்.

## வானம்



நாம் காணும் வானம் நீல நிறமாகத் தோன்றுகிறது. வானத்தில் தூசி போன்ற சிறிய பொருள்கள் நிறைந்திருக்கின்றன. இவை சூரிய ஒளியை வாங்கிக் கொண்டு நீல நிறமாகப் பிரதிபலிக்கின்றன. வானவில் நிறங்களான ஊதா, கருநீலம், நீலம், பச்சை, மஞ்சள், ஒரேஞ், சிவப்பு ஆகிய நிறங்களின் கூட்டுத் தோற்றமே நீல நிறமாகப் பிரதிபலிக்கிறது. வானம் மிகப் பரந்த ஒரு வெளியாகும்.★

## வானவில்



வெளிச்சத்தில் பல நிறங்கள் உள்ளன. அவற்றை வேறு பிரித்துப் பார்க்க முப்பட்ட பளிங்குக் கண்ணாடி உதவுகிறது. வானவில்லில் தோன்றும் ஏழு நிறங்களும் மழை பெய்யும்போது வானத்தில் சூரியனின் ஒளி பிரகாசிக்கும்வேளையில் மழைத் துளிகளில் சிதறிவிழுகின்றன. அப்போது ஒளியிலுள்ள நிறங்கள் பிரிந்து தோன்றுகின்றன. அந்த ஏழு நிறங்களின் தோற்றமே வானவில் எனப்படும்.★

## ஹலீஸ்



ஹலிஸ் என்பது ஒரு வால்வெள்ளியாகும். எட்மன்ட்ஹலி என்பவர் இதனைக் கண்டறிந்தமையால் இது ஹலிஸ் வால் வெள்ளி என அழைக்கப்படுகிறது. 1682 இல் இது கண்டறியப்பட்டது. இயேசுவின் பிறப்பின்போது அவரைத் தரிசிக்க வந்தவர்களுக்கு இந்த வால் நட்சத்திரமே வழி காட்டியதாக நம்பப்படுகிறது. 1910 இல் இவ்வெள்ளி இறுதியாகத் தோன்றியதாக அறியப் படுகிறது.

## முளைக்கு வேலை தரும்

### மாயச் சதுரம்

### கணிதப் புதிர் - 11

| | | | | |
|---|---|---|---|---|
| 51 | 69 | 12 | 30 | 33 |
| 21 | 15 | 18 | 36 | 54 |
| 3 | 72 | 39 | 6 | 75 |
| 24 | 42 | 60 | 63 | 57 |
| 45 | 48 | 66 | 9 | 27 |

இடம் மாறியுள்ள நான்கு எண்களை மாத்திரம் உரிய கூட்டிற்குள் மாற்றியிடுவதன் மூலம் நிரை, நிரல், மூலைக்கு மூலை கூட்டுத்தொகை 195 ஆகும் வண்ணம் எண்களை ஒழுங்கமையுங்கள். உங்கள் முயற்சி வெற்றியளித்ததா? என்பதை அறிய அடுத்த வாரம் இளஞ்சுடரைப் பாருங்கள்.

கணிதப் புதிர் - 10 இன் சரியான விடை

| | | | | |
|---|---|---|---|---|
| 18 | 25 | 32 | 9 | 16 |
| 17 | 19 | 26 | 28 | 10 |
| 11 | 13 | 20 | 27 | 29 |
| 30 | 12 | 14 | 21 | 23 |
| 24 | 31 | 8 | 15 | 22 |

## இளஞ்சுடர் அங்கத்தவராகுங்கள்

மாணவர்களே இது உங்கள் பக்கம். இதில் உங்கள் ஆக்கங்களை வெளியிடுவதன் மூலம் உங்கள் திறமைகளை வெளிப்படுத்துங்கள். பக்கத்தில் உள்ள படிவங்களை முறை நிரப்பி உங்கள் பாஸ்போட் அளவான புகைப்படத்துடன் இளஞ்சுடருக்கு அனுப்பி வையுங்கள். பதிவு செய்யப்படும் அங்கத்தவரின் ஆக்கங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

## இளஞ்சுடர் விண்ணப்பப் படிவம்

பெயர்:- ..............................................

பிறந்த திகதி:- ..............................................

வகுப்பு:- ..............................................

பாடசாலை:- ..............................................

சொந்த முகவரி:- ..............................................

கையொப்பம்:- ..............................................

மேற்படி மாணவர் எங்கள் பாடசாலையில் கல்வி கற்கிறார் என்பதை உறுதிப்படுத்துகிறேன்.

அதிபர்/ ஆசிரியர்

அனுப்பவேண்டிய முகவரி
'இளஞ்சுடர்', சுடர் ஒளி,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

..............................
கையொப்பம்

## உள்நாட்டு தொழில்முயற்சியாளர்களுக்கான வெளிநாட்டு கடன்கள்



### விரைந்த பொருளாதார வளர்ச்சிக்கான ஒரு ஆதரவு

இலங்கை மத்திய வங்கியின் செலாவணிக்கட்டுப்பாட்டுத் திணைக்களமானது இலங்கையில் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கும் செயற்றிட்டங்களுக்கு வெளிநாட்டு மூலங்களிலிருந்து கடன் பெறுவதற்கான அனுமதியை வழங்குவதற்கு புதிய நடைமுறையை அறிமுகப்படுத்தியுள்ளது.

### கடன் பெறுவதற்கு தகுதியுடையவர்கள் யார்?

**1ஆம் வகை**

கம்பனியொன்றின் வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களிலிருந்து மீள்கொடுப்பனவுகள் செலுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு பின்வரும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள கம்பனிகளுக்கு அனுமதி வழங்குவதற்குப் பரிசீலிக்கப்படும்.

- ஏற்றுமதி அபிவிருத்திச் சபையுடன் பதிவுகளை மேற்கொண்டுள்ள வணிகப் பொருள் ஏற்றுமதியாளர்கள
- சுற்றுலா
- சுற்றுலாப் பயணிகள் பொழுதுபோக்கு நிலையங்கள்
- இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணம்
- கப்பற்படுத்தல்
- உள்நாட்டு வான் பயணம்

**3ஆம் வகை**

பின்வரும் வியாபாரங்களிலுள்ள தனி உடமையாளர்களுக்கு. உடமையாளர்களின் வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களிலிருந்து கடன்களை மீளச் செலுத்தும் இயலளவைப் பொருட்படுத்தாது அனுமதி வழங்குவதற்கு பரிசீலனையில் கொள்ளப்படும்.

- ஆலோசனைப் பணிகள்
- அரச அதிகாரசபைகளுடன் பதிவு செய்யப்பட்ட கைப்பணிப் பொருட்களை உற்பத்தி செய்வோர்
- விளம்பரம் செய்தல், பிரசுரித்தல், புகைப்படமெடுத்தல்
- விளையாட்டுகள் தொடர்பான பணிகள்
- நவீன உடைகளின் வடிவமைப்பு மற்றும் திரைப்படத் தொழில்
- பொழுதுபோக்குத் தொழில் (சங்கீதம், நடனம், நிகழ்ச்சி முகாமைத்துவம் போன்றவை)

**2ஆம் வகை**

பின்வரும் வியாபாரங்களில் ஈடுபடும் கம்பனிகளுக்கு கம்பனியின் வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களிலிருந்து கடன்களை மீளச் செலுத்தும் இயலளவைப் பொருட்படுத்தாது அனுமதி வழங்குவதற்கு பரிசீலனையில் கொள்ளப்படும்.

- வேளாண்மை, விலங்கு வளர்ப்பு மற்றும் பெருந்தோட்டம்
- மீன்பிடி
- உணவு பதனிடல்
- கல்வி மற்றும் பயிற்சி
- வலு உருவாக்கம் மற்றும் கடத்தல்
- ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி
- மருத்துவமனைகள் மற்றும் நலம் மற்றும் நலக் கவனிப்புப் பணிகளின் வழங்கல்
- வர்த்தக ரீதியிலான வீடமைப்பு நிர்மாணம்
- வீதிகள் மற்றும் பாலங்களின் நிர்மாணம்
- பாரிய போக்குவரத்து
- சுற்றாடல் பாதுகாப்பு
- பல்பொருள் அங்காடி
- ஊர்திகளைப் பொருத்துதல்
- துறைமுகங்கள் மற்றும் துணைப் பணிகள்
- கைத்தொழில் பூங்காக்கள்
- நகர உட்கட்டமைப்பு (நீர் விநியோகம், சுகாதார மற்றும் வடிகால் செயற்றிட்டங்கள்)
- தகவல் தொழில்நுட்பப் பணிகளை வழங்குவோர்
- பாரிய கைத்தொழில்கள் மற்றும் தயாரிப்பு

### கடன் வழங்குவதற்கு தகுதியுடையவர்கள் யார் ?

- பன்னாட்டு வங்கிகள் அல்லது நிதிக் கம்பனிகள்
- பல்புடை நிதியியல் நிறுவனங்கள்
- கடன்பெறும் கம்பனிகளின் வெளிநாட்டு பங்குடமையாளர்கள் அல்லது தாய்க் கம்பனிகள்
- ஏற்றுமதிக் கொடுகடன் முகவர்கள்
- தனிப்பட்ட கடன்வழங்குநர்கள்: வதியும் நாட்டில் அவன்/ அவள் வரி செலுத்துவர் என்ற சான்றுடன் கூறப்பட்ட வங்கியுடன் அவன்/ அவள் கணக்கைப் பேணுவதாக அவனது/ அவளது வதியும் நாட்டின் வங்கியாளரிடமிருந்து உறுதிப்படுத்தலை அளிக்குமிடத்து

### கடன்களுக்காக குறித்துரைக்கப்பட்ட நியதிகள் எவை?

**கடன் பெறவேண்டிய ஆகக் கூடிய தொகை:** ஐ.அ.டொலர் 20 மில்லியன்

**மீள்கொடுப்பனவுக் காலப்பகுதி:** கடன் பெறுகைகளைப் பெற்ற திகதியிலிருந்து ஆகக் குறைந்தது மூன்று ஆண்டுகளாக இருத்தல் வேண்டும்

**கடன் பெறுவதற்கான செலவு:** கட்டணங்கள், ஒதிப்பனவுகள் மற்றும் கடன்களுக்கான பிரயோகிக்கத்தக்க வட்டி உள்ளிட்ட அனைத்துச் செலவுகளும் இரண்டாந்தரச் சந்தையில் தற்போதைய இலங்கையின் நாட்டுக்கான பன்னாட்டு முறி வீதம் + 200 அடிப்படைப்புள்ளிகளை விஞ்சுதலாகாது

### கடன் பெறக்கூடிய நோக்கங்கள் எவை?

தொழிற்படு மூலதனம், வியாபாரத்தில் மேற்கொள்ளப்படும் முதலீடு, கம்பனியை மீள அமைத்தல் அல்லது ஏற்கனவேயுள்ள வெளிநாட்டு நாணயக் கடன்களைத் தீர்ப்பனவு செய்தல்

மத்திய வங்கியின் ஒப்புதலைப் பெறுவதற்கு பின்பற்ற வேண்டிய நடைமுறைகளின் விபரங்கள் மற்றும் மத்திய வங்கிக்குச் சமர்ப்பிக்க வேண்டிய விண்ணப்பப்பத்திரத்தினை இலங்கை மத்திய வங்கியின் வெப்தளமான www.cbsl.gov.lk இலிருந்து பதிவிறக்கம் செய்யலாம்.

மேலதிக தகவல்களுக்கு தயவுசெய்து 011-2477358 அல்லது 011-2477000 – நீட்டம் 3126.

பி. எச். ஓ. சந்திரவன்ச
செலாவணிக் கட்டுப்பாட்டாளர்
செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA


# கிண்ணம் விழுங்கியவைகள்

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

**பொழியும் பரிசுகள்**

போட்டியில் வென்று உலகக் கிண்ணத்தைச் சுவீகரித்துக்கொண்ட இந்திய அணி வீரர்களுக்கு நாளுக்கு நாள் கிடைத்துவரும் பரிசுகளும் சலுகைகளும் சாதாரண மக்களை வாய்பிளக்கச் செய்கின்றன. இதில் அதிக அளவில் பரிசு களையும் சலுகைகளையும் பெறுபவர் இந்திய அணியின் தலைவர் மகேந் திரசிங் டோனி தான். இதுவரை அவருக்கு மூன்று கோடி ரூபா பரிசாகக் கிடைத்துள்ளது. நான் நீ என்று போட்டி போட்டுக்கொண்டு பிரபல்யம் தேடுவதற்காக நிறு வனங்களும், பிரபலஸ்தர்களும் இந்திய அணி வீரர்களுக்கு பரிசில்களை வழங்கிவருகின்றனர்.

அந்த வகையில் இந்திய ரயில்வே சார்பில் அணியின் வீரர்கள் அனைவருக்கும் வாழ்நாள் முழுவதும் இலவச ‘ஏசி பாஸ்’ வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்தியக் கிரிக்கெட் வாரியம் சார்பில் இந்திய அணியின் சகல வீரர்களுக்கும் தலா ஒருகோடி ரூபா பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது. இவை தவிர ஹீன்டாய் கார் உற்பத்தி நிறுவனம், இந்திய அணியின் அனைத்து வீரர்களுக்கும் தலா ஒவ்வொரு புத்தம் புதிய கார் வழங்கிக் கௌரவிக்கிறது. தமிழக அரசின் சார்பில், சட்டசபைத் தேர்தல் செலவுகளையும் கடந்து மூன்றுகோடி ரூபா பணத்தை இந்தியக் கிரிக்கெட் அணி வீரர்களுக்கு பரிசாக வழங்குவதாக தமிழக முதல்வர் அறிவித்துள்ளார். அதேசமயம் உத்தரப் பிரதேச மாநில அரசு சச்சின் மற்றும் டோனிக்கு முசோரிப் பகுதியில் ‘பிளாட்’ ஒவ்வொன்று வழங்கவிருப்பதாக அறிவித்துள்ளது. அத்தோடு இங்குள்ள விளையாட்டு மைதானம் ஒன்றுக்கு டோனியின் பெயர் சூட்டப்படுகிறது. இதேபோன்று கர்நாடக முதல்வர் எடியூரப்பாவும் பெங்களூர் வளர்ச்சி ஆணயம் சார்பில் இந்திய அணி வீரர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு ‘பிளாட்’ வீடுகள் வழங்கப்படுமென அறிவித்துள்ளார். இலங்கையிலும் கிண்ணம் தந்த அதிர்வுகள் குறைவானவையல்ல.

**எல்லாப் புகழும் யுத்தத்துக்கே!**

இலங்கை- இந்திய அணிகளிடையேயான இறுதிப் போட்டி ஆரம்பமாவதற்கு முன்னரே சரத்பொன்சேகா மற்றும் ஐ.நா பிரதிநிதி சவேந்திர சில்வா உட்பட்ட அரசியல் தலைவர்கள் இலங்கை வெற்றி பெற்றதாகவே பிரகடனப்படுத்தி விட்டனர். அந்த வெற்றியையும் தாம் தோற்கடித்த புலிகளிடம் பெற்ற வெற்றிக்கு சமனான தென்றும் அதற்கே அர்ப்பணிப்பதாகவும் தெரிவித்துவிட்டனர். புலிகளை அழித்தல் என்ற பெயரில் யாரை அழித்தார்கள் என்ற செய்தி உலகறியும். இலங்கை சார்பாக கிடைக்கும் அனைத்து வெற்றிகளுக்கும் யுத்த சாயம் பூசி மெருகேற்றும் அரசியல், அழிக்கப்பட்டவைகளை மீண்டும் நினைக்க வைத்த போட்டியாக மாறியது. இதனாலேயே இறுதிப் போட்டி தொடங்கும்வரை இலங்கை ரசிகர்களாயிருந்த பலர், கிரிக்கெட் போட்டியின் முடிவுகள் தமிழருக்கு எதிராக மாற்றப்படுவதைக் கண்டு இந்திய ரசிகர்களாகத் தம்மைப் காட்டிக் கொண்டனர். இதன் வெளிப்பாடாகவே போட்டி ஆரம்பமாகும்போது கொழும்பில் கொண்டாட்டங்களும் இந்தியா வென்றபோது வடக்குட்பட்ட தமிழ்ப் பிராந்தி யங்களில் கொண்டாட்டங்களும் கன்ளகட்டியிருந்தன.

இந்த கிரிக்கெற்றை இந்தியா, பாகிஸ்தான் போன்ற பாரம்பரிய பகையரசு களெல்லாம் நல்லிணக்கத்துக்காக பயன்படுத்திக் கொண்டன. ஆனால் இலங்கையோ எல்லாவற்றையும் அரசியலாக்கி விற்பனையாக்கும் தன்வழமையான தந்திரத்தில் இதனையும் சிக்கவைத்து விட்டது. இதனால் தான் பெரும்பாலான தமிழர்கள் இலங்கை அணியின் தோல்வியைக் கொண்டாட தயாரானார்கள்.


இலங்கையின் வடக்கிலும், மத்தியமலை நாட்டின் சில பகுதிகளிலும் இந்திய அணியின் வெற்றியைக் கொண்டாடிய தமிழர்கள் மிகமோசமாக தாக்கப்பட்டனர். ஹட்டனில் தமிழர் வீடுகள் அடித்து நொறுக்கப்பட்டனர். யாழ்ப்பாணத்தில் பட்டாசு கொழுத்தி ஆரவாரித்த இந்திய ரசிகர்கள் வெள்ளை வானில் சென்றவர்களால் தாக்கப்பட்டன. இந்த அசம்பாவிதங்கள் தோல்வியை ஏற்றுக் கொள்ளாத மனநிலை படைத்தவர்களைலேயே ஏற்படுத்தப்பட்டது. விளையாட்டுப் போட்டிகள் நிகழ்த்தப்படுவதன் நோக்கம் வெற்றி தோல்வியைச் சமமாக மதித்துப் பழகு தலுக்கும், இனங்களுக்குக்கிடையிலான நல்லுறவை வளர்ப்பதற்காகவுமே. ஆனால் கிரிக்கெட் விளையாட்டில் பெரிய சாதனை படைத்தவர்கள், எனப் பெருமைப்பட்டுக் கொள்ளும் இலங்கை மண்ணில் அந்த நோக்கங்கள் எதுவுமில்லாத திருப்பத்தை அண்மைய சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

போட்டி நிறைவுற்றதும், இலங்கை கிரிக்கெற் அணிக்குள் நிகழ்ந்து வரும் மாற்றங்களும் அதிர்ச்சி தருவனவாயுள்ளன. இறுதிப் போட்டிவரை அணியைச் சிறப்பாக வலுப்படுத்திய சங்கக்காரா, தலைவர் பதவியிலிருந்து இராஜினாமா கோரியிருக்கிறார். இலங்கையின் நம்பிக்கை நட்சத்திரமாக மாறி இருக்கும், இளம் வீரர் மலிங்க போட்டிகளில் இருந்து ஓய்வு பெறப்போவதாக அறிவித்திருக்கிறார். சில வேளைகளில் நடைபெற்று முடிந்த உலகக்கிண்ணப் போட்டியில் இலங்கை அணி வென்றிருந்தால், யுத்த வெற்றிக்கு வெல்லப்பட்ட கிண்ணம் சமர்ப்பிக்கப்பட வீரர்களால் அனுமதிக்கப்பட்டு இருந்தால், இவ்வாறான அறிக்கைகள் இவர்களிடம் இருந்து வெளிவந்திருக்குமா? ஆனால் உலகக்கிண்ணப் போட்டி தொடங்குதற்கு முன்னரே தாம் முடிவெடுத்து விட்டதாக இப்போது கூறிவருகிறார்கள். இதற்கிடையில் சூதாட்டம் பற்றிய சர்ச்சைகளும் எழுப்பப்பட்டு வருகிறது.

இவை எல்லாவற்றையும் விட இலங்கை அணிக்கு அளிக்கப்படாத வரவேற்பு இம்முறை அரசியல் மட்டங்களில் இருந்து வழங்கப்பட்டிருக்கிறது. கடந்த உலகக்கிண்ணப் போட்டியிலும் கிரிக்கெற்றின் ஜாம்பவான்களிடம் மோதி இலங்கை அணியினர் தோற்றிருந்தனர். அப்போது அளிக்கப்படாத வரவேற்பு இப்போது அளிக்கப்படுவதைப் பார்க்கும் போதும் வீரர்களின் திடீர் பதவி விலகலை அவதானிக்கும் போதும் இதற்குள்ளும் ஓர் அரசியல் இருப்பதாகவே தெரிகிறது.

இலங்கையின் பெரும்பான்மை அரசியல் தரப்பினர் பேசிய கிரிக்கெற் அரசியலையும் இங்கு இடம்பெற்ற சில சம்பவங்கள் கடந்து விட்டன, பிலியந்தல பகுதியைச் சேர்ந்த 32 வயதான கீர்த்தி குணதிலக என்பவர் இலங்கை அணியின் தோல்வியை ஜீரணித்துக் கொள்ளமுடியாமல் மாரடைப்பினால் மரணமடைந்திருக்கிறார். அன்றை தினம் இரவு கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மட்டும் 400 பேர் திடீர் காயங்கள், மாரடைப்பு போன்றவற்றினால் பாதிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர்.

உலகக்கிண்ணம் இலங்கையில் ஏற்படுத்திய இந்த நிலமைகள், இங்கு வாழ்கின்ற மக்களது ரசனை, விருப்புக்கள் அரசியல் மயப்படுத்தப்பட்டு வன்முறைக்குரியதாக மாற்றப்படுகிறது என்பதை வெளிக்காட்டியிருக்கிறது. "எல்லாப் புகழும் யுத் தத்திற்கே" என்ற மனநிலையில் புரளும் நம் நாட்டு அரசியல், இனங்களுக்கிடையிலான பிளவுகளை இந்த வகையிலும் ஏற்படுத்தலாம் என்பதை நிரூபித்திருக்கிறது.*




# சுகாதாரம் பேணி வாய்ப்புண் வராமல் தடுக்கலாம்

**கேள்வி-** எனது வயது 20. ஆண். நீண்ட காலமாகவே அடிக்கடி வாய்க்குள் புண் ஏற்படுகிறது. இதற்குக் காரணம் உடல் உஷ்ணம் என்கிறார்கள் சிலர். வெப்பத்தைக் குறைப்பதற்கான வழிமுறைகளைக் கைக்கொண்ட போதும் வாய்ப்புண் மாறவில்லை.இதற்கு நான் என்ன செய்யவேண்டுமென்று ஆலோசனை தருவீர்களா?

பதில்- வாய்க்குள் புண் ஏற்படுவதற்கு பல காரணிகள் உண்டு. சிறப்பாகச் சொல்வதானால் சில காரணிகள் ஆபத்தற்றவை. இலகுவில் மாறிவிடக் கூடியவை. ஆனால் ஆபத்தான, அசட்டை செய்ய முடியாத, இலகுவில் குணமாகாத காரணிகளும் உண்டு. வாய்ப்புண் ஆனது பின்வரும் சந்தர்ப்பங்களில் ஏற்படுகிறது.

* Canker Sores
* Gingivostomatilis
* Herpes Simplex
* Leukoplakia
* Oral Cancer
* Oral Lichen Planus
* Oral thrush
* Histoplasmosis

நீங்கள் இளையவராக இருப்பதாலும் அடிக்கடி வருவ தாக குறிப்பிடுவதாலும் Canker Sore உங்களது. பிரச் சினையாக இருக்கலாம்.

அநேகமாக வாய்ப்புண்ணோடு வாயில் நோ அல்லது வாயசைக்க முடியாத நிலை காணப்படலாம். ஆனால் புண்ணின் தோற்றம் அதன் அமைவிடம் என்பன காரணி யைப் பொறுத்து வேறுபடும்.

நீங்கள் வைத்தியரை நாடினால் அவரால் வாய்ப்புண்ணின் தோற்றம் அமைவிடம் என்பவற்றை அடிப்படையாகக் வைத்து சரியான நோய்க்காரணியை கண் டறிய முடியும். சிலவேளைகளில் குருதிப் பரிசோதனை மட்டுமன்றி Biopsy சோதனை கூட நோயை நிர்ணயிப்பதில் உதவி புரியலாம்.

இதற்கான சிகிச்சை முறை பெரும்பாலும் உங்களுக்கு உள்ள உபாதையை குறைப்பதையே நோக்காகக் கொண்டிருக்கும். அத்தோடு காரணி அறியப்பட்டால் காரணத்தை இல்லாதொழிப்பதும் சிகிச்சையின் நோக்கமாக இருக்கும்.

பொதுவாக சிறந்த வாய்ச்சுகாதாரமே பெரும்பாலான உபாதைகளிலிருந்து விடுதலை தரும். மேலும் புண்ணில் பூசி ஆற்றுவதற்கென ஆற்றல் மிகு பல தரப்பட்ட களிம்பு வகைகள் தற்போது பாவனையிலுள்ளன.

புண் உள்ள காலங்களில் உறைப்பான மற்றும் சூடான உணவு வகைகளை உட்கொள்ளாது தவிர்க்க வேண்டும்.

நான் முன்னரே குறிப்பிட்டதைப் போல அநேகமாக வாய்ப்புண் ஆபத்து அற்றதாக, தானாகவே குணமாகக் கூடியதாக இருக்கும். ஆனால் சிலவேளைகளில் சில ஆபத்துகளையும் விளைவிக்க கூடியன. அவற்றுள் முக்கியமாக வாய்ப்புண்களில் கிருமித்தொற்று ஏற்பட்டு Cellulitis தோன்றக்கூடும். அதுமட்டுமல்லாமல் முரசு மற்றும் பற்களுக்கும் தொற்று ஏற்பட வாய்ப்புண்டு. அடிக்கடி ஏற்படும் புண் குணமடையாமல் இருந்தால், குறிப்பாக நோ வலி இல்லாமல் இருந்தால், குறிப்பாக அது வாய்ப்புற்று நோயின் அறிகுறி இல்லை என்பது பூரணமாக உறுதி செய்யப்படவேண்டும்.

எது எப்படியாயினும் உங்கள் வாய்ப்புண் மூன்று வாரங்களுக்கு மேல் நீடித்தால் அல்லது மறுபடி மறுபடி வரும்போது புதிய குணங்குறிகள் ஏதேனும் தென்பட்டால் நிச்சயமாக ஒரு மருத்துவரை நாடுங்கள்.

நல்ல வாய்ச்சுகாதாரத்தை பேணுவது வாய்ப்புண் வராமல் தடுக்க சிறந்த வழியாகும்.

**கேள்வி-** எனக்கு வயது 53 . ஆண். எனக்கு இதுவரை பெரிதாக நோய் எதுவும் இருந்த தில்லை. அண்மையில் ஒருநாள் நாள் முழுவதும் தலைச்சுற்று இருந்தது. வைத்தியரிடம் காட்டிய போது இரத்தப் பரிசோதனையின் போது இரத்தத்தில் கொலஸ்ரோலின் அளவு அதிகமாக இருப்பது ஊர்ஜிதமானது. சுகதேகியான ஒருவருக்கு கொலஸ்ரோல் அதிகமாக இருப்பது ஆபத்தானதா? இதனைக் குறைக்க என்ன செய்யவேண்டும்?

> இலவச மருத்துவ ஆலோசனைகளை 'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார் டாக்டர் ஜோன் பொன்னையா. நீங்கள் கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரிகள்.
>
> **இலவச மருத்துவ ஆலோசனை**
>
> I.) சுடர்ஒளி, யாழ்.அலுவலகம்,
> 361,கஸ்தூரியார் வீதி,
> யாழ்ப்பாணம்.
>
> II.) சுடர்ஒளி,
> 85,ஐயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
> கொழும்பு 14.

பதில்- வைத்தியரைச் சந்தித் தாக கூறி இருக்கிறீர்கள். உங்கள் குருதியமுக் கத்தின் அளவை பற் றிக் குறிப்பிடவில்லை. ஆனால் சுகதேகி என்ற பதத்தை உங்கள் கேள்வி கொண்டிருக்கிறது. எனவே குருதிய முக்கம் சாதாரணமானது எனக் கொள்வோம். ஆனால் கொலஸ்ரோ லின் அளவு அதிகம் என குறிப்பிட்டுள் ளீர்கள். இதனை Lieid Disorder அல்லது Hypercholesterolemia என அழைப்போம். இந்தநிலை ஆபத்தானது தான்.

குருதியில் கொலஸ்ரோலின் அளவு கூடுவதால் ஏற்படும் பிரச்சினைகள் பற்றிப் பார்ப்போம். முக்கியமாக Atherosclerosis ஏற்படக் காரணமாகிறது. தொடர்ந்து இதய நோய்கள், பாரிசவாதம், (Stroke) உயர் குருதி அமுக்கம், இறுதியில் மாரடைப்பு என்பன ஏற்பட ஏதுவாகின்றது.

கொலஸ்ரோல் அதிகம் எனக் குறிப் பிட்டுள்ளீர்கள். இவற்றில் பல வகை உண்டு.

* மொத்த கொலஸ்ரோல்- Total chole sterol.
* அதிக அடர்த்தி லிப்போ புரோட்டீன் கொலஸ்ரோல்- High Density Lipopr otein Cholesterol.
* அடர்த்தி குறைந்த லிப்போ புரோட்டீன் கொலஸ்ரோல்-Low Density Lipoprotein Cholesterol.

இது ஆபத்தான கொலஸ்ரோல் எனப்படுகிறது. இவையே முக்கியமாக கணக்கிடப்படுகின்றன. அநேகமாக மரபு வழியான காரணங்கள் கொலஸ்ரோல் குருதியில் அதிகரிப்பதில் முக்கிய பங்காற்றுகின்றன.

* Familial combined hyperlipide mia
* Familial dysbetali poprotein emia
* Familial Hypercholeslerolemia
* Familial ltyputiglyceridemia

என்பன இவற்றுள் சிலவாகும். பரம்பரை காரணிகளை விட கூடிய வேறு காரணிகளும் உண்டு. அவையாவன.

* அதிக உடல் நிறையை கொண்டிருத்தல்.
* சிலவகை மருந்துகள், குறிப்பாக குடும்பக் கட்டுப்பாட்டு மருந்துகள், சில சிறு நீருக்கிகள் மற்றும் சில மனநல மருந்துகள் போன்றவை.
* நீரிழிவு, தைரொயிட் நோய், Cushing Syndrome, சூலக வியாதிகள் மற்றும் சிறுநீரக நோய் போன்ற நோய்கள்.
* மிதமிஞ்சிய மதுசாரப் பாவனை.
* நிரம்பிய கொழுப்பமிலங்களைக் கொண்ட கொழுப்புணவுகளின் அதீத பாவனை.
* உடற்பயிற்சி இல்லாமை.
* புகைத்தல். இவை அனைத்தும் கொலஸ்ரோலைக் கூட்டக் கூடிய காரணிகளாகும்.

இவற்றில் HOL, LDL என்பவற்றின் அளவுகள் Lipoprotein ஆய்வு என் பவற்றோடு மொத்த Triglyceride அளவும் சோதிக்கப்படுகின்றன.

சிகிச்சை முக்கியமாக உங்கள் வயது, சுகநல சரிதை, புகைத்தல் பழக்கம் மற்றும் ஆபத்து காரணிகளை [illegible]யமாக வைத்துத் தீர்மானிக்கப்படுகிறது.

ஆனால் நாம் எல்லோரும் கடைப்பிடிக்க கூடிய கொஸ்ரோலை கட்டுப்படுத்தும் வழி வகைகள் உள்ளன.

எப்போதும் நார்ச்சத்து நிறைந்த காய் கறிகளை அதிகமாக உண்ணுங்கள். நிரம்பிய கொழுப்பு அமிலங்களை கொண்ட விலங்கு கொழுப்புகள், தீடீர் உணவு வகைகள் (Fast Rood) என்பவற்றை அளவோடு உண்ணுங்கள்.

தினமும் உடற்பயிற்சி செய்யுங்கள். இது உங்கள் உடலில் HDL இன் அளவை அதிகரிக்க செய்யும். உடல் நிறையை குறைத்துக் கொள்ளுங்கள். உடற்திணிவு சுட்டியை 20-22 இற்குள் பேணுங்கள்.

புகைத்தலைக் கைவிடுங்கள். புகைப்பவர் கூடும் இடங்களையும் தவிர்த்துக் கொள்ளுங்கள். ஒழுங்காக உங்கள் உடலை பரிசோதிப்பதோடு வைத்தியரின் ஆலோசனையுடன் கொலஸ்ரோல் பரிசோதனைக ளையும் மேற்கொள்ளுங்கள். வைத்தியர் மருந்து ஏதாவது சிபார்சு செய்தால் அவர் சொல்லும் வரை தொட ர்ந்து அந்த மருந்தை உட்கொள்ளுங்கள்.

எந்த ஆபத்தும் எங்களை மீறி இல்லை. எனவே விழிப்பாக இருப்போம். ஆரோக்கியத்துடன் வாழ்வோம்.



# எப்போதும் தோல் பளபளப்பாக இருக்க



தமது தோல் பளபளப்பாக இருக்க வேண்டுமென்பது பெரும்பாலான பெண்களின் விருப்பம். அதற்காகத் தத்தமது வசதிக்கேற்றவாறு, விலையுயர்ந்த, விலைகுறைந்த அழகு சாதனப் பொருள்களையும் உபயோகிக்கின்றனர். இவை உடனடிப் பலனை அளிப்பதுபோல் தோன்றினாலும் ஏதோ ஒரு வகையில் பக்க விளைவுகளை ஏற்படுத்தி வருகின்றன. எனவே இத்தகைய அழகு சாதனப் பொருள்களைத் தவிர்த்து, இயற்கை வைத்திய முறையில் நாம் அன்றாடம் உண்ணும் உணவுகள் மூலம் தோலைப் பளபளப்பாக வைத்துக் கொள்ள இயலும்.


இதற்காகத் தக்காளிப் பழச்சாற்றைப் பருகி வந்தால் நல்ல பலன் கிட்டும். தக்காளிப் பழத்திலுள்ள உயிர்ச்சத்து 'சி'மூலம் எலும்புகளிலும் திசுக்களிலும் உள்ள புரதப்பொருள் அபிவிருத்தி அடைகிறது. இதனால் தோலின் சதைப்பற்று அதிகரித்துத் தோல் பளபளப்புப் பெறுகிறது. அத்தோடு தக்காளியில் உள்ள 'லைகோபென்' என்ற பதார்த்தம் புற்றுநோயைக் கட்டுப்படுத்த வல்லது.

அதேபோன்று பருப்பு வகைகளிலும் வேர்க்கடலையிலும் உயிர்ச்சத்து 'ஈ' அதிக அளவில் காணப்படுகிறது. இந்த உயிர்ச்சத்தின் மூலம் ஆரோக்கியமான திசுக்கள் உருவாக்கப்பட்டு பராமரிக்கப்படுகின்றன. மற்றும் தாதுப்பொருள் அதிகமாக உள்ள உணவு வகைகளை உட்கொள்வதன் மூலம் தோலில் இறுக்கம் ஏற்படாமல் தோல் பாதுகாக்கப்படுகிறது.

கோப்பி, தேநீர், ஐஸ்கிறீம் முதலானவற்றை அருந்திய பின்னர் தண்ணீர் அருந்துவதால் தோலில் காய்வனவு ஏற்படுவது தடுக்கப்படுகிறது. வாரத்தில் இரண்டு நாட்களுக்கு 'கரட்' சாற்றை அருந்தி வந்தால் தோல் மென்மேலும் பொலிவு பெறும்.

# சினிமாத்துறை ஊடான அரசியல் இலாப நோக்கு





தமிழகத்தின் சட்டசபைத் தேர்தல்கள் நெருங்கி வரும் வேளையில் ஆளும் கட்சி மடியில் நெருப்பைக் கட்டிக் கொண்டிருப்பது போல் உணர்கிறது. காரணம் ஆட்சிக் கட்டிலில் வீற்றிருக்கும் கட்சி அலங்கோலமாகத் தோற்று வீழ்வது தான் தமிழக சட்டசபைத் தேர்தல்களில் வழமை. 1957ஆம் ஆண்டு முதல் முதல் 11 தேர்தல்களில் தொடர்ச்சியாக தன் தொகுதியில் வெற்றி பெற்று வந்த முதல்வர் கலைஞர் கருணாநிதிக்கு இந்த வரலாறு தெரியாததல்ல (இடையில் 1984 இல் மட்டும் மேலவை உறுப்பினராக இருந்ததால் தேர்தலில் போட்டியிடவில்லை. 1991 இல் தி.மு.க.வில் வென்ற ஒரே எம்.எல்.ஏ என்பதால் பதவியை ராஜினாமா செய்துவிட்டார்) மற்றப்படி 1984 ற்குப் பின் நடைபெற்ற சகல சட்டசபைத் தேர்தல்களிலும் ஆட்சியிலுள்ள கட்சி வீட்டுக்கு அனுப்பப்பட வேண்டுமென தமிழக மக்கள் தொடர்ச்சியாக தீர்ப் பெழுதி வந்துள்ளனர். கடைசியாக ஆட்சியிலிருந்த கட்சி சட்டசபை தேர்தலில் மீண்டும் (தொடர்ச்சியாக) வென்றது 1984 லிலேயே ஆகும். அதுவும் கூட மிக அசாதாரண சூழலில், அசகாய சூரரான மக்கள் திலகம் எம்.ஜீ.ஆர் படுத்த படுக்கையாக இருந்து ஜெயித்த தேர்தலாகும். அத்துடன் இந்திராகாந்தி கொலையுண்ட அனுதாபமும் சேர்ந்து அ.தி.மு.க - காங்கிரஸ் கூட்டணிக்கு அபார வெற்றியைத் தந்தது. அதன் பிறகு இடம்பெற்ற சகல தேர்தல்களும் ஆளும் கட்சியை மக்கள் பழிதீர்த்துக் கொள்ளும் மார்க்கமாகவே சட்டசபைத் தேர்தல் முடிவுகள் அமைந்தன. அப்படி ஆளும் கட்சியை வீட்டுக்கனுப்ப தமிழக மக்களுக்கு என்ன பைத்தியமா பிடித்திருக்கிறது? உண்மையில் அடுத்தடுத்து ஆள்பவர்களுக்குத் தான் அதிதீவிர பைத்தியம் பிடித்திருக்கிறது என்பது வரலாற்றை ஊன்றிப்படித்தால் தெரியும்.

எஸ். சுரேந்திரஜித்

**தமிழக அரசியலில் சினிமாத்துறையின் செல்வாக்கு**

சினிமாக்காரனை எல்லாம் கணக்கில் எடுத்து அவனுக்கு வாக்களித்திருக்கிறார்களே; இந்த தமிழக மக்களுக்கு என்னதான் அப்படி சினிமா மாயையோ என்று அலுத்துக் கொள்பவர்களும் நிறையவே உள்ளனர். மக்கள் என்பவர்கள் அற்புதமான தீர்ப்பாளிகள் என்பது இவர்களுக்குத் தெரியாது. உலகின் எந்தக் கொம்பனான நீதிபதியையும்விடச் சிறந்த தீர்ப்பாளிகள் ஜனநாயகத் தேர்தலில் வாக்களிக்கும் மக்களே. அதுவும் இந்திய ஜனநாயகத்திலுள்ள வாக்காளர்கள் என்றால் அவர்கள் தான் உலகின் சிறந்த தீர்ப்பாளிகள். 1991-1996 வரை ஜெயலலிதா ஆடிய ஆட்டத்துக்கு அவரை வீட்டுக்கனுப்பாமல் இருக்க முடியுமா? ஏதோ ரஜனிகாந்த் அத்தேர்தலில் தி.மு.க- த.மா.கா.வுக்கு வாக்களிக்க அறிவுறுத்தியதால் தான் ஜெயலலிதா வீழ்ந்தார் என்று கொக்கரிப்பவர்கள் பரிதாபத்துக்குரியவர்கள். ரஜனி சொன்னலென்ன விட்டாலென்ன அந்நேரம் ஜெயலலிதா வீழ்வது நிச்சயமாகி, உறுதியாகி இருந்தது. அவ்வீழ்ச்சிக்கு ரஜனி காரணமல்ல. ஜெயலலிதா காட்டிய டாம்பீகமும் ஊழலும், வளர்ப்பு மகன் திருமணத்தில் மக்கள் பணத்தை வாரி இறைத்ததும் மக்களுக்குத் தெரியாது; ரஜனி சொன்னது மட்டும் தான் மக்களுக்குத் தெரியுமா? மக்களை மாட்டு மந்தைகள்; ஒன்றும் புரியாதவர்கள் என்றே ஜெயலலிதாவும் கலைஞரும் ஆட்சிக்கு வந்த தருணங்களில் நினைத்தார்கள். அதன் பலனை அவர்கள் அனுபவிக்கவும் நேர்ந்தது.

ஆட்சிபீடமேறியதும் அமைச்சர்களின் வீட்டுக் கஜானா நிறைவது மக்களுக்குத் தெரியாததல்ல. ரவுடித்தனமும், கப்பமும், கட்டப் பஞ்சாயத்தும் மக்களுக்கு வெறுப்பேற்றுவதும் புதிதல்ல. எனவே ஆள்பவருக்கும், ஆட்சியாளரின் அட்டகாசத்துக்கும் மக்கள் தண்டனை வழங்க விழைவதும் இயல்பானதே. அவ்வேளை, சினிமா நடிகர் ஒருவர் சினிமாவில் பேசும் கதாநாயக வசனம் போல் நீதி நியாயம் பேசினால் மக்கள் அதன் பின்னால் செல்வதும் கூட இயல்பானது தான். மக்கள் வேறு எதைத் தான் செய்யமுடியும் என்கிறீர்கள்? சினிமா தமிழக அரசியலின் சாபக்கேடு என்று வசைபாடுபவர்கள் அரசியல்வாதிகளும் இந்திய ஜன நாயகத்தின் ஒற்றைச் சாபக்கேடு என்பதை ஏற்கமாட்டார்கள். இவர்களைவிட சினிமாக்காரன் எவ்வளவோமேல் என்று மக்கள் கடைசியில் முடிவு செய்து தீர்ப்பளிக்கிறார்கள். சினிமா என்பது சமூக சாபக்கேடு, குடும்ப வாழ்க்கையைக் கெடுப்பது, குழந்தைகளைச் சீரழிபபது என்ற குற்றச்சாட்டுகளை வேண்டுமானால் ஒரு பேச்சுக்காவது ஏற்கலாம். சினிமா அரசியலைச் சீரழிக்கிறது என்பது மட்டும் ஏற்கப்பட முடியாத விதண்டாவாதமே. சினிமாக்காரன் அரசியல்வாதிகளின் வாய்ப்புக்களை பிடுங்கிக்கொள்கிறான் எனப் புலம்பும் அரசியல்வாதிகள் மக்கள் உரிமையைத் தாங்கள் கபளீகரம் செய்வதை மட்டும் சரியென்று வாதிட முடியுமா?

ஆக, ஜெயலலிதாவும் கலைஞரும் ஆட்சி நடத்திய, நடத்தும் விதம் மக்களை சினிமாவை நம்புதல் என்ற படுகுழிக்குள் தள்ளுகிறது என்பதே யதார்த்தமாகும். சட்டியிலிருந்து சூடு தாங்காமல் குதித்து நெருப்பிலே வீழ்ந்தவன் கதைதான் நினைவுக்கு வருகிறது. ஆனாலும் குதிப்பதைத் தவிர வேறுவழியும் இல்லை. ஆண்டவன் தமிழகத்தைக் காப்பானாக என்று மட்டுமே சொல்ல முடிகிறது.

**எதிரும் புதிருமான கூட்டணித் தலைவர்கள்**

இதேவேளை தமிழகத்தின் தேர்தல் வாக்களிப்பு இவ்வாரம் நடக்கவுள்ள நிலையில், விழி பிதுங்கிய பயத்துடன் ஆளும் கட்சி பிரசாரம் செய்து வருகிறது. ஜெயலலிதாவும் விஜயகாந்தும் ஒரே குடையில் பிரசாரம் செய்வதை இரு கட்சித் தொண்டர்கள் விரும்பினாலும் ஜெயலலிதா விரும்பவில்லை. கோவையில் ஒரே மேடையில் இருவரும் தோன்றுவர் எனக் கட்சியினர் புரளி கிளப்பிய போதிலும் அது நிறைவேறவில்லை. விஜயகாந்துடன் ஒரே மேடையைப் பகிர்வது கௌரவக் குறைவு என்று ஜெயலலிதா நினைப்பதே இதற்குக் காரணம். தேர்தல் பிரசாரத்துக்கு முன்பே வைகோவை அகௌரவப்படுத்தினர், பிரசாரத்தின் போது விஜயகாந்தைத் தூக்கியெறிந்துள்ளார். எஞ்சியுள்ள கம்மியூனிஸ்ட்களை அவமரியாதை செய்வதை தேர்தல் முடியும் வரை ஒத்திப் போட்டிருக்கிறாராம். ஆணவம் என்பதற்கு அர்த்தம் ஜெயலலிதா என அகராதிகளில் எழுதலாம்.


ராமதாஸ், திருமாவளவன் என அவமரியாதைப் பட்டியலில் இதற்கு முன்பும் ஜெயலலிதாவால் அவமானப்படுத்தப்பட்டவர்கள் பலர். தி.மு.க.வின் ரவுடித்தனம் மக்களுக்குப் புரியாது என கலைஞர் நம்புவது போலத்தான், விஜயகாந்த், வைகோ போன்றோரை அவமரியாதைசெய்து அ.தி.மு.க அணிக்கு வாக்களிக்க நினைப்பவர்களுக்குப் புரியாது என ஜெயலலிதா நம்புகிறார். மக்கள் மாட்டுமந்தைகளல்லர். மக்கள் சக்தியைப் தேர்தல் முடிவுகள் வந்தபின் பார்ப்போம்.


இதேவேளை நடிகர் பட்டாளத்துடன் சென்று மக்களைக் கவரும் முயற்சிகளும் நடந்தே வருகின்றன. சினிமாக்காரனைக் காட்டினால் எல்லாப் பாவமும் கழுவப்பட்டுப் போகும். ஏனெனில் முட்டாள் தமிழக மக்கள் சினிமாக்காரனுக்கு தான் வாக்களிக்கிறார்களே என கலைஞரும் ஜெயலலிதாவும் தவறான முடிவுக்கு வந்திருக்கிறார்கள். பலன் தி.மு.க மேடையில் வடிவேலு, குஷ்பு தி.மு.க ஆட்சிக்கு வக்காலத்து வாங்க, அ.தி.மு.கவில் ஜெயலலிதா, விஜயகாந்துக்கு மேலதிகமாக சிங்கமுத்து, சரத்குமார் எனச் சினிமாக்காரர் பட்டியல் நீள்கிறது. ஜெயலலிதாவும் கலைஞரும் அபத்தமாக சிந்திக்கிறார்கள் என்பதற்கு இது மற்றொரு எடுத்துக்காட்டு.

தி.மு.க மேடையில் வடிவேலு, குஷ்பு தி.மு.க ஆட்சிக்கு வக்காலத்து வாங்க, அ.தி.மு.கவில் ஜெயலலிதா, விஜயகாந்துக்கு மேலதிகமாக சிங்கமுத்து, சரத்குமார் என சினிமாக்காரர் பட்டியல் நீள்கிறது. ஜெயலலிதாவும் கலைஞரும் அபத்தமாக சிந்திக்கிறார்கள் என்பதற்கு இது மற்றொரு எடுத்துக்காட்டு.

**இலவச விநியோகம் மூலம் வாக்குச் சேர்க்கும் முயற்சி**

"இலவசம்" என்ற யுக்தி இந்தியாவில் எந்தத் தேர்தலையும் விட தமிழகத்தை போட்டு ஆட்டும் ஆட்டம் இருக்கிறதே, இது நம்ப முடியாத பரிமாணங்களை எட்டியிருக்கிறது. பணப்பட்டுவாடா செய்ய அபூர்வமுறைகளை தி.மு.க.வும் காங்கிரசும் கண்டுபிடித்து வருகின்றன. இதனை மோப்பம் பிடிப்பதில் தேர்தல் ஆணையமும் சளைத்ததல்ல. மொத்தத்தில் தேர்தல் களத்தைப் பார்க்கும் மக்களுக்கும் தலையை சுற்றவைக்கும் வகையில் நிகழ்வுகள் நடந்தேறி வருகின்றன. சிலகட்சிகளுக்கு புதுமையான விதத்தில் ஆதரவும் எதிர்ப்பும் உண்டாகி உள்ளன. காங்கிரஸ் போட்டியிடும் 63 தொகுதிகளில் மட்டும் பிரசாரம் செய்யும் சினிமா இயக்குனர் சீமானின் கட்சியாருக்கு வேண்டுமானாலும் வாக்களிப்புக்கள் என மும்முரமாக களமிறங்கி இருக்கிறது. காங்கிரசை கலக்கி அடிக்கும் வகையில் வன்னி இறுதி யுத்தத்தின் கோர இறப்புச் சாட்சிகளை வண்ணமயமாக அச்சிட்டு காங்கிரசின் 63 தொகுதிகளில் விநியோகிக்கப்பட்டு வருகிறது. கடந்த லோக்சபா தேர்தலில் காங்கிரஸ் போட்டியிட்ட 16 இடங்களில் 8 இடங்களில் மட்டுமே வெல்லமுடிந்தது. அப்படி விளைவு ஏற்படுமானால் காங்கிரசுக்கு இருக்கும் 35 தொகுதிகளைவிட குறைந்த இடங்களே கிடைக்கக்கூடும். ஈழத் தமிழர் ஆதரவு பிரசாரம் தி.மு.க.வை குறிவையாது காங்கிரசை மட்டும் தாக்குவதால் ஏற்கனவே பங்கீட்டில் காங்கிரஸ் மீது கோபமுற்ற தி.மு.க. வினர் இரட்டை மகிழ்ச்சியடைந்துள்ளனர். பா.ம.கவும் இவ்வாறே நிம்மதிப் பெருமூச்சு விடுகிறது. இத்துடன் வைகோ களமிறங்காதது தி.மு.க.வுக்கு பெருத்த நிம்மதியாகும். ஆனால் இவை எல்லாம் ஆட்சிக்கெதிரான மக்கள் அலைக்கு முன் தாக்குப்பிடிக்குமா என்பது கேள்விக்குரிய விடயமே. ★





# தொடரும் கிரிக்கெட் இராஜினாமாக்கள் சங்கக்காரா தலைவர் பதவியைத் துறந்தார்

உலகக்கிண்ண இறுதிப்போட்டியில் இலங்கை கிரிக்கெட் அணி இந்திய அணியிடம் தோல்வியைத் தழுவியது முதல் நாட்டின் கிரிக்கெட துறையில் பெரும் களேபரங்கள் நடந்து வருகின்றன.

நான்கு பேரடங்கிய கிரிக்கெட் தெரிவாளர்கள் குழுவும் பதவிக்காலம் முடிவடைய ஒருமாதம் முன்னதாகவே இராஜினாமா செய்வதாக அறிவித் துள்ளது.

அணித் தலைமையிலிருந்து விலகுவதாக குமார் சங்கக்கார அறிவித்து அடுத்த புதிய தலைவர் பற்றி சிந்திக்க முன்னதாகவே தெரிவுக்குழுவும் இராஜினாமாவை அறிவித்துள்ளது.

இதற்கிடையில் இலங்கைக் கிரிக்கெட் தெரிவுக்குழுவின் தலைவர் அரவிந்த டி சில்வாவும் தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளதாகத் தெரியவருகிறது.

மஹேல ஜெயவர்த்தனாவும் கூட தன் பங்குக்கு அணியின் துணைத் தலைவர் பதவியிலிருந்து விலகுவ



தாக அறிவித்துவிட்டார்.

தாம் இப்போதே விலகிக்கொள்வதன் மூலம் புதிதாக அமைக்கப்படக்கூடிய தெரிவுக்குழு தனது பணியை மேற்கொள்ள இலகுவாக இருக்கும் என்று இலங்கை கிரிக்கெட் தெரிவுக் குழுவின் தலைவர் அரவிந்த டி சில்வாவுக்குத் தெரிவித்துள்ளார்.

# முரளிதரன் புலம்பல்

உலகக் கிண்ண இறுதியாட்டம் நடந்த நாள் எங்களுடையதாக இல்லை, இந்தத் தோல்வியால் ஒன்றுமில்லாதது போல உணர்ந்தோம் என, இலங்கை அணியின் ஓய்வுபெற்ற சுழல் ஜாம்பவான் முரளிதரன் புலம்பியுள்ளார்.

சர்வதேச டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் 1334 விக்கெட் வீழ்த்தியவர் முரளிதரன். ஐ.பி.எல்., தொடரில் கொச்சி அணியின் சார்பாகப் பங்கேற்கிறார். இதனிடையே உலகக் கிண்ணத் தோல்வி குறித்து முரளிதரன் தெரிவித்ததாவது,

இந்தியாவுக்கு எதிரான இறுதியாட்டத்தில் 274 ஓட்டங்கள் என்பது மிக நல்ல இலக்குத் தான். ஆனால் கடவுள் எல்லாவற்றையும் எமக்குக் கொடுப்பதில்லை. அன்றைய தினம் எங்களுடையதாக இருக்கவில்லை. 25ஆவது ஓவருக்குப் பின், பனி அதிகமாகப் பொழிய ஆரம்பித்துவிட்டது. இதனை நாங்கள் சற்றும் எதிர்பார்க்கவில்லை. இதனாலேயே எமது சிறப்பான பந்துவீச்சை வெளிப்படுத்த முடியவில்லை - என்றார்.



# காலிறுதியில் சானியா

'பேமிலி சேர்க்கிள் கப்' டென்னிஸ் தொடரின் பெண்கள் ஒற்றையர் பிரிவின் இரண்டாம் சுற்றில் இந்தியாவின் சானியா மிர்சா வெற்றி பெற்றார்.

'பேமிலி சேர்க்கிள் கப்' டென்னிஸ் தொடர் அமெரிக்காவின் தெற்கு கரோலினாவில் நடக்கிறது. இதன் இரண்டாவது சுற்றில் இந்தியாவின் சானியா மிர்சா, அமெரிக்காவின் வனியா கிங்யை எதிர் கொண்டார். இதில் சானியா 6-7, 6-4, 6-2 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறி உள்ளார். இவருடன் பெல்ஜியத்தின் யனினா விக்மேயர், ரஷ்யாவின் சனேலே சீப்பர்ஸ், ஜெர்மனியின் ஜூலியா ஜார்ஜ்ஸ் ஆகியோர் இரண்டாம் சுற்றில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறி உள்ளனர்.

# ஐ.சி.சி. ஒருநாள் போட்டியின் தரப்படுத்தல் முடிவுகள்

ஐ.சி.சி. ஒருநாள் போட்டி தரவரிசையில் இந்தியா 121 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திலும், இலங்கை மூன்றாம் இடத்திலும் உள்ளன.

அவுஸ்திரேலியா காலிறுதியிலேயே உலகக் கோப்பையில் இருந்து வெளியேறிய போதும் 128 புள்ளிகளுடன் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது.

இறுதி ஆட்டத்தில் தோற்ற இலங்கை அணி 118 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும், தென்னாபிரிக்கா 116 புள்ளிகளுடன் 4ஆவது இடத்திலும், இங்கிலாந்து 105 புள்ளிகளுடன் 5ஆவது இடத்திலும் உள்ளன.

பாகிஸ்தான், நியூசிலாந்து, மேற்கிந்தியத் தீவுகள், வங்கதேசம் அணிகள் முறையே 6, 7, 8, 9ஆவது இடங்களில் உள்ளன.

துடுப்பாட்ட தரவரிசையில்...

தென்னாபிரிக்காவின் ஆம்லா, டிவில்லியர்ஸ், இலங்கையின் டில்ஷான், சங்ககரா, இங்கிலாந்தின் ஜொனாதன் டிராட் ஆகியோர் முதல் 5 இடங்களில் உள்ளனர்.

இந்திய வீரர் கோலி 6ஆவது இடத்திலும், அணித் தலைவர் மகேந்திர சிங் டோனி 8ஆவது இடத்திலும், சச்சின் 9ஆவது இடத்திலும், கம்பீர் 10ஆவது இடத்திலும், யுவராஜ் 17ஆவது இடத்திலும் உள்ளனர்.


பந்து வீச்சு தரப்படுத்தலில்...

நியூசிலாந்து அணித் தலைவர் டானியல் விற்றோரி முதலிடத்திலும், ஜிம்பாப்வே வீரர் பிரைஸ் இரண்டாவது இடத்திலும், இங்கிலாந்தின் ஸ்வான் 3ஆவது இடத்திலும், தென் ஆப்பரிக்காவின் டேல் ஸ்டெயின் 4ஆவது இடத்திலும் உள்ளனர். இந்திய வீரர் ஹர்பஜன் சிங் 18ஆவது இடத்தில் உள்ளார்.

சகலதுறை ஆட்டக்காரர் தரவரிசையில்...

வங்கதேச அணித் தலைவர் ஷகிப் அல் ஹசன் முதலிடத்திலும், ஆஸ்திரேலியாவின் ஷேன் வோட்சன் இரண்டாவது இடத்திலும், பாகிஸ்தான் அணித் தலைவர் அப்ரிடி 3ஆவது இடத்திலும் உள்ளனர். இந்தியாவின் யுவராஜ் 4ஆவது இடத்தில் உள்ளார்.

# சச்சினுக்கு டோனி பாராட்டு



ஒட்டுமொத்த அணியினரும் முழுத் திறமையுடன் விளையாடியதுதான் உலகக் கிண்ண வெற்றிக்கான காரணம் என்று டோனி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சென்ற வருடம் நடந்த ஐ.பி.எல். தொடர், உலகக் கிண்ணம் ஆகியவற்றைத் தொடர்ந்து வென்றதைப் போலவே அனைத்து போட்டிகளையும் வெல்ல வேண்டும் என்பதுதான் எனது இலக்கு. கிரிக்கெட்டில் ஒருவருக்கு பாரத ரத்னா விருது வழங்கப்படும் என்றால், அதற்குச் சச்சினை விடத் தகுதியானவர் வேறு யாரும் இருக்கமுடியாது. கிரிக்கெட் விளையாட்டை எமது நாட்டில் பிரபலபடுத்தியவர், அதனை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் சென்றவரும் சச்சின் தான். அவருக்குப் பாரத ரத்னா விருது வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை நான் 200 சதவீதம் ஏற்கிறேன் - என்றார்.

# ராசி-பலன்

**10.04.2011 - 16.04.2011**




அச்சுனி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்

சொல்லாலோ, செயலாலோ மற்றவர்களை காயப்படுத்தாத நீங்கள் அன்புக்கு அடிமையாவீர்கள். நாடாளுபவர்களின் தொடர்பு கிடைக்கும். மகனுக்கு அயல் நாட்டில் உயர்கல்வி தொடர வாய்ப்பு வரும். சுக்ரன் சாதகமான வீடுகளில் செல்வதால் வெள்ளிச் சாமான்கள் வாங்குவீர்கள். சாதுக்கள் உதவுவார்கள். வேற்றுமொழி பேசுபவர்களால் ஆதாயம் உண்டு. பழைய பாக்கிகளை போராடி வசூலிப்பீர்கள். விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையால் வெற்றி பெறும் வாரமிது.



கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகினி, மிருகசீரிடம் 1,2 ஆம் பாதங்கள்

பிரதிபலன் பாராமல் உதவும் நீங்கள், அனைவரும் வாழ்வில் உயர வேண்டும் என்ற பொது நலத்துடன் சிந்திப்பீர்கள். எதிர்பாராத பணவரவு உண்டு. கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப் போவீர்கள். உடன்பிறந் தவர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவார்கள். உறவினர்கள், நண்பர்கள் சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள். புதியவர்கள் நண்பர்களாவார்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த ஒப்பந்தம் உங்களுக்குக் கிடைக்கும். புது வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள். செல்வம், செல்வாக்குக் கூடும் வாரமிது.



மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்

வித்தியாசம் பார்க்காமல் பழகும் நீங்கள், வீட்டு நலனுடன், நாட்டு வளர்ச்சி குறித்தும் அதிகம் யோசிப்பீர்கள். இழுபறியாக இருந்த வேலைகள் உடனே முடியும். பணவரவு திருப்தி தரும். பூர்வீக சொத்துப் பங்கைக் கேட்டு வாங்குவீர்கள். மகளுக்கு இருந்த கூடா நட்பு விலகும். உறவினர்கள் உங்களைப் புரிந்துக்கொள்வார்கள். உயர்கல்வியை தொடர்வீர்கள். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் அதிரடி மாற்றங்கள் நிகழும் வாரமிது.




புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்

அடிமனசில் தோன்றுவதை அப்படியே பேசும் நீங்கள், உருட்டல் மிரட்டலுக்கு அஞ்சமாட்டீர்கள். புதியவர்கள் அறிமுகமாவார்கள். எதிர்பார்த்த பணம் வரும். பழுதாகிக் கிடந்த வாகனத்தை மாற்றுவீர்கள். ம்பத்தில் மகிழ்ச்சி தங்கும். பிள்ளைகளால் சமூக அந்தஸ்து உயரும். நீண்ட நாள் பிரச்சனைக்கு தீர்வு கிடைக்கும். எதிர்பாராத பயணம் உண்டு. உறவினர்கள், நண்பர்கள் வீட்டு விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். சக ஊழியர்கள் மதிப்பார்கள். அனுபவ அறிவால் வெற்றி பெறும் வாரமிது




மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம்

புரட்சிகரமாக யோசிக்கும் நீங்கள், பிறர் மனம் புண்படும்படி பேச மாட்டீர்கள். பெரிய பதவியில் இருப்பவர்களின் உதவி கிடைக்கும். வழக்கு சாதகமா கும். குடும்பத்தில் அமைதி நில வும். உறவினர்களால் ஆதாயம்- உண்டு. பால்ய நண்பர்கள் தேடி வந்து பேசுவார்கள். சகோதரர்களிடையே சச்சரவு வந்து நீங்கும். வியாபாரத்தை விரிவுப்படுத்துவீர் கள். வேலையாட்கள், பங்குதாரர்களை பகைத்துக் கொள்ள வேண்டாம். அலுத்துக் கொள்ளாமல் உற்சாகத்தை வரவழைத்துக் கொண்டு உழைக்க வேண்டிய வாரமிது.




உத்திரம் 2,3,4 ஆம் பாதங்கள், அஸ்தம், சித்திரை 1,2 ஆம் பாதங்கள்

என்கடன் பணி செய்து கிடப்பதே என்றிருக்கும் நீங்கள், சந்தர்ப்ப சூழ்நிலைக்குத் தகுந்தாற்போல் நகைச்சுவையாகப் பேசுவீர்கள். வாராது என்றிருந்த பணம் வரும். எதிர்பார்த்த விலைக்கு பழைய மனையை விற்பீர்கள். குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். அயல்நாடு செல்ல விசா கிடைக்கும். சகோதர வகையில் மனவருத்தம் வரக்கூடும். சிலர் வீடு மாற வேண்டிய நிர்ப்பந்தம் உண்டாகும். வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்து கொள்வீர்கள். இழந்ததைப் பெறும் வாரமிது.




சித்திரை 3, 4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்

இங்கிதமான பேச்சால் மற்றவர்களின் மனதில் எளிதில் இடம் பிடிக்கும் நீங்கள் நாலும் தெரிந்தவர்கள். பிள்ளைகளின் பிடிவாதம் கட்டுப்பாட்டுக்குள் வரும். வீடு மாறுவீர்கள். வேலை தேடிக் கொண்டிருந்தவர்களுக்கு நல்ல நிறுவனத்தில் வேலை அமையும். பூர்வீகச் சொத்துப் பிரச்சனை தீரும். சகோதரிக்கு நல்ல வரன் அமையும். தாய்வழி உறவினர்கள் மதிப்பார்கள். பழைய வாகனத்தை மாற்றுவீர்கள். பங்குதாரர்களிடம் கோபப்படாதீர்கள். எங்கும், எதிலும் தன்னம்பிக்கை தேவைப்படும் வாரமிது.





விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை

மற்றவர்களின் குற்றம் குறைகளை முகத்துக்கு நேரே சுட்டிக்காட்டும் நீங்கள், தன் னைச் சுற்றி இருப்பவர்களை வழி நடத்திச் செல்வதில் வல்லவர்கள். பிள்ளைகளால் மதிப்புக் கூடும். ஆன்மிக நாட்டம் அதிகரிக் கும். விருந்தினர்களின் வருகையால் வீடு களை கட்டும். சில சமயங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட வேலைகளை இழுத்துப் போட்டு பார்க்கக் கூடும். வெளிநாட்டிலிருக்கும் உறவினர்கள் வலிய வந்து பேசுவார்கள். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகளை முறியடிப்பீர்கள். அறிவுப்பூர்வமாக செயல்படவேண்டிய வாரமிது.



மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம்

பிறர் மதிக்கும்படி நடந்து கொள்ளும் நீங்கள், பணம் காசை விட குணத்திற்கு முக்கியத்துவம் தருபவர்கள். புதியவர்கள் நண்பர்களாவார்கள். குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். பிள்ளைகளால் மரியாதைக் கூடும். உறவினர்கள், நண்பர்களின் வருகையால் வீட்டில் உற்சாகம் பொங்கும். வியாபார ரகசியங்கள் யார் மூலம் கசிகிறது என்பதை அறிந்து வேலையாட்களை மாற்றுவீர்கள். குடும்பத்தில் சந்தோஷம் நிலவும் பெரியவர்களின் ஆதரவால் வெற்றியை சுவைக் கும் வாரமிது.




உத்திராடம் 2,3,4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்

மூளை பலத்தால் மற்றவர்களை வியக்க வைக்கும் நீங்கள் அதிரடி திட்டங்கள் தீட்டுவதிலும் வல்லவர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. பணவரவு அதிகரிக்கும். நட்பு வட்டம் விரியும். சொந்தம் பந்தங்களின் சுப நிகழ்ச்சிகளில் முதல் மரியாதை கிடைக்கும். மகனுக்கு நல்ல வேலை அமையும். உத்தியோகத்தில் உங்களின் திறமையைக் கண்டு உயரதிகாரி வியப்பார். உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிட்டும் வாரமிது.




அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1,2,3 ஆம் பாதங்கள்

தன்னலமில்லாத நீங்கள் தன்னைச் சுற்றியிருப்பவர்களை சந்தோஷப்படுத்துவீர்கள். பாதை மாறி பயணம் செய்ய மாட்டீர்கள். வீடு கட்ட வங்கி உதவும். குடும்பத்தில் நிம்மதி உண்டு. குழம் பிக் கொண்டிருந்த நீங்கள் தெளிவான முடிவுகள் எடுப்பீர்கள். உடல் நலம் சீராகும். சந்தோஷம் நிலவும். மனைவிவழியில் நன்மை உண்டு. அரசு காரியங்கள் இழுபறியாகும். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத் துவது நல்லது. பட்டறி வால் பயனடையும் வாரமிது.



பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி

எந்த வேலையையும் தானே செய்தால் தான் திருப்தி அடைவீர்கள். சுயமரியாதையை எந்த சூழ்நிலையிலும் விட்டுக் கொடுக்க மாட்டீர்கள். பணம் எவ்வளவு வந்தாலும் சேமிக்க முடியாதபடி செலவுகள் துரத்தும். உறவினர்கள், நண்பர்களுடன் விரிசல்கள் வரும். வாகனத்தை இயக்கும் போது அவசரம் வேண்டாம். உடன்பிறந்தவர்கள் உங்களை தவறாகப் புரிந்துக் கொள்வார்கள். உத்தியோகத்தில் விமர்சனங்களையும் தாண்டி முன்னேறுவீர்கள். ரகசியங்களை காக்க வேண்டிய வாரமிது.

# சந்தேகத்தை தெளிவு படுத்திக் கொள்வது தவறேயல்ல!



சந்தேகத்தை தெளிவு படுத்திக்கொள்வது தவறே அல்ல!

இன்றைக்கு பல்வேறு வாழ்வியல் பிரச்சனைகளுக்கு தீர்வு காண ஜோதிடரின் ஆலோசனையை மக்கள் நாடுகின்றனர். இப்படிப்பட்ட சூழலில் ஜோதிடரிடம் கேட்கக் கூடாத கேள்வி,விஷயம் ஏதாவது இருக்கிறதா? அல்லது ஜோதிடத்தில் சொல்லக் கூடாத விஷயம் என்று ஏதாவது இருக்கிறதா? என்று பார்ப்போம்.

ஜோதிடத்தைப் பொறுத்தவரை கேட்கக் கூடாத கேள்வி அல்லது சொல்லக் கூடாத விஷயம் என்று எதுவும் கிடையாது. சாதகத்தைக் கொண்டு வருபவர் கேட்கும் கேள்விகளுக்கு அவர்களின் கிரக நிலைகளை ஆராய்ந்து உண்மையான பதிலைக் கூறுவதே ஜோதிடரின் கடமை.

பொதுவாக சாதகம் பார்க்க வருபவர்களின் மனநிலை எப்படி இருக்கும் என்பதை முதலில் கருத்தில் கொள்ள வேண்டும். சில வருத்தமான விஷயங்களை தாங்கும் மனப்பக்குவத்தை அவர் பெற்றுள்ளாரா? சந்தோஷமான செய்தியையும் அவரால் ஏற்றுக் கொள்ள முடியுமா? என்று யோசிக்க வேண்டும். அதன் பின்னரே எந்த ஒரு விஷயத்தையும் அவரிடம் கூறவேண்டும்.

ஒரு ஜோதிடரைப் பொறுத்தவரை பலன் கூறுவது என்பது வாய்ச்சொல். ஆனால் ஜாதகரைப் பொறுத்தவரை அது தலைச்சுமை என முன்னோர்கள் கூறியுள்ளனர். அதாவது ஜோதிடர்கள் பலன் கூறிவிட்டு முடித்துக் கொள்வார்கள். ஆனால் ஜாதகர் அதில் உள்ள நல்லது, தீயவைகளை மனதள வில் ஏற்று நினைவில் [தலையில்] வைத்துக் கொள்கின்றார்.

கடந்த சில வாரங்களுக்கு முன் ஒரு ஜோதிடரிடம் சென்ற தம்பதி தங்கள் குழந்தையின் ஜாதகத்திற்கு தற்போது என்ன பலன் எனக் கேட்டனர். அந்தக் குழந்தையின் [6 வயது] ஜாதகத்தை பார்த்த பின்னர் அவர்களிடம் பேசிய ஜோதிடர், இந்தக் குழந்தையால் நீங்கள் பிரிய [விவாகரத்து] நேரலாம் என்றார்.

உடனே அந்தப் பெண்ணின் கணவர், எந்தக் காரணத்திற்காக நாங்கள் பிரிய நேரிடும் எனக் கூற முடியுமா? என்று கேள்வி எழுப்பினார். அதற்கு, 'தவறாக நினைக்காதீர்கள். உங்களுக்கு மனைவி மீது சந்தேகம் உண்டு என்றார் ஜோதிடர். உடனே அவரது மனைவி கதறி அழத் தொடங்கி விட்டார்.

ஓரிரு நிமிடங்கள் ஆசுவாசப்படுத்திக் கொண்டு பேசத் துவங்கிய அந்தப் பெண், இந்தக் குழந்தை யாருக்குப் பிறந்தது எனக் கடந்த 5 ஆண்டுகளாகவே என்னிடம் கேட்டு, என்னை மனதளவில் சித்திரவதை செய்கிறார். ஒரே வீட்டில் இருந்தாலும் இருவரும் தனித்தனி மனிதர்களாகவே வாழ்கிறோம். உலகுக்கு மட்டும் நாங்கள் தம்பதிகள். வீட்டிற்குள் எதிரிகள் போல் இருக்கிறோம் என்று தன் மனதில் உள்ளவற்றைக் கொட்டிவிட்டார்.

ஜோதிட ரீதியாக ஒரு ஆணின் ஜாதகத்தில் லக்னாதிபதி அல்லது சந்திரனை குரு பார்த்தால் அவருக்கு பிறக்கும் குழந்தை அவருடையதுதான் என உறுதியாகக் கூற முடியும். இதேபோல் பூர்வ புண்ணியாதிபதியை குரு பார்த்தாலும் அந்த ஜாதகருடைய குழந்தையின் பிறப்பில் களங்கம் இருக்காது. இதுபோல் பல வகையான அமைப்புகள் மூலம் ஒரு குழந்தை அந்த ஜாதகருக்குத்தான் பிறந்தது என்று ஜோதிட ரீதியாக உறுதிபடக் கூறிவிட முடியும்.

அதுமட்டுமின்றி அந்தப் பெண்ணின் குழந்தைக்கு அந்தக் கணவர்தான் தந்தை என்பதை அவரது மனதில் பதியும்படி, சில நிகழ்வுகளைக் கூறி [குழந்தை பிறந்த பின்னர்] அதுபோன்று உங்கள் வாழ்வில் நடந்ததா? எனக் கேட்கப்பட்டபோது சிறிது தயக்கத்திற்குப் பின்னர் குறிப்பிட்ட நிகழ்வுகள் நடந்ததாக ஒப்புக் கொண்டதுடன், குழந்தையும் தன்னுடையதுதான் என்று வாய் விட்டுக் கூறினார்.

அந்த வகையில் மனதில் உள்ள சந்தேகத்தை ஜோதிடரிடம் தெளிவாகக் கூறி அதற்கான அவரது ஆலோசனையைப் பெறுவது எந்த வகையிலும் தவறானது அல்ல. ★



# வரட்டுக்கும் பார்ப்பம் புது வருஷம்

என்னைத் தெரியுதே. நான் தான் மாரிமுத்து. மடத்தடி மாரிமுத்தர். முன்னூற்று அறுபூத்தஞ்சு நாள் தான் ஒரு வருஷம் எண்டு படிச்சது ஞாபகம் இருக்கு. இந்தத் தமிழ் வருஷமும் அப்படித்தானோ என்னவோ தெரியவில்லை. ஆங்கில வருஷம், திருவள்ளுவர் வருஷம், சிங்கள வருஷம், றம்ழான் வருஷம் எண்டு வருஷங்கள் ஒவ்வொண்டும் ஒவ்வொரு நாளில வருகுது. அதுக்கெண்டு லீவும் விடுகினம். அது ஒவ்வொண்டுக்குமெண்டு வருச பலனும் எழுதி வெளியிடுகிறாங்கள். இந்த வருஷம் எப்பிடி ஓடிப்போச்சு தெண்டு தெரியவேயில்லை. ஆனா சேலை சட்டை எண்டும், வேட்டி சேட்டெண்டு வாங்கிறது என்னவோ கொண்டாட்டம் தான். ஒவ்வொரு வருஷமும் வரும்போது முதலாம் திகதி கோயில் குளம் எண்டு போய்க் கொண்டாடிய கொண்டாட்டத்துக்கு எதுவும் அர்த்தமும் இருக்கிறதாத் தெரியஇல்லை. போன வருஷம் முழுக்க இந்தப் பாழாய்ப் போவார் என்ர காணிக்குள்ள கொண்டந்து வாழையை நட்டுப் போட்டுத் தங்கட ஆட்சியெண்டு கொண்டாடினாங்கள். அதைத் தடுத்ததுக்கு வாழையை வெட்டிச் சிதைச்சுப் போட்டமெண்டு நட்டஈடு தரச்சொல்லி வழக்குப் போட்டாங்கள்.

காணியும் உறுதியும் எங்கட என்று சொல்ல வாழையும் ஆட்சியும் தங்கட எண்டு சொல்லிச் சொல்லி வழக்கிலேயே போன வருஷம் முழுவதும் போய்த் தொலைஞ்சுது . வருஷம் போனது தெரியேல்ல எண்னெண்டு தான் வருஷம் போச்சோ. அவள் மூத்தவளுக்கு வயது ஏறிக்கொண்டு போய் வடிவும் தொலைஞ்சு போகுது. போன வருஷமே எப்பிடியாவது ஒரு கலியாணத்தைப் பண்ணி வைப்பம் எண்டு, சாதகத்தைக் கொண்டோடித் திரிஞ்சு. எட்டில செவ்வாய் என்று வந்த மாப்பிள்ளையெல்லாம் தட்டுப்பட்டுப் போச்சு அத்தோடு அந்த வருஷமும் ஒரு வயதைக் கூட்டிப் போட்டு வெகுவிரைவாக ஓடிப் போட்டுது. இவன் சின்னவன் எதையோ படிச்சுப் போட்டு, வேலை தேடி அலையிறான் எண்டு ஏதோ சோதினை எழுதுறதுக்குப் போன வருஷம் தான் கடைசி வயதெண்டு ஒரு விண்ணப்பத்தை அனுப்பிப் போட்டுக் காத்திருக்க, வயசுக்கும் மேலால வேற ஏதோ காரணத்தைச் சொல்லிச் சோதனையை எழுதாமப் பண்ணிப் போட்டாங்கள். பூரணலிங்கத் தாற்ற மகள் சின்னப் பெட்டை; நல்ல வடிவு. அவள் ஒருத்தனோடை காதலெண்டு சொல்லி அவனோட கூடிக் கொண்டு போயிட்டாள். அதுக்குப் பொடிச்சி மைனர். கல்யாணம் செய்ய வயசு காணாதென்று அந்தப் பொடியனையும் பெட்டையையும் விசாரிச்சு நன்னடத்தைப் பள்ளியில் சேர்த்திட்டாங்கள். வயசைக் கூட்டி வளர்ந்த இளமையைக் குலைக்கிறார். இந்த வருஷத்தை வரவேற்கிற மடையர்களை என்ன செய்யலாம். இப்படியே வருசா வருசம் இந்த வருசம் வந்து செய்யிற கூத்துக்களோ ஆயிரம். அதையெல்லாம் விட்டுப் போட்டு வருசப் பிறப்பெண்டு சும்மா ஆட்டம் ஏன் போடுகினமெண்டு தெரியவில்லை.

> வருசா வருசம் இந்த வருசம் வந்து செய்யிற கூத்துக்களோ ஆயிரம், அதையெல்லாம் விட்டுப் போட்டு வருசப் பிறப்பெண்டு சும்மா ஆட்டம் ஏன் போடுகினமெண்டு தெரியவில்லை.

இடம் பெயர்ந்து அழிவுக்கும், அலைச்சலுக்கும் ஆளான நம்மட சனம் இன்னும் வாழ வழி தெரியாம அலையேக்கிள்ளை இந்த வருஷம் என்னையா வருசம். கட்டியிருந்த வீட்டைக் காணயில்லை. காத்துக்கும், மழைக்கும் தாக்குப் பிடிக்காத தகரத்துண்டுகளால மூடின கொட்டிலுக்கு வெய்யிலுக்கு வெந்து கிடக்குதுகள் எங்கட சனம். காடாய்ப் போன நாட்டுக்குள்ள வீடெங்க காணி எங்கே எண்டு கண்டறியத் துடிச்சுக் கலங்குதுகள்.

**மடத்தடி மாரிமுத்தர்**

மீள்குடியேற்றம், புனர்வாழ்வெண்டு தம்பட்டம் தட்டி மாலை மரியாதையோட மந்திரிமார் ஊர்வலம் போறாங்கள்.


அழிச்ச பாதையைத் திறந்து போட்டு புதுப்பாதை திறந்ததாக புலம்பல் வேற. செத்த சனம் போக இருக்கிற சனத்தை ஏமாத்துற வேலைதான் நடக்குது.

தீர்வு தீர்வெண்டு பேச்சும், பேப்பரில் செய்தியுந்தான் வந்தபடி. ஒவ்வொரு வருசமும் மாதா மாதம் அவசர கால நிலையை நீடிக்கக் கையுயர்த்திக் கொண்டு கொழும்பில ஒரு கூட்டம்.


எங்களின்ரை கஷ்டத்தை உயர்த்தினதல்லாமல் வேறு என்ன உயர்ந்தது? வருஷப் பிறப்பன்று நாட்டின் தலைவரும் மந்திரிமாரும் மக்களை வாயால் வாழ்த்தி அறிக்கை விட்டுக் கொண்டு, எங்கட வயித்தெரிச்சலைக் கூட்டிப் போட்டு ஏதோ சொல்லி ஒவ்வொரு மாதமும் பாண் விலை, பணிஸ் விலை, எண்ணெய் விலை, பெற்றோல் விலை எல்லாத்தையும் கூட்டிக் கூட்டி எங்களைப் பிச்சையெடுக்க வைக்கிறதுக்குத்தான் இந்தப் புதுவருசம் வருகுது போல கிடக்கு. அதுக்கெண்டொரு லீவு நாள். அதுக்கெனவொரு கொண்டாட்டம். வாழ்த்து. சும்மா எல்லா நாளையிலையும் நாங்கள் அனுபவிச்ச துக்கத்தையும், பஞ்சத்தையும் ஒரு நாள் மறந்து புதுவருஷம் என்று கொண்டாடிக் கூத்தடிச்சு என்ன பயன்?

சும்மா வாழ்த்திறதை விட்டுப் போட்டுச் சனங்களை வருசம் முழுவதும் வாழ வைக்கிற வழியைப் பாருங்கோவன். ஐக்கியம், ஒற்றுமை, சமாதானம், சந்தோசம் என்று வார்த்தைகளால் எங்களை அடிமைகளாக்கி வைச்சிருக்கப் பாக்கிறோம். வருஷா வருஷம் இதுதானே நடக்குது.

என்னத்தைச் சொல்லி என்ன? துக்கத்துக்கும் சந்தோஷத்துக்கும் எனக்கு அது ஒண்டுதான் இப்ப கைகொடுக்குது. கைவிஷேசம் வாங்கின கையோட அந்தப் பக்கத்தால போய்வரத்தான் வேணும். வரட்டுக்கும் பாப்பம் புதுவருஷம். ★



## சொற்சிலம்பம் - போட்டி இல: 464



அனுப்புபவர் பெயர்:..................................................

விலாசம்:...............................................................

...............................................................

கையொப்பம்:.........................................................

### மேலிருந்து கீழ்

01.அழிவு.
02.மட்டக்களப்பு மாவட்டத்தின் ஒரு இடம்.
03.மூன்று.
04.அன்னை.
05.உறுதிப் பத்திரம்/ அரசாணைப் படிவம்.
06.மத்திய இடம்.
08.ஒரு சரக்குப் பொருள்.
12.மனைவி/ இதுவும் குருவும் தலைவிதிப்படி.
13.அற்பம்/ கொஞ்சம்.
15.மேன்மை.
16.சோகம்.
17.ஆசைப்படு.
19.செல்வம்.
20.திண்மத்துக்கும் திரவத்துக்கும் இடைப்பட்ட கூழ்நிலை.
21. வாழ்.

### இடமிருந்து வலம்

01. வாதம்.
04. பயப்படாத தன்மை.
07. பண்பாடு.
09. கழித்தல் அடையாளம்.
10. பொட்டலம்.
11. அமைதிப் பேச்சு இதற்காக.
13. கூட்டல் அடையாளம்.
14. மேல் நாட்டுக் குடிவகை.
15. ஊக்கத்தைத் தூண்டுவது.
18. ஒரு தானிய வகை.
19. மரம்.
20. வறண்ட வெளிப் பிரதேசம்.
22. கசையடி கொடுப்பது இதனால்.
23. பூட்டான் தலைநகர்.

### சொற்சிலம்பம் போட்டி இல. 464

*சொற்சிலம்பம் 464 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2011 ஆண்டு ஏப்ரல் 24 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஆகியன மே 01 ஆம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப் பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.*

*முதலாவது பரிசாக ரூபா 250 உம், இரண்டாவது பரிசாக ரூபா 150 உம், மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.*

*அனுப்பவேண்டிய முகவரிகள்:*

**சுடர் ஒளி,**
**85, ஜெயந்த மல்லி மராச்சி மாவத்தை,**
**கொழும்பு-14.**

**சுடர் ஒளி யாழ். அலுவலகம்,**
**361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

### போட்டி இல. 461 இல் பரிசு பெற்றோர்

**1 ஆம் பரிசு** — **எஸ்.எழில்வேள்,** 'வசந்த பவனம்', மருதடி மேற்கு, சாவகச்சேரி.

**2 ஆம் பரிசு** — **திருமதி ச.உமாபதிசிவம்,** பரமநயினார் கோவிலடி, ஆரையம்பதி - 01

**3 ஆம் பரிசு** — **சி.சஜித்தா,** 43/1, புகையிரத நிலைய வீதி, மட்டக்களப்பு.

## சொற்சிலம்பம் போட்டி இல.461 விடைகள்

### மேலிருந்து கீழ்

01.சகவாசம் 02.பரிசல் 03.மகன் 04.திண் 05.துட்டன் 06.விசில் 09.காதலன் 11.கலியாணம் 14.பாகம்பிரி 16.சய 17.கூர்மை 18.பரண் 19.மோதல் 20.கவி 22.ரசி.

### இடமிருந்து வலம்

01.சபர்மதி 05. துவி 07.கரி 08. கண்காட்சி 10.வாசகன் 12.தடல் 13.சல்லி 14.பாலன் 15.யாசகன் 18.பணயம் 19.மோர் 20.கரம் 21.பிரதமை 23.விண் 24.பரிசில்.

### பாராட்டுப் பெறுவோர்

**(1) நி.நிரோசன்,**
சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி.

**(2) ராஜினி. புண்ணியமூர்த்தி,**
இல:36, புகையிரத வீதி, மட்டக்களப்பு.

**(3) க.காமால்தீன்,**
புன்னக்குடா வீதி, ஏறாவூர் - 3.

**(4) சி.பாமினி,**
இல.27, 5/3, உருத்திரா மாவத்தை, கொழும்பு- 06.

**(5) சி.பாலசுந்தரம்,**
கல்வளை, சண்டிலிப்பாய்.

**(6) செபமணி அல்பிறெட்,**
நவாலி தெற்கு, மானிப்பாய்.

**(7) சி.சஜீவன்,**
தாமன் தோட்டம், அல்வாய் கிழக்கு, அல்வாய்.

**(8) க.தில்லையம்பலம்,**
'விஜய வாசா', வதிரி, கரவெட்டி.

**(9) சு.சோபியா,**
தொட்டிலடி மத்தி, சண்டிலிப்பாய்.

**(10) அ.ஸ்ரீஸ்கந்தராஜா,**
15/11 புவனேஸ்வரி அம்பாள் வீதி, நல்லூர் கிழக்கு, யாழ்ப்பாணம்.




**அ.நிர்மலன்,**
**ஹட்டன்.**

**கேள்வி:** பித்தரே, உமக்குத் தங்கத்தைப் பிடிக்குமா?

**பதில்:** என்னை மிஸிஸ்ஸிடம் மாட்டிவிடப் பார்க்கும் உமது ஆசையைக் கெடுப்பானேன். எனக்கு அடுத்த வீட்டுத் தங்கத்தை ரொம்ப ரொம்பப் பிடிக்கும். சரிதானே?

**வை.அர்ச்சனா,**
**கைதடி.**

**கேள்வி:** இன்பம்; துன்பம், இவற்றில் எதிலிருந்து மனிதன் பாடம் கற்றுக் கொள்கிறான்?

**பதில்:** இன்பத்தில் மனிதன் உலகை மறந்து விடுகிறான். துன்பத்திலேயே மனிதனால் உலகைப் படிக்க முடிகிறது.

**கா.இ.இரத்தினம்,**
**கிளிநொச்சி.**

**கேள்வி:** டான்ஸ் ஆடும் பெண்ணை ஆட்டக்காரி என்று சொன்னால் முறைக்கிறாளே?

**பதில்:** ஆட்டம் இரண்டு வகை. ஒன்று நடனம். அடுத்தது மற்றையது. எதற்கும் கன்னத்தைக் காட்டிக் கொண்டு சொல்லிப்பாரும். என்ன நடக்குமென்று அப்போது புரியும்.

**அ.தெய்வேந்திரம்,**
**மன்னார்.**

**கேள்வி:** அழகில்லாத பெண்களைக் கூட சீதனத்துக்காக ஆண்கள் காதலிக்கிறார்களே?

**பதில்:** கோழி குருடு என்றாலும் குழம்பு ருசியாய் இருந்தால் சரியென்று நினைக்கிறார்களோ?

**வே.இளவரசி, கொழும்பு - 14.**

**கேள்வி:** அடங்காத மனைவியை அடக்க வழி என்ன பித்தரே?

**பதில்:** அடியைப் போல் அண்ணன் தம்பி உதவான் என்பது பழமொழி. முயற்சித்துப் பாரும்.

**ப.பகீரதன்,**
**ஓட்டுசுட்டான்.**

**கேள்வி:** பிள்ளைகள் கல்லுப்போல உயிருடன் இருக்க சில பெற்றோர் முதியோர் இல்லத்துக்குச் செல்ல நேர்வதேன் பித்தரே?

**பதில்:** தலையணை மந்திரம் அந்த அளவுக்குப் பிள்ளைகளை பேடியர்கள் ஆக்கியிருக்கும்.

**வே.இளங்கோ, மட்டக்களப்பு.**

**கேள்வி:** விதவையைத் திருமணம் செய்வது கண்ணியமானதா?

**பதில்:** கண்ணியம் மட்டுமல்ல புண்ணியமும் கூட.

**வி.பாலகிருஷ்ணன்,**
**வட்டுக்கோட்டை.**

**கேள்வி:** வாசமுள்ள மலரைப் பூந்தோட்டத்திலும் நல்ல தேனைத் தேன் கூட்டிலும் காணலாம் என்றால் நல்லொழுக்கம் உள்ள பெண்ணை எங்கே காணலாம்?

**பதில்:** ஒழுக்கமுள்ள ஆண்கள் எங்குள்ளனரோ அங்கு காணலாம். என்ன சரிதானே?

**த.பத்மசீலி,**
**குருமன்காடு, வவுனியா.**

**கேள்வி:** இளசுகளின் காதலை முதலில் கண்டுபிடிப்பவர்கள் யார் பித்தரே?

**பதில்:** அண்டை அயல்வீட்டுக்காரப் பழசுகள்தான் முதலில் கண்டுபிடிக்கிறார்கள். பிறகுதான் அது பரகசியம் ஆகிறது.

**அ.இராசலட்சுமி, தலைமன்னார்.**

**கேள்வி:** உமது மனைவிக்கு முன்னால் வாய் திறக்க உமக்குத் துணிவு இருக்கிறது பித்தரே?

**பதில்:** ஓ... தாராளமாக, ஆனால் பல் துலக்கவும், உணவு உண்ணவும் மட்டுமே.

**ம.வேணி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.**

**கேள்வி:** பித்தா, எனது கணவர் தூக்கத்தில் பேசுகிறார். அதனை எப்படி நிறுத்தலாம்?

**பதில்:** பேசட்டும்: அவரை அப்படியே விட்டுவிடுங்கள். தூக்கத்திலாவது அவர் சுதந்திரமாகப் பேசட்டுமே.

### இந்த வார ஜோக்.

இரவு 10 மணியிருக்கும். கும் இருட்டு. நெடுஞ்சாலையில் அவசர அவசரமாகச் சைக்கிளில் ஒருவர் வந்து கொண்டிருந்தார். வழியில் தடுத்த பொலீஸ்காரன் "எங்கே லைற்" என்று கேட்டு ஏசினான். வெளிச்சம் இல்லாமல் சைக்கிள் ஓட்டி வந்ததற்காக சைக்கிளை ஓட்டி வந்தவரிடம் 100 ரூபா தண்டப்பணம் கட்டுமாறு பணித்தார். சைக்கிளை ஓட்டி வந்தவர் 100 ரூபாவைப் பொலீஸ்காரரிடம் கொடுத்த கையோடு பலமாகச் சிரித்தார். அதைக் கண்ட பொலீஸ்காரன் ஆத்திரமடைந்து "ஏனடா சிரிக்கிறாய்" என்று அதட்டினான். அதற்கு அவர் சைக்கிளில் லைற் இல்லாமல் வந்ததற்காக எனக்கு 100 ரூபா தண்டம் போட்டீர்களே, எனக்குப் பின்னால் ஒருவர் சைக்கிளே இல்லாமல் இருட்டிலே வாறார், அவருக்கு எவ்வளவு தண்டப்பணம் அடிக்கப் போகிறீர்கள் என்று நினைத்தேன், சிரிப்பு வந்தது என்று சொல்லிக் கொண்டே மீண்டும் சிரித்தான்.



# மனிதம் வாழ்கிறது



சிறுகதை

**ஆ.கண்ணப்பன், கல்முனை**

மூடியிருந்த கொட்டில் கடவைக்கு முன்னால் நின்று கொண்டு அண்ணே.... ''அண்ணே'' என்று கூப்பிடுவது அன்னம்மாதான் என குரலைக் கொண்டு அனுமானித்தவராக ''ஓம் புள்ள, நான் உள்ளதான் இருக்கன். ''நாய்பூனை வருகுதெண்டு தேத்தண்ணி தந்து போட்டுப் போன கமலேசுதான் கொட்டில் கதவைச் சாத்திட்டுப்போயிருக்கு'' என்று கூறியபடி உள்ளே வருமாறு அழைத்தார் முத்தப்பு.

வளயாமீன் பொரியல், கோழிக் குளம்பு, இறால் சொதி சோறு என்பனவற்றைக் தனித்தனிப் பாத்திரங்களிலிட்டு, அவற்றைப் பக்குவமாய் மற்றுமொரு சில்வர் பாத்திரத்திலிட்டு எடுத்து வந்த அன்னம்மா ''முத்தண்ணே, என்ரை ரெண்டாவது மகள் முகுந்தாவுக்கு நடந்த கல்யாணச் சாப்பாடு கொண்டு வந்திருக்கிறன்'' என்றாள்.

அதைக் கேட்ட முத்தப்புவும், ''ஓம்புள்ள, எல்லாம் நானும் அறிஞ்சது தானே. நடந்ததையெல்லாம் மன்னிச்சுமறந்து, என்னையும் ஒரு மனிசனாக மதிச்சு, என்ர காலடியில் நீ வந்து சொல்லியும், என்னாலதான் வரமுடியாமல்போச்சு. ஒரு காலையும், ரெண்டு கண்களின் பார்வையும் இழந்து இந்த மூலைக்குள்ள ஆராவது ஆக்கிக் காய்ச்சித் தாறதத் திண்டுட்டுக் கிடக்கிற நான், என்னையும் கூட்டிக் கொண்டு போங்கோவென்று ஆருக்கும் தொல்ல குடுக்கப்படாதெண்டுதான் இப்படி ஒதுங்கியே கிடந்திட்டன்'' தனது ஆற்றாமையினைக் கொட்டித் தீர்த்த முத்தப்பு, தனது நெஞ்சில் இன்னும் முள்ளாய்க் குத்திக் கொண்டிருக்கும் பின்புலத்துக் கசந்த நினைவுகளில் மூழ்கிப் போனார்.

அன்னம்மா தூரத்து உறவுக்காரியல்ல. முத்தப்பாவின் பெரிய தந்தையின் ஒரே மகள். உடன் பிறவாத் தங்கை. முறைமச்சானுக்கு வாழ்க்கைப் பட்ட அன்னம்மாவுக்கு மூன்றும் பெண் பிள்ளைகளாகவே பிறந்தன. நாலாவது பிள்ளைக்காக அவள் கருத்தரித்தபோது, அதுவும் பெட்டையாகப் பிறந்து விடுமோ என்ற அச்சத்தில் கருவிலேயே அதைக் கலைத்துவிட்ட பாவத்திற்காகத்தானோ என்னவோ, அன்னம்மாவின் மூத்த மகள் இளம்பிள்ளைவாதந்தால் பாதிக்கப்பட்டு நடமாட முடியாதவளாகி விட்டாள். அன்றாடம் காய்ச்சியான அன்னம்மா மூன்று குமர்களையும் வைத்துக்கொண்டு பல கெடுபிடிகளுக்கு மத்தியிலே, கடல்தொழிலையே நம்பியுள்ள தனது கணவனின் மிகக் குறைந்த வருமானத்தில் குடும்பத்தின் எதிர்காலத்தை எண்ணி பல்வேறு பழுக்களால் நசிந்து கொண்டிருந்த வேதனை மிகுந்த காலப்பகுதியில்தான் அதுவரை வாழ்வளித்த கடல்தாய்க்கு அவளது கணவனும் இரையாகிப் போனான்.

துன்பதுயரங்களையும், ஏமாற்றங்களையும், வறுமைத்தீயின் சுட்டெரிப்புகளையும் வாழ்வின் பெரும் பகுதியாகக் கண்டுவிட்ட அன்னம்மா கணவனின் இழப்பினால் சோர்ந்து போய் விடவில்லை. ஏனைய தொழிலாளர்களிடமிருந்த மீன்களை வாங்கி அயலிலுள்ள பொதுச் சந்தையிலே வியாபாரம் செய்துவாழ்வினை வலிமைப்படுத்தி, சிறியதொரு கல்வீட்டையும் கட்டி முடித்துப் பிள்ளைகளுக்குத் தேவையான நகை நட்டுக்கள் மற்றும் அவசியமான பொருட்களையும் சேர்ந்திருந்தாள்.

தேவனுக்கு விருப்பமே இல்லையெனினும் தாயின் சொல்லை அவனால் தட்ட முடியவில்லை. தேவன் முணு முணுக்கும் போதெல்லாம் நம்மவர்க்கே உரித்தான "கோடி ஒரு வெள்ளை, குமரி ஒரு பிள்ளை" என்ற பழமொழியைச் சொல்லிச் சொல்லி உச்சாடனம் பண்ணி அவனை வயப்படுத்தியிருந்தாள் பூமணி.

இந்தக் கல்யாணம் நடக்காதென்று ஊகித்திருந்தும், அண்டை அயலாரின் தூண்டுதலினால் முத்தப்பாவின் ஒரே மகனான தேவனைத் தனது இரண்டாவது மகளுக்கு வரன் கேட்டுச் சென்றாள். அரச அலுவலகமொன்றில் சிற்றூழியனாகப் பணிபுரிந்த தேவனை பெரிய இடமொன்றில் கூடிய சீதனத் துடன் காசு பணமுள்ள ஒருவனாக வாழ வைத்துப்பார்க்க ஆசை கொண்டிருந்த முத்தப்பாவின் மனைவி பூமணி, அன்னம்மாவை ஏசிப்பேசி அனுப்பி விட்டாள்.

முத்தப்பாவின் மனைவி பூமணி எதிர்பார்த்திருந்ததுபோல மகன் தேவனுக்கு அயலூரிலிருந்து ஒரு பெரிய வீட்டுச் சம்பந்தம் வந்து சேர்ந்தது. பூமணியின் ஆசைகளையெல்லாம் நிறைவேற்றி வைப் பதுபோல இரு போகங்கள் செய்கை பண்ணும் நாலேக்கர் வயற்காணி, ஏழெட்டு அறைகளைக் கொண்ட கவர்ச்சியான கல்வீடு, முப்பது பவுண் தங்க நகைகள், பசு மாட்டுப் பட்டியுடன் ரொக்கமாகவும் ஐந்து இலட்சம் ரூபா காசு எனப் பூமணி எதிர்பார்த்த யாவையுமே வந்து சேர்ந்தன. மணப் பெண்ணும் ஒரு ஆசிரியை. பூமணி யின் வாழ்க்கையில் பண மழையே கொட்டியது.

இப்போதெல்லாம் படித்த பெண்களுக்கு மாப்பிள்ளை தேடுவது பெரும் சுழியோடலாய்ப் போய்விட்டது. அதுவும் உத்தியோகம் பார்க்கும் பெண்களுக்குத் தரத்திற்கேற்ற வரன் தேடுவதென்பது புதையல் எடுப்பதைவிடவும் சிரமமாய்ப் போய் விட்டது. முதற் கட்டத்தில் டொக்டர் எஞ்சினியர், எக்கவுண்டன்ட் என்று ஆழிக்கடலில் கூளர் இயந்திரப்படகில் சென்று மாப்பிள்ளைச் சுறாக்களைக் தேடுவார்கள். தோற்றுப் போனதும், வாத்தியார், கிளாக்கர், பஸ்நடத்துனர் என்று கரைவலை போட்டுச் சூரன், பாரை மீன் மாப்பிள்ளைகளைத் தேடுவார்கள். இவ்வாறான தேடல்களுக்குள் யாருமே சிக்காவிட்டால், பெண்ணுக்கு வயதும் கூடி விட, பியோன், வாட்லேபர் என்று தூண்டிலில் சிக்கிய போடத் தொடங்குவார்கள். எள்ளளவேனும் உடற்பொருத்தமில்லாத அந்த ஆசிரிய மணமகளுக்குத் தூண்டிலில் சிக்கிய மணமகன் பூமணியின் புத்திரன் தேவன்.

தேவனுக்கு விருப்பமே இல்லையெனினும் தாயின் சொல்லை அவனால் தட்டமுடியவில்லை. தேவன் முணு முணுக்கும் போதெல்லாம் நம்மவர்க்கே உரித்தான ''கோடி ஒரு வெள்ளை, குமரி ஒரு பிள்ளை'' என்ற பழமொழியைச் சொல்லிச் சொல்லி உச்சாடனம் பண்ணி அவனை வயப்படுத்தியிருந்தாள் பூமணி.

மாசி மாதம்வரும் முதல் நாளில் கல்யாணத்தை முடித்துவிடுவதென்று நாளும் குறித்தாகிவிட்டது. இம் முடிவினை மீளவும் உறுதிப்படுத்த வென்று தரகர் வந்து பேசிக் கொண்டிருந்த வேளையில்தான் ஆழிப் பேரலைகள் சீறிச் சினந்து கரைதாண்டிப் புரண்டு டெழுந்தன. என்றுமே கண்டிராத பிரளயக் காட்சி. இறை நாமத்தைக் கொச்சைப்படுத்திய ஒவ்வொருவரினதும் ஆழ் மனதிலிருந்து பூரண விசுவாசத்திலான பிரார்த்தனை நிறைகுறையின்றி வெளிப்பட, எங்குமே அவலக் குரல். தேவனின் அம்மா பூமணியும் தேவனின் வீட்டுக்குள் இருந்த நகைள், காசுபணம் மற்றும் முக்கியமான பொருட்களை எடுப்பதற்காக ஓடிய போது பாரிய சீற்றத்துடன் வந்த மற்றுமொரு பேரலையைக் கண்ட தேவனும் வீட்டுக்குள் தாயைக் காக்க உட்புகுந்தான்.

ஆழிப் பேரலைகளின் அனர்த்தத்தில் தேவன், பூமணி, அன்னம்மாவின் சப்பாணி மகள் உட்பட இருநூறு பேர்களுக்கும் மேற்பட்டோர் பலியானார்கள். முத்தப்புவும் காலையும் கண்களையும் இழந்தார். அந்தச் சுனாமி அனர்த்த நிவாரணப்பணிபுரிய வந்த ஒரு தொண்டு நிறுவனத்தில் நிர்மாணப் பொறியியலாளராகப் பணிபுரியும் அந்த இளைஞன்தான் தானாக விரும்பி வந்து இன்று அன்னம்மாவின் மகளை கையேற்றிருக்கும் மணமகன்.

அந்த இளைஞனின் பெற்றோரும் சுனாமிக்குப் பலியாகிப் போனவர்கள். சொந்த வளவிலேயே இடைத்தங்கல் கொட்டிலில் எதுவித ஆதரவுமின்றி அகதிகளாய், அனாதைகளாகி எதிர்காலம் இருள் சூழ்ந்த வேளையில், அன்னம்மாவுக்கும் அவளது இரண்டு மகள்மாருக்கும் கிட்டிய இந்த நிவாரணம் இறைவனால் கொடுக்கப்பட்டதா? மனிதத்தால் அளிக்கப்பட்டதா? சுனாமியால் வழங்கப்பட்டதா?

அழிவிலும் ஒரு ஆக்கம் என்றென்றும் இருந்து வந்திருக்கிறது. எதற்குமே முக்கியமாக இரண்டு பக்கங்களுண்டு. ஒரு பக்கத்தை மட்டும் பார்க்கும் பலர் மறு பக்கத்தைப் பார்ப்பதில்லை. கண்கள் இல்லாதிருந்தும் முத்தப்புவால் அந்த மறு பக்கத்தை காண முடிந்ததால் தான் அவருக்கு தன் மகளின் கல்யாணச் சோற்றை ஊட்டிக் கொண்டிருந்த அன்னம்மாவின் பிணிக்கட்டில் விழி நனைத்த முத்தப்பாவின் கண்ணீர் மணிகள் மனிதத்தை மணக்கச் செய்து பட்டுத் தெறிக்கின்றன. ★

**சுடர் ஒளி வாசகர்களுக்கு...**

சுடர் ஒளி வாரமலருக்கு தமது ஆக்கங்களை அனுப்பிவைக்க விரும்பும் வாசகர்கள் கீழ்க் காணும் முகவரிகளுக்கு அனுப்பிவைக்கலாம்.


**சுடர் ஒளி யாழ். அலுவலகம்,**
**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

**சுடர் ஒளி,**
**85, ஜயந்த மல்லிமாராச்சி மாவத்தை,**
**கொழும்பு - 14.**

தகுதியான ஆக்கங்கள் சுடர் ஒளி வாரமலரில் பிரசுரிக்கப்படும்.

# கண்முன்னால் அச்சுறுத்திய மரணம்

சிங்கப்பூர் நகரில் இருந்து செந்தோசா தீவைக் கண்டுகளிக்க கேபிள் கார் மூலம் பயணித்த உல்லாசப் பயணிகள் கேபிளில் ஏற்பட்ட பாதிப்புக் காரணமாக இடைநடுவில் ஆபத்தில் சிக்கிக் கொள்கின்றனர்.




அதேநேரம் மழையோடு மின்னலும் இடையிடையே பளிச்சிட்டன. அதன் பிரகாசத்தில் எதிர்நோக்கியுள்ள விபரீதங்கள் விட்டு விட்டுப் புலப்படத் தொடங்கின.

தொங்கிக் கொண்டிருந்த இன்னொரு காரில் சிறிதளவு காயங்களோடும் பலத்த அதிர்ச்சியோடும் இருந்த அமெரிக்கப்பெண்ணாண ஜீன் என்பவளும் கனடாவைச் சேர்ந்த தம்பதியர்களான ஜானும் கத்தரீனும் காரின் உலோகத் தரையில் தாறுமாறாக விழுந்து கிடந்தார்கள். ஜானின் தோளில் ஒரு சிறு எலும்பு முறிவு ஏற்பட்டிருந்ததால் அவர் வலியால் முனகிக் கொண்டிருந்தார். முகத்தில் ஏற்பட்டிருந்த காயங்களினால் கத்தரீனின் உடைமுழுவதும் இரத்தமாகக் காட்சியறித்தது.

காயங்களால் தனக்கு ஏற்பட்ட வலியைப் பொறுத்துக் கொண்ட ஜீன் மற்றையோரை ஆறுதல்படுத்த முனைந்தார். மாளவிகாவின் குடும்பத்தில் உயிர் தப்பியவர் இருந்த காரைவிடத் தங்கள் கார் அதைப்போன்ற பெரும் அபாயத்தில் சிக்கிக் கொண்டிருக்கவில்லை என்பதையும் அவள் உணர்ந்தாள் அந்தக் கார் ஒரு சிறிய கம்பியில் ஊசலாடிக் கொண்டிருந்தது. ஆனால் தங்கள் கார் கம்பியிலிருந்த பிணைப்பிலிருந்து இன்னும் விடுபடாததால் பெரும் அபாயம் உடனடியாக ஏற்பட வாய்ப்பில்லை என்பது மனதுக்கு ஆறுதலாய் இருந்தது.

500 அடிக்கு அப்பால் இணைப்பிலிருந்து இன்னும் விடுபடாமல் தொங்கிக் கொண்டிருந்த இன்னொரு காரில் நியூசீலாந்தைச் சேர்ந்த அலனும், ஸ்டீபனும் இருந்தார்கள்.

புறப்பட்டபடியே அந்தரத்தில் நின்ற இன்னொரு காரில் சிங்கப்பூர் வாசிகளான லியோங், ஹலிஜா, லோஹாக், ஹமீட் ஆகிய நால்வரும் இருந்தார்கள். இளைஞர்களான அந்த நால்வரும் தங்களை உற்சாகப்படுத்திக் கொள்ள மலேய மொழியில் சில பாடல்களைப் பாட எத்தனித்தனர். இருந்தும் பாடல் வரிகள் நினைவுக்கு வராததால் அவர்கள் முயற்சி கைகூடவில்லை. பாடலைப் பாட முயற்சித்தவர்கள் மெல்ல மெல்ல விம்மத் தொடங்கினர்.

மாளவிகாவின் காரில் இருந்தவர்கள்தான் அதிகக் காயத்தோடும் மிகவும் அபாயகரமான கட்டத்திலும் இருந்தார்கள். அங்கு இருந்த பெண்கள் அழுது அழுது களைத்து கிட்டத்தட்ட சுயநினைவை இழக்கும் நிலைக்கு வந்துவிட்டார்கள்.

நேரம் நள்ளிரவைத் தொட்டுக் கொண்டிருந்தது. மழை குறைந்து கொண்டு வந்தது. ஆனால் காற்று 8 கடல் மைல் வேகத்திலிருந்து 12 கடல் மைல் வேகத்துக்கு அதிகரித்தது. மீட்புப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த அதிகாரிகளுக்கு இப்போது மிகப்பெரிய பயம் தொற்றிக் கொண்டது. மீட்புப் பணிக்காக அமர்த்தப்பட்டிருந்த ஹெலிகொப்டர்கள் காரைநோக்கித் தாழ வேண்டும். இல்லையேல் அவர்களைக் காப்பாற்ற முடியாது. ஆனால் ஹெலிகொப்டர்கள் அப்படி இறங்கும்போது அதன் இறக்கைகளின் சுழற்சியிலிருந்து வெளிப்படும் காற்று வீசிக் கொண்டிருந்த கடற்காற்றுடன் சேர்ந்து, தொங்கிக் கொண்டிருந்த சகல கார்களையும் இணைப்பிலிருந்து விடுபடச் செய்யக்கூடும். அப்படியொரு அசம்பாவிதம் நடந்தால் ஒருவரையுமே காப்பாற்ற முடியாமல் போய்விடும்.

அதேநேரத்தில் மோதிய கப்பலின் உருக்குத் துளைபோடும் கருவி இன்னும் கேரிஸ் கார்கள் செல்லும் உருக்குக் கம்பியில் சிக்கிக் கொண்டிருந்தது. கப்பலின் சிறுஅசைவு முழு உருக்குக் கம்பிகளையும் பிணைப்போடு இழுத்துக்கொண்டு போகக்கூடும். அதுவும் மிக ஆபத்தான விளைவுகளைக் கொண்டு வரலாம். அதனால் கப்பல் அசையாத வண்ணம் கம்பி இணைப்புகளைப் பலப்படுத்தி பல படகுகள் கப்பலை அசையாத வண்ணம் பாதுகாத்துக் கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டது.

உருக்குக் கம்பிகளின் 'கிரீச் கிரீச்' என்ற உராய்வு சத்தம், சிக்கிக் கொண்டிருந்த 13 உயிர்களினதும் மரண ஓலம் போல் தொனித்தது.

மீட்புப்பணி வன்சீரோ (Rescue one zero) எனப்பெயரிடப்பட்டிருந்த அந்த மீட்பு நடவடிக்கையில் பறந்து கொண்டிருந்த ஹெலிகொப்டரை லெப்டினண்ட் காவோ யிட் சீ செலுத்திக் கொண்டிருந்தான். ( இந்த மீட்புப் பணியில் சிறப்பாகச் செயல்பட்டதற்காகப் பின்னர் அவன் கப்டனாகப் பதவி உயர்த்தப்பட்டான்.) மனிதர்கள் இருந்த கார்களை விட்டு விட்டு முதலில் காலியாக இருந்த ஒரு காரை நோக்கித் தன் ஹெலிகொப்டரை இறக்கி அதன் விளைவுகளை முதலில் அவதானித்தான். பெரிதாக ஒன்றும் நடக்காதபடியால் மெதுவாக நியூசிலந்துக்காரர்கள் இருந்த முதல் காரை நோக்கி மெல்ல ஹெலிகொப்டரைத் தாழ்த்தினான். ஹெலிகொப்டரில் இணைக்கப்பட்டிருந்த ஒரு உருக்குக் கம்பியில் 50 அடிக்குக் கீழே ஒரு பெண்டியூலம் போல் ஆடிக் கொண்டிருந்த கம்பியில் தொங்கிக் கொண்டிருந்தான் மீட்புப் பணியின் அடுத்த உறுப்பினரான லான்ஸ் கோப்ரல் புவாகிம். (பின்னர் கோப்ரலாகப் பதவி உயர்த்தப்பட்டான்) அவன் மிகவும் அபாயகரமான ஒரு முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தான். கொஞ்சம் கூடுதலாக ஹெலிகொப்டர் இறங்கினால் அவன் தொங்கிக் கொண்டிருந்த உருக்குக்கம்பி கேபிள் கார்களின் கம்பிகளில் சிக்கிக் கொள்ளும், அப்படிச் சிக்கினால் ஹெலிகொப்படரின் அசைவில் கார்களின் இணைப்புத் துண்டிக்கப்பட்டு புவாகிம் உட்பட சகலரும் உயிரிழப்பார். இருட்டு ஒரு பக்கம். சரியான இலக்குத் தெரியவில்லை. தற்செயலாக புவா கிம்மின் கம்பி கேபிள் கார் இணைப்பில் சிக்கினால் பைலட் காவோவுக்கு இரண்டு வழிகள் தான் இருந்தன. ஒன்று புவா கிம் தொங்கிக் கொண்டிருந்த கம்பியைத் துண்டித்து அவனைப் பலி கொடுப்பது. இல்லையேல் தன்னையும் சேர்த்து ஹெலிகொப்டரில் இருந்த ஐவரோடும் கீழே தொங்கிக் கொண்டிருந்த சகலரோடும் (ஹெலிகொப்டரையும் இழுத்துக் கொண்டு) கடலில் விழுந்து உயிரை விடுவது.

பேபி

இருந்தாலும் பைலட் காவோ முயற்சியைக் கைவிடவில்லை. 15 நிமிட இமாலய முயற்சிக்குப் பிறகு மெதுவாக புவா தொங்கிக் கொண்டிருந்த கம்பியைக் கீழே இறக்கி நியூசீலாந்துக்காரர்கள் சிக்கிக் கொண்டிருந்த காருக்குப் பக்கத்தில் புவாவை நகர்த்தினான். அருகில் நெருங்கியவுடன் காரின் கதவைத் திறந்து கொண்டு புவா உள்ளே குதித்தான். கையோடு கொண்டு வந்திருந்த தோலினால்ஆன ஒரு இணைப்பை இருவருக்கும் மாட்டி அந்த இணைப்பைத் தன் கம்பியோடு இணைத்து ஹெலிகொப்டருக்குச் சைகை செய்யவே மூவரும் அப்படி தூக்கப்பட்டு ஹெலிகொப்டருக்குள் விழுந் தார்கள். என்ன செய்வதென்று தெரியாமல் ஹெலிகொப்டரின் தரையை முத்தமிட்டபடியே ''நன்றி சிங்கப்பூர்'' என உரத்துக் கூறினார்கள். அவர்கள் இருவரும் உடனடியாகக் கரைக்கு கொண்டுவரப்பட்டு தயாராக இருந்த அம்புலன்சில் வைத்தியசாலைக்கு அனுப்பட்டனர்.

அடுத்ததாக இதே பாணியில் சிங்கப்பூரைச் சேர்ந்த நால்வரும் மீட்கப்பட்டார்கள். இந்த இரண்டு மீட்புப் பணிகளும் அவ்வளவு கடுமையானவையாக இருக்கவில்லை. இனித்தான் கஷ்டத்தின் எல்லையைத் தொடப் போகிறார்கள். ஆறுபேரை மீட்டாயிற்று. இனி இன்னும் ஏழு உயிர்கள் மற்ற இரண்டு கார்களிலும் சிக்கிக் கொண்டிருந்தனர். அதிலும் மாளவிகாவின் குடும்பம் இருந்த கார் மிகவும் அபாயகரமான கட்டத்தில் இருந்தது.

இந்த இரண்டையும் மீட்கும் பணி ''வண்வண்'' என்று பெயரடப்பட்டு ஆஸ்திரேலிய நாட்டின் விமானியிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. ஹெலிகொப்டருக்குக் கீழே தொங்கி உயிர்களை மீட்கும் பணி தமிழரான லான்ஸ் கோப்பரல் செல்வநாதனிடம் ஒப்படைக் கப்பட்டிருந்தது (இவன் பிறகு கோப்பரலாகப் பதவி உயர்த்தப்பட்டிருந்தப்பட்டான்) இருள் காரணமாக கேபிள்கார் வயர்கள் இணைக்கப்பட்டிருந்த கரையிலிருந்த பிரமாண்டமான கோபுரத்தை அடையாளமாக வைத்துத் தான் கார்களை நெருக்கத் திட்டமிருந்தான் விமானி லெட்ஜர். ஆனால் துரதிருஷ்டவசமாகக் கோபுரம் கண்ணிலிருந்து மறைந்துவிட்டது. என்ன செய்வதென்றே தெரியவில்லை.

அப்போது கரையிலிருந்த விமானியோடு ரேடியோ தொடர்பைப் பேணி வந்த அதிகாரிகள் செயலில் இறங்கினார்கள். *(வளரும்)*



பொதுசன நூலகம்
ஆவணத்துறை படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

# குதிரையை விஞ்சிய பசு




தெற்கு ஜேர்மனியில் குதிரைகளைப் போன்று சாகசங்கள் செய்கின்றது. இந்தப் பசு. அதன் பெயர் லூனா. லூனாவுக்கு தற்போது மூன்று வயது. 15 வயதுச் சிறுமியான ரெஜினா மேயர் என்பவரின் செல்லப் பிராணியாக வளர்க்கப்படுகின்றது.

குதிரைகளின் சாகசங்களால் பெரிதும் கவரப்பட்டு இருக்கின்றார் ரெஜினா. வீர சாகசங்கள் புரிய வல்ல குதிரை ஒன்றின் உரிமையாளராக இருக்க விரும்பினார் ரெஜினா.

ஆனால் பெற்றோர் இதற்கு அனுமதி வழங்கவில்லை. இந்நிலையில் இப்பசுவுக்கு குதிரைகளுக்கு வழங்கப்படுகின்ற சாகசப் பயிற்சிகளைச் சிறந்த பயிற்றுவிப்பாளர்கள் மூலம் முறைப்படி வழங்கினார். பல நூறு மணித்தியாலங்கள் பசுவுக்குப் பயிற்சிகள் வழங்கப்பட்டன. அவரின் இம்முயற்சி வெற்றி பெற்றது. குதிரைகள் போன்று ஓடவும், பாயவும், சவாரி செய்யவும் லீனா கற்றுக்கொண்டது. குறிப்பாகத் தடை தாண்டிப் பாய்தலில் சிறந்து விளங்குகின்றது. ஒரு மீற்றர் உயரம் வரை சர்வ சாதாரணமாகப் பாய்கின்றது.

லீனா மிகவும் புத்திசாலிப் பசு என்றும் 1.20 மீற்றர் உயரம் வரை பாயும் அளவுக்கு இவ்வருடத்துக்குள் திறமையை விருத்தி செய்து கொள்ளும் என்றும் கூறுகின்றார் ரெஜினா.

